
தமிழரசு
16-12-1982 75 காசு.
திருவள்ளுவர் ஆண்டு 2013
துந்துபி — மார்கழி 1






ஜீவா போக்குவரத்துக் கழகத் துவக்க விழா
ஈரோடு 28-11-1982



# நாட்டின் நன்மையே நமது குறிக்கோளாகட்டும்!

## மாண்புமிகு முதல்வர்

மக்களுக்கு நல்லவைகளைச் செய்ய வேண்டும். அதற்குத் தடையாக யாரும் இருக்கக் கூடாது. அப்படித் தடையாக இருப்பவர்கள் தடுக்கப்பட வேண்டும் என்பதை நான் சொல்ல வேண்டிய சந்தர்ப்பத்தை உருவாக்கிவிட்டார்கள்.

மறைந்த மாபெரும் தலைவர், தமிழர், தமிழன்பர், தியாகி, ஜாதி பேதத்திற்கு அப்பாற்பட்டவர், உணர்ச்சி வசப்படாதவர்; அண்ணா வழியில் செயல்பட்டவர்; நான் மதிக்கும்-நான் என்றும் மறவாத மனிதர் ஜீவானந்தம். அவர்களது பெயரை இந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு வைத்துள்ளோம்.

இதற்காக மற்றவர்கள் பாராட்டும்போது நான் பெருமைப்படவில்லை. எல்லோர் உள்ளத்திலும் நிறைந்துள்ள ஒருவருக்கு இது ஒரு சிறு விழாவாகும்.

நாகர்கோவிலில் அமைந்த போக்குவரத்துக் கழகத்திற்கு ஜீவாவின் பெயரை வைக்க விரும்பினோம்; ஆனால், அவரது பெயரை அங்கே வைக்க எதிர்ப்பு வந்தது. அதற்காக வேதனைப் படுகிறேன்.

ஓரிடத்தில் ஒருவர் பெயரை வைக்க முற்படும்போது, ஜாதி மற்றும் பல பிரச்சனைகள் குறுக்கிடுகின்றன.

ஜாதி ஒழிய வேண்டும் என்று சொல்கிறோம். ஆனால் எங்கிருந்தோ ஜாதிகள் வந்துவிடுகின்றன. மறைந்த நேசமணி எனக்கு எதிரியல்ல. அவரையும்தான் நான் வணங்குகிறேன், போற்றுகிறேன். இப்போது நாகர் கோவில் போக்குவரத்துக் கழகத்திற்கு அவரது பெயர் வைக்கப்பட்டு இருக்கிறது.

இங்கே ஜீவாவின் பெயர் சூட்டப்படுகிறது. எனக்கும், ஜீவாவுக்கும் தொடர்பு இருந்தது. நான் என் முதல்படமான 'சதி லீலாவதி'யில் நடிக்கும் பொழுது மறைந்த கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் ஜீவாவை எனக்கு 1933ல் அறிமுகம் செய்துவைத்தார்.

அப்போது அவர் காங்கிரசில் இருந்தார். சுயமரியாதை இயக்கத்தில் தொடர்பு கொண்டிருந்தார். அதன்பிறகு அவர் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றினார்.

இரவு பகல் என்று பாராமல் இந்தியாவின் விடுதலைக்காகத் துன்பங்களைத் தாங்கியவர்.

வெள்ளைக்கார அதிகாரிகள் ஜீவாவைத் துரத்தியபோது தப்பி ஓடினார். ஒரு குப்பை மேட்டில் அரைமணிநேரம் பதுங்கி இருந்துவிட்டு, மீண்டும் தப்பி ஓடினார்.

நான் தி.மு.கவில் இருந்தபோது பேரறிஞர் அண்ணாவின் மானத்தைக் காக்க வேண்டும் என்பதற்காக எம்.எல்.சி. பதவியை ராஜிநாமா செய்தேன்.

அப்போது ஜீவா அவர்கள் என்னைச் சந்தித்தபோது 'நீங்கள் ஏன் எம்.எல்.சி. பதவியை ராஜிநாமா செய்தீர்கள். கட்சியை விட்டு விலகப் போகிறீர்களா? என்று கேட்டார்.

'நீங்கள்கட்சியைவிட்டுவெளியே போகக்கூடாது. அப்படி வேறு எப்போதாவது கட்சியை விட்டு வெளியே போக வேண்டிய நேரம் வந்தால் எந்தக் கட்சிக்கும் போகக்கூடாது. தனி மனிதராக இருந்து செயல்படுங்கள்' என்று அறிவுரை கூறினார்.

தமிழரசு
மலர்: 13 இதழ்: 12
16-12-1982
திருவள்ளுவர் ஆண்டு 2013 துந்துபி — மார்கழி 1

போக்குவரத்துக் கழகம்

TRANSPORT CORPORATION

# ஜீவா போக்குவரத்துக் கழகம்

போக்குவரத்துக் கழகங்கள் நிருவகித்து வரும் பேருந்துகளின் எண்ணிக்கை 600-க்கு மேற்படும் பொழுது, அந்தப் போக்குவரத்துக் கழகங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும். மாவட்டந்தோறும் தனித் தனி போக்குவரத்துக் கழகங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை அரசு வகுத்துள்ளது.

அதன்படி கோவை, நீலகிரி, பெரியார் மாவட்டங்களில் 1125 பேருந்துகளுடன போக்குவரத்து வசதிகளை நல்கி வந்த சேரன் போக்குவரத்துக் கழகம், இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மறைந்த தலைவர் ஜீவா அவர்களின் பெயரில் துவக்கப்பட்டுள்ள புதிய போக்குவரத்துக் கழகம் பெரியார் மாவட்டம் ஈரோட்டைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும்.

ஜீவா போக்குவரத்துக் கழகம் பெரியார் மாவட்டம், கோவை, மதுரை, திருச்சி, சேலம், தஞ்சை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் வாழும் மக்களுக்குப் போக்குவரத்து வசதிகளை அளிக்கும்.

இந்தப் போக்குவரத்துக் கழகம் தற்பொழுது 350 பேருந்துகளுடன் தொடங்கப்பட்டுள்ளது. ஈரோடு, பவானி, கோபி, தாராபுரம், காங்கேயம், கரூர், பழனி ஆகிய இடங்களில் பணிமனைகள் உள்ளன.

இப்பொழுது ஜீவா போக்குவரத்துக் கழகத்திற்கு உள்ள நிரந்தரச் சொத்துக்களின் மதிப்பு ரூ. 250 இலட்சம்.

மையப் பணிமனை, தொழிற் பயிற்சிக் கூடம், டயர் புதுப்பிக்கும் தொழிற்சாலை போன்றவைகளை விரைவில் அமைக்கவிருக்கும் ஜீவா போக்குவரத்துக் கழகம் வரும் ஆண்டில் நம்பியூர், அந்தியூர், பள்ளிப் பாளையம், கவுந்தம்பாடி, சென்னி மலை, பெருந்துறை, கொடுமுடி ஆகிய இடங்களில் புதியதாகப் பணிமனைகளைத் தொடங்க உள்ளது இப்பொழுது ஏறத்தாழ 1950 தொழிலாளர்கள் பணிபுரிந்து வரும் ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் ஒரு நாளைய சராசரி வசூல் தொகை ரூ. 3.25 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

---

நான் கட்சியைவிட்டு விலகாமல் இருப்பதில் அவருக்கு என்ன இலாபம் என்று பார்க்கவில்லை. அப்படிப்பட்ட மனிதர் அவர். அவருடைய பெயரை இந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு வைக்கிறோம்.

நான் காலையில் திருப்பூருக்கு ஒரு திருமண விழாவிற்குச் சென்றேன்.

அங்கே சென்ற போது ஒரு சத்துணவுக் கூடத்திற்குச் சென்றேன்.

அங்கு இருக்க வேண்டிய ஓர் ஆசிரியர் அந்தப் பணியைக் கவனிக்க வரவில்லை.

ஏன் அவர் வரவில்லை என்று கேட்டேன்.

'வேலை நிறுத்தம் செய்கிறார்கள்; வரவில்லை' என்று கூறினார்கள்.

இந்த ஆண்டு டிசம்பர் 15ந் தேதிக்குள் 33,500 பேர்களை மதிய உணவுப் பணிக்காகத் தேர்ந்தெடுக்க விளம்பரம் செய்திருக்கிறோம்.

அவர்களும் மனுக்களை அனுப்பி வருகிறார்கள். மனுக்களை ஆராய்ந்து, தக்கவர்கள் தேர்ந்து எடுக்கப்படுவார்கள்.

இவர்கள் நியமனம் செய்யப்பட்டபிறகு ஆசிரியர்கள் வேலைப் பளுவைக் குறைக்க முடியும்.

கடந்த ஐந்து மாத காலமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறார்கள். தங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களைத் தாங்கி வருகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இன்னும் 15 நாள் தாங்க முடியாதா?

நல்லதை ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள், நல்ல எண்ணத்தை எப்படிக் குழந்தைகளுக்குக் கற்றுத் தர முடியும்?

ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்பார்கள்.

நல்லதைச் சொல்லித் தர வேண்டியவர்களே இப்படிச் சொன்னால் அவர்களிடம் படிக்கும் பிள்ளைகள் எப்படி மாறுவார்கள்? இதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எல்லோரும் இப்படி இருக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. ஒரு சிலர்தான் இப்படிச் செயல்பட மறுத்து வருகின்றனர்.

நான் சென்ற அந்தச் சத்துணவுக்கூட வேலைகளைக் கவனிக்க அந்த ஆசிரியருக்குப் பதில் பக்கத்தில் உள்ள ஒரு பால்வாடியில் பணியாற்றும் ஒரு தாய் வந்து கவனித்து வந்தார். தன் பணியோடு அந்தப் பள்ளிப் பணியையும் சேர்த்துக் கவனித்தார். அவரது பணியைப் பார்த்த போது எனக்குக் கண்ணீர் வந்தது. அந்த அளவுக்கு அவரது பணி இருந்தது.

நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம், வருமானம் இல்லாத நிலை, வறுமைக்கோட்டிற்குக் கீழே 50 சதவிகித மக்கள் இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் நாம் சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம்.

எத்தனை இலட்சம் ஏழைக் குடும்பத்துக் குழந்தைகள் சத்துணவு சாப்பிடுகிறார்கள் என்று பார்க்க வேண்டும். மனத்தில் மனிதத் தன்மை இருக்க வேண்டும்.

பல இலட்சம் குழந்தைகள் நலனை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த நல்ல பணியை விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர், தங்கள் கட்சித் தலைவர் சொல்லைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக மாறுபட்டுச் செயல்படுவது சரியல்ல.

இந்த நிலை வளர்ந்தால் நாட்டில் நன்மை செய்வதற்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

*[ஈரோட்டில் 28-11-1982ல் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து]*

## மக்களின் கடமை

நாட்டின் பாதுகாப்புப் படையில் சேர்ந்து பல்வேறு முனைகளில் பணியாற்றிப் புகழோடு மறைந்த ராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கும் முன்னாள் படை வீரர்களுக்கும் உதவி செய்ய பல்வேறு நல்வாழ்வுத் திட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவர்களது குடும்பத்திற்கு உதவவும், வீரத்தை நினைவு கொள்ளவும் ஆண்டுதோறும் டிசம்பர் 7-ஆம் நாள் கொடிநாள் கொண்டாடப்படுகிறது. இப்பணிக்கு மக்கள் அனைவரும் உதவுவது கடமை ஆகும்.

—மேதகு ஆளுநர் எஸ். எல். குரானா

இந்த மாபெரும் நாட்டின் பாதுகாப்புப் பணியை ஏற்று, போர்க் காலங்களில் தங்கள் இன்னுயிரையும் துரும்பென மதித்து சரித்திரத்தின் புகழ்மிக்க ஏடுகளில் தியாக வரலாறாய் என்றும் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் நமது முப்படையினரின் வீரத்தைப் பெருமையுடன் நினைவு கொள்ள ஆண்டு தோறும் டிசம்பர் 7-ஆம் தேதியன்று கொண்டாடப் படும் கொடிநாள் நமக்கு நல்ல வாய்ப்பாக அமைந்திடுவதாகும். இராணுவத்தின் பல்வேறு முனைகளில் பணியாற்றி, புகழோடு மறைந்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கும், முன்னாள் இராணுவ வீரர்களுக்கும் உதவி செய்யப் பல்வேறு சேமநல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த நடவடிக்கைகள் செவ்வனே நடைபெற *"கொடிநாள்"* அன்று நாம் வழங்கும் நன்கொடைகள் பயன்படுகின்றன.

போர்க்காலத்தில் மட்டுமின்றி அமைதி நிலவும் நேரங்களிலும் விழிப்போடு நமது எல்லைகளைக் காத்து நிற்கும் நமது படை வீரர்களின் தன்னலமற்ற தொண்டினைப் பாராட்டும் அறிகுறியாக முன்னாள் படைவீரர் சேமநல நிதிக்குக் கொடிநாள் அன்று உற்சாகத்துடன் நன்கொடையளித்து நமது கடமை உணர்வையும், நன்றி உணர்வையும் அதன் வாயிலாக உறுதிப்படுத்த வேண்டுமென பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு முதல்வர்**



கொடி நாளையொட்டி டிசம்பர் 7-ஆம் நாள் மாண்புமிகு முதல்வர் அவர்களை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கரியாலியும், முன்னாள் இராணுவ வீரர்கள் நல வாரிய இயக்குநர் மாதவன் நம்பியாரும் சந்தித்தபொழுது கொடி நாள் காணிக்கையாகத் தமது ஒரு மாதச் சம்பளத்தை முதல்வர் வழங்கினார்.

# பள்ளிகளில் பகல் உணவுத்திட்டம் தோற்றமும் வளர்ச்சியும்





**1920** நவம்பரில், அந்த ஆண்டின் எஞ்சியுள்ள நாட்களுக்கு, சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் உள்ள மாநகராட்சிப் பள்ளி மாணவர்களுக்கு, நாளொன்றுக்குத் தலைக்கு ஓர் அணாவுக்கு மேற்படாத செலவில், சோதனை அடிப்படையில் சிற்றுண்டி வழங்குவது என்று மாநகராட்சி மன்றம் தீர்மானித்தது. இந்தப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் ஏழைகளாக இருப்பதாலும், அதன் காரணமாக அவர்கள் பள்ளிக்கு வருவது குறைவாக இருப்பதாலும் (அப்போது பள்ளியில் சுமார் 165 மாணவர்களே படித்து வந்தனர்) இந்தச் சிறப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக, அப்போதைய மாநகராட்சியின் தலைவராக விளங்கிய சர்.தியாகராயர் தெரிவித்தார். இந்தச் செய்தி 1920 நவம்பர் 17ந் தேதியிட்ட 'இந்து' நாளிதழில் வெளியானது.

இதற்கு அடுத்த ஆண்டில் (1921-22ல்) இந்தத் திட்டம் மேலும் 4 பள்ளிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டது. இதன் விளைவாக இந்த ஐந்து பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை மடமடவென்று உயர்ந்தது. இந்த ஐந்து பள்ளிகளிலும் 1922-23ல் பயின்ற மாணவர்கள் எண்ணிக்கை 811. இது 1924-25ல் 1,671 ஆக உயர்ந்தது. மாணவர் எண்ணிக்கை அதிகமானதைப் போலவே செலவுத் தொகையும் 1922-23ல் ரூ.4047லிருந்து 1924-25ல் ரூ.11 ஆயிரத்துக்கு உயர்ந்தது. இதனை மாநகராட்சியின் ஆண்டு நிர்வாக அறிக்கை கூறுகிறது.

இவ்வாறு தொடக்கக் கல்விநிதியிலிருந்து மதிய உணவுத் திட்டத்திற்குச் செலவிடுவதை அரசு அங்கீகரிக்கவில்லை. இதனால் 1925 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து மாணவர்களுக்கு சிற்றுண்டி வழங்குவது நிறுத்தப்பட்டது. அதன் விளைவாக இந்த ஐந்து பள்ளிகளிலும் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும்குறைந்துவிட்டது. இதனையும் 1924-25ம் ஆண்டுக்கான மாநகராட்சியின் நிர்வாக அறிக்கை குறிப்பிட்டுள்ளது. அதே ஆண்டில் மாணவர்களின் எண்ணிக்கை 1,830லிருந்து 1,110 ஆக (அதாவது 40 சதவீதம் ) குறைந்துவிட்டது. மாநகராட்சியின் மற்றப் பள்ளிகளில் மாணவர்களின் வருகை தொடர்ந்து அதிகரித்த போதிலும், இந்தப் பள்ளிகளில் மிகவும் குறைந்துவிட்டது.

இதனால் கவலையடைந்த மாநகராட்சி உறுப்பினர்கள் பகலுணவுத் திட்டத்தை உடனடியாக மீண்டும் கொண்டுவரவேண்டுமென்று மன்றக் கூட்டத்தில் மன்றாடினார்கள் என்பதை, 1925 டிசம்பர் ''இந்து'' நாளிதழின் செய்தியிலிருந்து தெரிந்து கொள்கிறோம். திரு.வியாசராவ் என்ற அங்கத்தினர் எல்லாப் பள்ளிகளிலுமே உதவி தேவைப்படும் அனைத்து மாணவர்களுக்கும் இந்த நன்மை கிடைக்குமாறு செய்ய வேண்டுமென்று ஒரு திருத்தத்தை இந்தத் திட்டத்திற்குக் கொண்டு வந்தார். ஆனால் அதற்கு ரூபாய் 50 ஆயிரம் செலவு பிடிக்கும் என்றும், அதற்கு நிதிவசதி இல்லையென்றும் கருதப்பட்டதால், அந்த யோசனை தள்ளுபடி செய்யப்பட்டது. எனினும் குறிப்பிட்ட அந்த ஐந்து பள்ளிகளில் மட்டுமாவது குழந்தைகளுக்குச் சிற்றுண்டி வழங்குவதை, மாநகராட்சியின் பொதுநிதியிலிருந்து மீண்டும் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று மன்றம் தீர்மானித்தது. அதற்கு அரசின் ஆணை கேட்டு மாநகராட்சி கடிதம் எழுதியது. ஆணை வருவதற்குள் இந்தத் திட்டத்திற்கு 1926-27 வரவு-செலவுத் திட்டத்தில் 20 ஆயிரம் ரூபாயை மன்றம் ஒதுக்கியது. இந்தத் தகவலை 1925-26 ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை குறிப்பிடுகிறது.

எனினும் இந்த ஒதுக்கீடு பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை. அரசின் ஆணை கிடைத்ததும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதாகவும், ஒப்பந்தம் முடிவு செய்யப்படுவதற்குள், நிரந்தரக் குழு திருத்த வரவு-செலவுத் திட்டத்தில் இந்தத் திட்டத்திற்கான ஒதுக்கீட்டை நீக்கிவிட்டதாகவும், இதனால் முன். தீர்மானித்தபடி குழந்தைகளுக்குச் சிற்றுண்டி வழங்கப்பட முடியவில்லை எனவும் 1926-27க்கான நிர்வாக அறிக்கையில் இருந்து தெரிகிறது.

1927 ஏப்ரலிலிருந்து இந்தத் திட்டம் புத்துயிர் பெற்றது. 25 பள்ளிகளில் சுமார் 1,000 ஏழை மாணவர்கள் பலன் அடைந்தனர். மேற்சொன்ன ஐந்து பள்ளிகளிலும் மாணவர் வருகை மீண்டும் அதிகமானது. சென்னை மாநகரில் மேலும் பள்ளிகளைத் திறந்தும், ஏராளமான மாணவர்களுக்கு இலவசப் பகலுணவு அளித்தும் நீதிக் கட்சித் தலைவர்கள் புகழ் பெற்றார்கள்.

முதன் முதல் அரசின் முயற்சியாக, மாநிலம் முழுவதும் பள்ளிகளில் பகலுணவு வழங்கும் திட்டம், காமராசர் முதலமைச்சராக இருந்தபோது 1956ல்தான் மேற்கொள்ளப்பட்டது. எல்லா ஆரம்பப்பள்ளிகளிலும் எல்லா ஏழை மாணவர்களுக்கும் இலவச மதிய உணவு வழங்க இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கணிசமான நிதி ஒதுக்கீடு செய்ய, காமராசர் முயற்சி எடுத்துக் கொண்டார். அப்போதைய கல்வித்துறை இயக்குநராக விளங்கிய திரு நெ. து. சுந்தரவடிவேலு, ''அந்தச் சமயத்தில் மாநிலம் முழுவதும் இவ்வாறு இலவச மதிய உணவு வழங்க எண்ணிய ஒரே மாநிலம் தமிழ்நாடு ஒன்றுதான்'' என்கிறார். இத்திட்டத்தின் ஆரம்பமாக, 1,300 பள்ளிகளில் சுமார் 65 ஆயிரம் ஏழைக் குழந்தைகளுக்கு ஆண்டில் 200 நாட்கள் இலவச மதிய உணவு வழங்க 1956-57ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டது. அரசின் செலவு ஒரு மாணவனுக்கு 1½ அணா. மீதி செலவை உள்ளூர் மக்கள் ஏற்றுக் கொண்டனர். பின்னர் இத்திட்டம் மாநிலத்தின் எல்லாப் பள்ளிகளுக்கும் படிப்படியே விஸ்தரிக்கப்பட்டது.

—நன்றி : ''இந்து'' 7.12.1982

பாரதியார் நூற்றாண்டு நிறைவு விழா



# உலக மகாகவி

**பா**ரதியார் 1906-ல் தான் புதுச்சேரிக்கு வந்தார். இன்னும் வ. வெ. சு. ஐயர், திருவல்லிக் கேணி சீனுவாச ஆச்சாரியார், அரவிந்த கோஷ் முதலியோரும் வந்தனர். இவர்களுக்கெல்லாம் சுதேசிகள் என்று பாண்டியில் பெயர்.

அரவிந்தர் - வ. ரா. முதலியோர் ஒரு குழு.

வ. வெ. சு. ஐயர் முதலியோர் ஒரு குழு.

பாரதி நான் முதலியோர் ஒரு குழு.

சீனுவாசாச்சாரியார் எதிலும் இருப்பார்.

மூன்று குழுக்களும் வெவ்வேறாக இருந்தன.

அரவிந்தர் முதலியோர் தமிழென்று ஒரு மொழி இருப்பதையோ, அதைப் பற்றி நினைப்பதையோ அறியாதார்.

வ. வெ. சு. ஐயர் வர்ணாஸ்ரமம் உண்டு என்றால் தமிழைப் போற்றத் தயார்.

பாரதியார் தமிழிலேயே வாழ்ந்தார். அன்றைய நிலை அப்படி. பாரதியார் பார்ப்பனராக இருந்தாலும் தமிழைப் போற்றினார். காரணம், அவர் தமிழ்ப் புலவரின் மகன் என்பது தான். பாரதியார் முதலில் பாட ஆரம்பித்தது காவடிச்சிந்துதான். புரியும்படி காவடிச் சிந்து அமைவதே காரணம்.

அரவிந்தர் ஆங்கிலத்தில் - 'ASIA' பத்திரிகை ஆரம்பித்தார். ஆனால் பாரதியாரோ தமிழில் ''இந்தியா'' பத்திரிகை ஆரம்பித்தார். தமிழை பாரதி இப்படிப் போற்றினார்.

இங்கே எனக்கு முன் பேசிய விவேகானந்தா கல்லூரி தமிழ்ப் பேராசிரியர். மா. ராசமாணிக்கம் அவர்கள் என்னை பாரதியாரைப் பற்றி ''நான் கண்ட பாரதி'' என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதும்படி கேட்டார். இதேபோல் முன்பே தினசரி ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கமும் கேட்டார். நான் எழுதிக் கொண்டுதான் இருக்கிறேன். அது ஆயிரம் பக்கங்கள் வரும்.

பாரதியார் தமிழ்ப்பற்றுடையவர், தமிழுக்கு உயிர் உண்டாக்கினார். எல்லோருக்கும் புரியும்படி எழுதினார், பாடினார். அதற்குப் பிறகுதான், அரவிந்த கோசுக்குத் தமிழ் என்று ஒன்று இருப்பதாகப் புரிந்தது. வ. ரா. முதலானோர் தமிழ்ப் புத்தகங்களைத் தேடிப் படித்தனர்.

**பாரதியாருடைய முக்கிய கொள்கை ஜாதி ஒழிப்பு, அதுதான் அவரிடம் இருந்த சிறந்த கொள்கை, குறிப்பிட்டுப் பேச வேண்டிய கொள்கை.**

பாரதியார் பார்ப்பனர். தெரிந்தும் சொன்னார் 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்று. தமிழில் நல்ல எளிய தமிழில் எல்லோருக்கும் புரியும்படி இதைச் சொன்னார். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. சந்தோஷம்கூட.

நான் அப்பொழுது பாண்டிச்சேரியில் வாத்தியார் வேலையில் இருந்தேன். அப்போதே சில பத்திரிகைகளில் கட்டுரைகளும், பாட்டுகளும் எழுதி அனுப்புவது வழக்கம். அப்போது நான் உத்தியோகத்தில் இருந்து கொண்டு இக்காரியம் செய்வது உத்யோகத்திற்குத் தொல்லை தரும். யாராவது செய்வார்கள் என்று கருதி நான் ஓர் புனை பெயர் வைத்துக் கொள்ள விரும்பினேன். அப்போது என் கண்முன்னே 'சூத்திரனுக்கு ஒரு நீதி, தண்டச் சோற்றுப் பார்ப்புக்கு ஒரு நீதி'' என்று கேட்ட பாரதியார், பார்ப்பனனாய் இருந்தும் பயப்படாது, தீமை வருமென்று



பாவேந்தர் பாரதிதாசன்

தெரிந்திருந்தும் திகைக்காது, தமிழில் புரியும்படி சொல்லிய பாரதியார்தான் நின்றார். உடனே பாரதிதாசன் என்று புனை பெயர் வைத்துக் கொண்டேன். நான் அவருக்கு, அந்த புண்ணிய வானுக்கு-தன் குலத்தார்' எதிர்ப்பையும் பொருட்படுத்தாத புண்ணியவான் பாரதிக்குத் தாசனாக இருப்பதில் ஒன்றும் தவறில்லை, என்று கருதுகிறேன்.

அவர் ஈசுவரன் கோயில் தெருவில் குடியிருந்தார். அப்போது அவர் மகளுக்குக் காய்ச்சல் வந்தது; டாக்டர் அம்பு வந்தார். விஷக்காய்ச்சல் என்று கூறினார். அவர்கள் வீட்டில் ஒரு கேணி இருந்தது. அதைப் பார்த்தார். அதில் சூரிய ஒளி படவில்லை என்றார். வேறு வீடு வேண்டும். என்ன செய்வது? என்ன நடந்தது என நினைக்கிறீர்கள்? சுமார் ஒன்றரை மணி நேரத்திற்குள்ளாகவே அவர் வீட்டுக்கு எதிர் வீட்டில் குடியிருந்தவர்கள் காலி செய்யப்பட்டு, பாரதியார் குடும்பத்தோடு குடியேறினார், எப்படி முடிந்தது? யார் வீடு அது தெரியுமா?

பெத்தாச்சி செட்டியார் வீடு அது. அவருக்கு பாரதியார் அளித்த பெயர் விளக்கெண்ணெய்ச் செட்டியார் என்பது, அதில் குடியிருந்தவர் ஒரு சி.ஐ.டி.

அப்படிப்பட்ட செட்டியாரிடம், (செட்டியார் பண விஷயத்தில் மகா கண்டிப்புக்காரர்) முன்பணம் கட்டி, அங்கிருந்த சி. ஐ. டி. அவர்களை காலி செய்து குடியேற்றினோம். யார்? நானும் என்போன்ற தோழர்களும்.

எப்படி? எங்களுக்கு இருந்த எண்ணமெல்லாம், பாரதி வருத்தப்படக் கூடாது. அவர் மகளுக்குக் காய்ச்சல்; கேணி நல்லதல்ல, வீடு மாற்ற வேண்டும் உடனே சென்றோம். காலி செய்யச் சொன்னோம். பயந்தே காலி செய்தனர்.

அவர் சுதேசமித்திரன் பத்திரிகையில் வேலை பார்த்தபோது, வெளிநாட்டு விஷயங்களை மிக நன்றாக மொழி பெயர்த்தார். சைனாவுக்குப் பக்கத்திலே ஒரு தீவு பற்றிய செய்தி வெளிவந்தால் அது எங்குள்ளது என்பது பற்றிய குறிப்பு பிராக்கட்டுக்குள் 'அடைப்புக் குறிக்குள்' அடங்கியிருக்கும். இது தற்காலத்து உதவி ஆசிரியர்கள் அறிய வேண்டிய செய்தி.

தமிழில் புதுமுறையில் மக்களுக்குப் புரியும்படி நூல் எழுதியவர் பாரதியார்தான். அதற்கு முன் புலவர்கள் ஒரே பொருள் பற்றிப் பல நூல்கள், ஒரே முறையில் எழுதுவார்கள்.

கலம்பகம் என்றால், திருவருணைக் கலம்பகம், புதுவைக் கலம்பகம் என்று போகும். அடுத்தாற்போல் அந்தாதி என்று பல நூல்கள். மற்றும் அம்மானைகள் இப்படித்தான். புதுமுறையோ, புதுப் பொருள் பற்றிய நூல்களோ கிடையாது. தைரியமில்லை. இந்த வழியில் புதுமுறைக்கு எடுத்துக் காட்டு சிந்து. இதில் அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்து பாரதியாரை மிகவும் கவர்ந்தது.

அக்காலத்தில் தமிழைப்பற்றி மக்கள் மிகக் கேவலமாக நினைத்தனர். ஒருவர் ஒன்று கூறிவிட்டால் அதை மறுப்பது கூடாது. புதிய துறையில் பாரதியைப் பின்பற்றுங்கள்; பாரதியார் சுதேசமித்திரனுக்கு பாண்டியிலிருந்து ஒரு நாள் கவிதையும், ஒருநாள் கட்டுரையும் எழுதுவார். திடீரென்று அவர்கள் 'கவிதை வேண்டாம். கட்டுரையே போதும்' என்பார்கள்.

அப்போது, தென்னாட்டுக்கு 'டாக்டர். கசின்ஸ் என்று ஒருவர் வந்தார். அவர் பாரதியார்சிறந்த கவிஞர் என்று கேள்விப்பட்டு, அவருக்குக் கடிதம் எழுதி அவர் கவிகளை அனுப்பும்படியும், அதைத் தாம் அவர் கருத்துக் குலையாமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடுவதாகவும் எழுதியிருந்தார். அத்துடன் அவர், தான்தான் வங்கக்கவி ரவீந்திரநாத் தாகூரின் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் என்றும் கூறினார். அதனால் பாரதியும் "வேண்டுமடி எப்போதும் விடுதலை அம்மா, வேண்டுமடி எப்போதும் விடுதலை"என்ற பாட்டை எழுதி அனுப்பினார். இது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, அக்காலத்தில் 'New India' பத்திரிகையில் வெளிவந்தது. இம்மாதிரி இரண்டு மூன்று தடவை வந்ததும், சுதேசமித்திரன் பழையபடி கவிதை கேட்டது. அப்போது பாரதியார் சொன்னார் ''தமிழன் கவிதையைப் பிறநாட்டான் புகழ வேண்டும். அப்போதுதான் அதனைத் தமிழர் உணர்கிறார்கள்'' என்று.

பாண்டியிலே பாரதியார் பலரும் பார்க்க வேண்டும் என்றே கடைவீதி நடுவே முஸ்லீம் கடையில் தேநீர் வாங்கி அருந்திடுவார். அவர் ஒரு சமயம், ''என்ன சுப்புரத்தினம்! என் பெண் வேறு ஒரு தாழ்ந்த ஜாதியானோடு ரங்கூனுக்கு ஓடிப்போய் அங்கிருந்து எனக்கு ''அப்பா நான் இன்னாரோடு இங்கு சுகமாயிருக்கிறேன்; அவரைத்தான் நான் விரும்புகிறேன். மணம் செய்து கொள்ளப் போகிறேன்'' என்று எழுத வேண்டும்; அதைக் கேட்டு நான் ஆனந்தப்பட வேண்டும்'' என்றார். அவர் ஜாதி ஒழிப்பில் எவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டார் என்பதற்கு இது நல்ல எடுத்துக் காட்டு.

அவரை மட்டக்கவி என்பதைக் கண்டித்து நான் கவிதா மண்டலத்தில் 'பாரதி உலககவி தானப்பா' என்று தீட்டினேன். அது எனது கவிதைகள் இரண்டாம் பகுதியில், வெளியிடப்பட்டிருக்கிறது. கண்டு கொள்க.

அவரது ஜாதி ஒழிப்புக் கொள்கை தலைசிறந்தது. குறிப்பிட்ட எவரும் கூறாத நேரத்தில் தைரியமாக எளிய தமிழில் சொன்னார். அதைப் பின்பற்றுவோமாக!

**சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 6.9.1949-ல் நடைபெற்ற விழாவில் தலைமை ஏற்று ஆற்றிய உரையிலிருந்து ..)**

**பேரறிஞர் அண்ணாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த மாலைமணி நாளேட்டில் 8.9.1949ல் வெளிவந்தது.**

**தொகுத்து அனுப்பியவர்**
**பொன். கு. கோகண்டபாணி**

## தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தத்துவ நிறுவனம்

**தமிழக அரசின் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் தத்துவ நிறுவனத்திற்கு 15 இலட்சம் ரூபாயில் அறக்கட்டளை நிறுவியுள்ளது. இதன்மூலம் சைவசித்தாந்தம், வைணவ சித்தாந்தம், வேத இந்துமதம் ஆகிய மூன்று துறைகளுக்கு ஆராய்ச்சி அறிஞர்கள் நியமிக்கப்படுவர்.**

**புத்த-சைன மதங்களுக்கு அவற்றுக்குரிய நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு மானியம் பெறத் தமிழ்ப் பல்கலைக் கழகம் முயன்று வருகிறது. மானியம் கிடைத்ததும் இஸ்லாம் மதத்திற்கும், கிறிஸ்துவ மதத்திற்கும்பேராசிரியர்கள் நியமிக்கப்படுவர்.**

# 10 நாடுகளில்..

# 60 நாட்கள்

அமெரிக்கா நாட்டுக்குப் பக்கத்தில் உள்ள பகாமஸ் என்ற குட்டித் தீவு நாட்டில் ''காமன்வெல்த் பாராளுமன்றச் சங்கங்களின் மாநாடு'' நடந்தது. அதில் கலந்து கொள்வதற்காக இந்தியாவில் இருந்து 27 பேர் போனதில் நானும், சட்டப் பேரவைச் செய லாளர் திரு கி.மு. அழகர்சாமி அவர்களும் போனோம். சென்னையிலிருந்து செப்டம்பர் 21ந் தேதி பயணமான நாங்கள் 20.11.83 அன்று தாயகம் திரும்பினோம். இத்தாலி தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா ஆகிய 10 நாடுகளுக்குப் போய்வந்தோம். அங்குள்ள நாடாளுமன்ற அலுவலர்களுடன் கலந்து உரையாடினோம்.

**புதிய தொழில் துவங்க வாருங்கள்:**

தமிழகச் சட்டமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்பட இருக்கிறது. அந்தக் கட்டடத்தைச் சுற்றி என்னென்ன வசதிகள், எப்படிப்பட்ட அமைப்புகள் இருக்க வேண்டும் என்பதையெல்லாம் தெரிந்து கொள்வதற்காகப் பல்வேறு நாடுகளின் நாடாளுமன்றக் கட்டடங்களின் வரைபடங்களை (பிளான்களை) வசதிவிவரங்களைச்சேகரித்து வந்துள்ளேன். அவைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்க இருக்கிறேன். மேலும் ஆங்காங்கே உள்ள தமிழ்ச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாட்டில் இருந்து வெளிநாடுகளில் பணியாற்றிவரும் டாக்டர்கள், பொறியாளர்கள் போன்றவர்களையும் சந்தித்துப் பேசினேன். அவர்கள் அனைவரும் தங்கள் சேமிப்புப் பணத்தைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பி, புதிய தொழிற்சாலைகள் தொடங்க உதவும்படியும், விஞ்ஞானக் கருத்துக்கள் உள்ள புத்தகங்களை மொழிபெயர்த்து தமிழகச் சிறுவர்கள் படிப்பதற்கு வசதியாக தமிழ்நாட்டுக்கே அனுப்பும் படியும் கேட்டுக் கொண்டேன். அங்குள்ள நூல் நிலையங்கள் என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளன.

**தன்னிறைவுத் திட்டத்திற்குப் பாராட்டு!**

அங்குள்ள தமிழ் மக்கள் என்னிடம் விவரங்களைக் கேட்கும்போது இங்கு மாண்புமிகு முதல் அமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியில் கிராமமக்கள் செழிப்படைந்து முன்னேறுவதற்காக நடத்தப்படும் 'தன்னிறைவுத் திட்டம்' ''முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்'' ஆகியவை சிறப்பாகச் செயல் படுத்தப்படுவதை எடுத்து சொன்னேன். அவர்கள் பாராட்டினார்கள்.



மாண்புமிகு திரு க.இராசாராம் அவர்கள் மலேசியப் பிரதமர் மாண்புமிகு திரு மகதிர் முகமது அவர்களுடன்

**நிதியுதவி தாரீர்!**

சென்னைப் பல்கலைக்கழகத்தின் 125-வது ஆண்டு விழாவையொட்டி சென்னைப் பல்கலைக் கழகத்தில் புதிய நவீன விஞ்ஞான பாடங்கள் கற்றுக் கொடுப்பதற்காக 2 கோடி ரூபாய் செலவிட இருப்பதால் அதன் தலைவர் என்ற முறையில் நான் அதற்குப் பெருமளவு பண உதவி செய்யும்படி, சிங்கப்பூர், மலேசியா தமிழர்களிடம் கேட்டுக் கொண்டேன். அவர்கள், தங்கள் குழந்தைகள் தமிழ்நாட்டில் உள்ள மருத்துவ, பொறியாளர்கள் கல்லூரியில் படிப்பதற்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் சொன்னார்கள். அதற்கு வசதியாக, தமிழ்நாட்டில் தனி நபர் மூலம் மருத்துவ பொறியியல் கல்லூரிகளை ஆரம்பித்து அந்த

தொகுப்பு : ஆனந்தன்

முறையில் நூற்றுக்கணக்கான மலேசியாசிங்கப்பூர் தமிழர்களுக்கு இடம் கொடுக்க முடியும் என்பது எனது சொந்தக் கருத்தாகும்.

### புதியதோர் உலகம் செய்வோம்!

இந்தியாவில் சாணம் போன்ற கால்நடைகளின் கழிவுப் பொருள்களைக் கொண்டு எரிவாயு தயாரிக்கப்பட்டு, விளக்கு எரிப்பதற்கு, சமையல் அடுப்புக்கு பயன்படுத்துவது குறித்து கென்யா நாட்டு மக்கள் மிகுந்த ஆர்வத்தோடு விசாரித்தனர். குறைந்த செலவில் மாற்று எரிபொருளாக இதனைப் பயன்படுத்துவதற்குச் செய்யப்பட்டுள்ள கண்டுபிடிப்புக்களைத்தான் விளக்கினேன். இரண்டாயிரம் ஆண்டில் உலகம் எப்படி இருக்கும் மனிதன் எப்படியெல்லாம் வாழ்வான் என்பதைச் சித்திரிப்பதாக புதிய உலகம் உருவாகியுள்ளதை ஆனலூலூ நகரில் காணமுடிந்தது.

### வெளிநாட்டில் சுற்றுலாப் பயணிகளை எப்படிக் கவருகிறார்கள்!

'மியாமி' போன்றஉல்லாசக் கடற்கரைப் பகுதிகளுக்கு நான் சென்று பார்த்தேன். நீண்ட கடற்கரைப் பரப்பைக் கொண்ட தமிழகத்திலும் இந்தியாவின் பிற பகுதிகளிலும் வெளிநாட்டுச்சுற்றுலாப்பயணிகளைக் கவரத் தக்க வகையில் பல சிறப்பான திட்டங்களை மேற்கொள்ளலாம் கடல், சூரியன், மணல் பரப்பு ஆகிய மூன்றைக் கொண்டு மட்டுமே மேற்கத்திய நாடுகளிலுள்ள சுற்றுலாத் தலங்கள் அன்னியச் செலாவணியை ஈட்டி வருகின்றன.

### தமிழகத்திலேயே புதிய சட்டப்பேரவைக் கட்டடம்

நான் சென்ற பல்வேறு நாடுகளின் நாடாளுமன்ற கட்டடங்களைப் பார்த்து வந்தேன். அவற்றின் வரை படங்களை வாங்கியும் வந்துள்ளேன். தமிழகத்தில் புதிதாக நிர்மாணிக்க இருக்கும் சட்டப் பேரவை புதிய கட்டடம் நல்ல முறையில் கட்டப்படும். அப்படிக்கட்டப்படும்போது நமது நாட்டுச் சிற்பக் கலைக்கு ஏற்பவும் வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள வசதிகளைப் போன்றவையுமானதாகச் சட்டப் பேரவைக் கட்டடம் அமைவதற்கு எங்களது வெளிநாட்டுப் பயணம் பயன்படுவதாக இருந்தது.

எங்களுடைய தீபாவளியைச் சிறப்பாக, கோலாலம்பூரில் மாண்புமிகு அமைச்சர் சாமிவேலு அவர்கள் வீட்டில் கொண்டாடினோம். அங்கு மதப் பண்டிகைகளை நூதனமான முறையில் கொண்டாடுகிறார்கள். இந்துக்கள், முஸ்லீம்கள், சீனர்கள், கிறிஸ்தவர்கள் என்று ஒவ்வொருவரும் தனித்தனியாக மத விழாக்களை நடத்துவதைப் பார்த்த முந்தைய மாண்புமிகு மலேசியா பிரதமர் துங்குஅப்துல் ரஹ்மான் ஒரு புதிய ஏற்பாட்டைக் கொண்டு வந்தார். அதன்படி ஒவ்வொருவரும் மத விழாக்களைத் தங்கள் வீட்டில் கொண்டாடும் போது, எல்லா மதத்தினரையும் தங்கள் வீட்டிற்கு வரவழைத்து, இனிப்புகள் விருந்துகளைக் கொடுத்து உபசரிக்க வேண்டும். அந்த ''விருந்து வீடு'' முறையை (Open House) இப்பொழுது அங்கு எல்லோரும் கடைப்பிடிக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு சாமிவேலு அவர்கள் வீட்டில் தீபாவளி அன்று விருந்து வீடாக இருந்தது. பலவகை இனிப்புகள், தின்பண்டங்கள் பெருமளவில் வழங்கப்பட்டன. அந்த நாட்டுப் பிரதமர் மாண்புமிகு மகதீர் முகமது அவர்களும், அமைச்சர் வீட்டுக்கு வந்துவிருந்து சாப்பிட்டு, வாழ்த்திச் சென்றார். அப்படிப் பல மதத்தினரும் வந்து வாழ்த்தி சென்றார்கள். ''இவ்வளவு செலவு செய்கிறீர்களே இதற்கெல்லாம் பணம் ஏது?'' என்று மாண்புமிகு அமைச்சர் திரு சாமிவேலு விடம் கேட்டேன். அதற்கு அவர் பதில் அளிக்கும்போது, ''இப்படிப்பட்ட விருந்து விழாக்களுக்கு ஒரு அமைச்சருக்கு 80 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்ய அரசாங்கம் அனுமதிக்கிறது'' என்று பதில் சொன்னார். இதன் மூலம் தவறுகளுக்கும் இடமில்லை. மதபேதம் இல்லாமல் எல்லா மதத்தினரும் அங்கு ஒற்றுமையாக வாழ வழி ஏற்படுகிறது.

### குடிசைக்கு மின் திட்டம்!

மாண்புமிகு மலேயா பிரதமர் மகதீர் முகமது அவர்களும் தமிழ்நாட்டுக்கு வரும்படி அழைத்தேன். டெல்லியில் மார்ச் மாதம் நடக்கும் ''கூட்டுச்சேரா நாடுகள்'' மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு வருகிறேன் என்றார். தமிழ் நாட்டில் குடிசைகளுக்கெல்லாம் குறைந்த செலவில் மின்சாரம் வழங்கப்படுகிறது என்பதை அவர் கேட்டு அறிந்து ஆச்சரியப்பட்டார். பாராட்டினார்கள்.

### உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு!

விரைவில் உலகத் தமிழ்ஆராய்ச்சி மாநாடு நடத்த ஏற்பாடு செய்கிறார்கள். அது சம்பந்தமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைக் கலந்துவிட்டு அதற்குத் தகுந்த ஆராய்ச்சி நூல்களையும் தமிழ் அறிஞர்களையும் அங்கு அனுப்புவதாகச் சொல்லி இருக்கிறேன். மாநாடு நடந்த பகாமஸ் தீவு சிறிய தீவுதான். 2 இலட்சம் பேர் தான் இருக்கிறார்கள். ஆனால் 20 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் அமெரிக்காவில் இருந்து அந்தத் தீவுக்கு வந்து போகிறார்கள். நிறைய வருமானம் இருப்பதினால் அந்த நாட்டு மக்கள் எல்லோரும் வளமாக இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக கார், படகு இருக்கின்றன. அந்தத் தீவின் பிரதமர் பிண்ட்லிங் இந்தியா மீது நல்லெண்ணம் கொண்டுள்ளார்.

அவருக்குத் திருக்குறள் புத்தகம் ஒன்றும் காஷமீர் பட்டு ஒன்றும, சந்தன மாலை ஒன்றும் அளித்துப் பாராட்டினேன். அமெரிக்க விண்வெளியில் திரும்பத் திரும்பச் செலுத்தும் ''கொலம்பியா'' என்ற ராக்கெட்டையும் பார்த்தேன்.

ஆனலூலூ தீவில் முன்பு குடியேறிய ''வாட்டுமல்'' என்ற இந்தியர் நிறைய பணத்தை ஒதுக்கி, கல்விக்காக அறக்கட்டளை ஏற்படுத்தி உள்ளார். விஞ்ஞானப் பாடங்களில் உயர் படிப்புக்காகப் பண உதவி செய்ய அந்த அறக்கட்டளை முன் வந்துள்ளது. தமிழ் மாணவர்களும் அந்தச் சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அந்த அறக்கட்டளையின் தலைவர் டேவிட் வாட்டுமல் என்னிடம் தெரிவித்தார்.

(மாண்புமிகு தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் 23.11.82 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நிருபர்களுக்கு அளித்த பேட்டி)





# தேனீக்களைப் பின்பற்றுவோம்

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர்

திரு. **இராம. வீரப்பன்**

புகழ்பெற்ற இந்தப் பெண்கள் கல்லூரியில் கலந்து உரையாற்றுவதில் மகிழ்ச்சியடைகிறேன். எறும்பு தனது எதிர்காலத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்கிற பழக்கத்தைக் கையாண்டு வருவதை நாம் காணலாம். எறும்பு தனக்கு மட்டுமே சேமித்து வைக்கிறது; தேனீயோ தனக்கும் பயன்படுகிறது; பிறருக்கும் பயன்பெறுகிறது. சேமித்து வைக்க வேண்டும் என்கிற பழக்கம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். முற்காலத்தில் நமது முன்னோர்கள் சேமித்து வைக்கிற பழக்கத்தைக் கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள்.

இன்னமும் கிராமப்புறங்களில் சேமிப்பு முறை கடைப்பிடிப்பதைக் காணமுடிகிறது. ஆபத்துக் காலத்தில் உதவுவதற்காக 'சிறுவாடு' என்ற முறையைக் கையாண்டு வந்திருக்கிறார்கள், அந்தக் காலத்துப் பெண்கள். சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற கருத்தைப் பெண்களிடத்தில்தான் சொல்ல வேண்டும். பொதுவாக சிக்கனத்தைக் கடைப்பிடிக்கிற பழக்கம் ஆண்களிடத்தில் அதிகம் இல்லாமல் இருக்கிறது.

சமுதாயத்திலுள்ள எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டிய கடமையும், பொறுப்பும் பெண்களுக்கும் உண்டு. என்றும் சேமிப்பு மற்றும் சிக்கனம் பெண்களிடையே வளரவேண்டும். சேமிப்புப் பழக்கத்தில் மாணவ மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில், ஆண்டு தோறும் அதிக அளவு சேமிப்புப் பழக்கம் வைக்கும் மாணவ-மாணவிகளுக்குத் தேர்வில் மற்றப் பாடங்களுக்கு மதிப்பெண் ஒதுக்குவது போல் சேமிப்புப் பழக்கத்திற்கும் பரிசும், சிறப்பு மதிப்பெண்ணும் வழங்க, கல்லூரி முதல்வர்கள் முன்வர வேண்டும். சிக்கனம் என்பது பணத்தைச் சேமிப்பது மட்டுமின்றி, வாழ்க்கையில் நேரத்தையும் சேமிக்கிற பழக்கம் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும்.

ஒவ்வொரு சமுதாயப் பணியிலும் மாணவ-மாணவிகளை ஈடுபடுத்தினால் அவர்களது எதிர்காலம் ஒளிமிக்கதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

*[உலகச் சிக்கன நாளையொட்டி, சென்னை இராணிமேரிக் கல்லூரியில் 6.11.'82 அன்று ஆற்றிய உரையி லிருந்து ]*



# 'பெரியார்' பெற்ற பரிசு

ஒவ்வொரு ஆண்டும் சிறு சேமிப்பு நிகர முதலீட்டில் அரசு நிர்ணயிக்கும் இலக்குகளை எய்தும் மாவட்டங்களுக்கும், அவ்வாறு இலக்கு களை எய்தும் மாவட்டங்களில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாவட்டங்களுக்கும் அரசு கீழ்க்கண்டவாறு ஊக்கத் தொகைகள் வழங்கு கிறது.

***எல்லா மாவட்டங்களுக்கும் உரியது:***

இலக்கினை எய்துவதற்கு ஊக்கத்தொகை

அ) ஒரு கோடியும் அதற்கு மேலும் இலக்கு நிர்ண யிக்கப்படும் மாவட்டங்கள் ரூ. 50,000/-

ஆ) ஒரு கோடிக்குக் குறை வாக இலக்கு நிர்ணயிக்கப் படும் மாவட்டங்கள் ரூ. 25,000/-

அத்துடன் இலக்குக்கு மேல் வசூல் செய் யும் மாவட்டங்களுக்கு வசூல் செய்த தொகை களுக்கு ஏற்ப ஊக்கத் தொகை வழங்கப்படு கிறது. மேற்படி ஊக்கத் தொகையினை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசு அனுமதி பெற்று மக்களுக்குப் பயனளிக்கும் சமூகநலத் திட்டங் களில் செலவிடலாம்.

அத்துடன் முதலிடம் பெறும் மாவட்டத் திற்கு 1978-79ஆம் ஆண்டிலிருந்து சுழற் கேடயம் வழங்க அரசு அனுமதித்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் கடந்த 1978-79, 1979-80 மற்றும் 1980-81 ஆகிய மூன்று ஆண்டு களிலும் தொடர்ந்து சிறு சேமிப்பு நிகர வசூலில் மாநிலத்திலேயே அதிக சதவிகிதம் பெற்றமைக் காகச் சுழற்கேடயத்தை 11-4-82 அன்று திருநெல்வேலியில் நடந்த விழாவில், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ் செழியன் அவர்களால் மேற்படி மாவட்டத்திற்கு நிரந்தரமாகக் கொடுக்கப்பட்டுவிட்டது.

1981-82 ஆம் ஆண்டில் பெரியார் மாவட் டத்திற்கு ரூ. 130 இலட்சமென இலக்கு நிர்ண யிக்கப்பட்டது. மேற்படி ஆண்டில் பெரியார் மாவட்டம் இலக்கிற்கு மேல் ரூ. 88·41 இலட்சம் வசூலித்தது. அதாவது ரூ. 218.41 இலட்சம் வசூல் செய்து மாநிலத்திலேயே அதிக சதவிகித வசூலில் (168 %) முதலிடம் வகித்து, சுழற் கேடயத்தைப் பெறத் தகுதி பெற்றது. இதற் கான விழா வ. உ. சிதம்பரனார் பூங்கா மைதானத்தில் 10.11.82 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ் செழியன் அவர்கள் தலைமையில் ஈரோட்டில் நடைபெற்றது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கேடயத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு அ. ந. தியானேஸ்வரன், இ.ஆ.ப. அவர்களிடம் வழங்கினார். திரு பி. துரைசாமி, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றினார். சிறு சேமிப் புத் துறை துணைத் தலைவர் திரு எஸ். எஸ். இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அவர்கள் சிறப் புரையாற்றினார்.

பெரியார் மாவட்டத்திற்கு மற்றொரு சிறப்பும் உண்டு. ஈரோட்டிலுள்ள கலைமகள் கல்வி நிலையம் 1977–ஆம் ஆண்டு 'சஞ்சாயிகா' திட்டத்தில் முதலிடம் வகித்து மாநில ஊக்கத் தொகையும் பெற்றுள்ளது.

—அ. விநாயகம்

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

தொகுப்பு: கீ. ஆனந்தன்

## 1—11—82

தமிழக ஆசிரியர்களின் குறைகளைத் தீர்க்க அனைத்துக் கல்வி மாவட்டங்களிலும் ''ஆசிரியர் கவுன்சில்'' விரைவில் செயல்படத்துவங்கும் என மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார்.

புதுத் தொழில்களை அமைப்பது பற்றி பரிசீலிப்பதற்கு முன்னதாக, மாநிலங்களிடையே உள்ள சமமின்மையை மத்திய அரசுபரிசீலிக்க வேண்டும் என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்.

தமிழக வறட்சி நிவாரணத் திட்டத்திற்கு மத்திய அரசு கூடுதலாக ரூ. 10 கோடியும், ஒரு இலட்சம் டன் அரிசியும் கொடுக்கும்படி கேட்டு இருக்கிறோம் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் அறிவித்தார்.

தமிழ்நாட்டு சிமெண்ட் கார்ப்பரேஷன் சார்பில் மதுரை மாவட்டம் உத்தமபாளையத்தில் ரூ.40 கோடி முதலீட்டில் தினமும் ஆயிரம் டன் சிமெண்ட் தயாரிக்கும் ஆலை ஒன்று தொடங்க மத்திய அரசிடம் அனுமதி கோரி இருப்பதாக மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

தமிழகஅரசு தரும் மருத்துவ வசதிகளால், குழந்தைகளின் சாவு எண்ணிக்கை பெருமளவு குறைந்துள்ளது என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் அறிவித்தார்.

தமிழகஅரசு ஊழியர்கட்கு 17-வது அகவிலைப்படியை அளிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. குறைந்த பட்சம் 6 ரூபாயும் அதிகபட்சம் 30 ரூபாயும் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஊதிய உயர்வினால் 5 கோடி ரூபாய் அரசுக்குக் கூடுதலாகச் செலவாகும். ஆண்டுதோறும் வழங்க 12 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும் என்று அரசு அறிவித்துள்ளது.

## 2—11—82

தமிழ்நாட்டில் முதல் பால் பெருக்குத் திட்டத்தின் விளைவால் பெரியார் மாவட்டம், அம்பத்தூர் ஆகிய இடங்களில் பால்பண்ணை உருவாக்கப்பட்டது. 2-வது கட்டத்தில் தமிழகத்தின் பெருநகரங்களிலெல்லாம் பால் பண்ணை உருவாக்கப்படுகிறது என்று மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

தமிழகத் திட்டக்குழுவில் தலைவராக இருந்துவரும் திரு வி. கார்த்திகேயன் அவர்கள் ,துணைத் தலைவராக இருந்து வரும் பாவலர் திரு. மா. முத்துசாமி அவர்கள் பத்து நிபுணர்களின் பதவி காலம் மேலும் ஓராண்டு நீடித்து தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் ''நிலநீர் ஆய்வு'' செய்வதற்காகப் பொதுப்பணித்துறையின் கீழ் எல்லா மாவட்டங்களிலும் ஒரு நீர்க் கோட்டம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று அரசு அறிவித்துள்ளது.

சேலம், திருச்சி நகராட்சிகளுக்காகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ரூ. 113 கோடியில் ஒரு பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டு இருப்பதாக மாண்புமிகு ஊராட்சித்துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்.

படகு கட்டும் துறையில் பணியாற்றி வேலை இழந்தவர்களுக்குப் பொது நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அளிக்க அரசு ஆனண பிறப்பித்துள்ளது.

## 3—11—82

வண்ணத் தொலைக் காட்சி—மற்றும் சாதாரண (கறுப்பு-வெள்ளைத் தொலைக் காட்சி ஆகியவற்றுக்கான படச்சூழ் (ட்யூப்) உற்பத்தி செய்யும் ஆலை தஞ்சை மாவட்டத்தில் பெட்ரோலியம் இரசாயன ஆலை ஆகியவற்றை அமைப்பதற்கு மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளதாக மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

மாஸ்கோ-பாரிஸ் பல்கலைக் கழகத்தைப் போல தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் இயற்கைச் சூழலுடன் அமைய வேண்டும் என்று தமிழகச் சட்டமேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சிவஞானம் அவர்கள் அறிவித்தார்.

வாழ்க்கையை நடத்த வழியற்று வறுமையில் வாடும் கலைஞர்களுக்கு உதவி நிதி வழங்கும் புதிய நலத்திட்டம் ஒன்றை அரசு அறிவித்துள்ளது. அதன்படி நாதஸ்வரம்-தவில், கடம், பரத

நாட்டியம் போன்ற தொழிலில் சடு பட்ட 114 கலைஞர்கள் மாதம் ரூ. 150 வீதம் இந்த உதவித் தொகையைப் பெறுவார்கள் என்று தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சிறப்பான சேவையைப் பாராட்டி மத்திய அரசின் 'ஹட்கோ' அமைப்பு பரிசு வழங்கியுள்ளது. ஏழை எளிய மக்களுக்கு வீட்டுவசதி செய்து தருவதில் இந்தியாவிலேயே சிறப்பான இடத்தைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் வகிக்கிறது.

## 5—11—82

கூட்டுறவு வங்கிகள் மூலம் அடுத்த ஆண்டில் 170 கோடி ரூபாய்க்கு நகைகள் மீது கடன் வழங்கப்படும் என்று மாண்புமிகு சட்டம்-கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் அறிவித்தார்.

சுயவேலை வாய்ப்புக்காக வேலை இல்லாத பட்டதாரிகளின் வேலை வாய்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி 9 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. அடுத்த ஆண்டு மாநிலம் முழுவதும் இந்தத் திட்டத்திற்காக ரூ. 1 கோடி வழங்கப்படும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## 6—11—82

ரூபாய் ஒரு கோடியே 38 இலட்சம் செலவில் நெல்லை மாவட்டம் பாளை யங்கோட்டையில் 'துணைமின் நிலையம்' ஒன்று அமைக்கப்படவிருக்கிறது என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்.

## 7—11—82

பிற மாநிலங்களிலிருந்து தமிழக வியாபாரிகள் வாங்கும் அரிசிக்கு ''லெவி முறை ரத்து ஆகும்'' என்று அரசு அறிவித்துள்ளது.

## 8—11—82

தமிழ்நாட்டில்தான் தொழில் அமைதி நன்றாக உள்ளது. வெளிநாட்டவர்கூட தமிழகத்தில் தொழில்களைத் தொடங்க விருப்பம் தெரிவித்துள்ளனர். தமிழ்நாட்டில் சிறு தொழில் செய்ய பதிவு செய்துகொண்டவர்களது எண்ணிக்கை 36,000மாக உயர்ந்துள்ளது என்று மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

தமிழகத்தில் 'ஹஜ் குழு' எப்படிச்செயல்படுகிறது என்பதனை மத்திய அரசு வெகு ஆவலோடு விசாரித்து விவரம் கேட்டிருப்பதாக நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு கே. இராஜாமுகம்மது அவர்கள் அறிவித்தார்.

இதுவரை கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் அரசு மருத்துவமனைகளில் மட்டுமே செய்யப்பட்டு வந்தன. கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள விரும்புகிறவர்களுக்கு இப்போது தனியார் மருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சை செய்ய முன் வந்தால் அதற்குத் தமிழ்நாடு அரசு அனுமதி அளிக்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ரூ.82 இலட்சம் செலவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் 4 அணைக்கட்டுகள் கட்ட தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கௌரி சங்கர், இ. ஆ. ப. அவர்கள் அறிவித்துள்ளார்.

சென்னை - அந்தமான் நேரடி விமானப் போக்குவரத்துத் துவக்க விழா அன்று, தமிழ்நாட்டில் தஞ்சை, சேலம், தூத்துக்குடி ஆகிய முக்கிய நகரங்களுக்கும் சென்னையிலிருந்து விமானம் விட மத்திய அரசை மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் கேட்டுக் கொண்டார்.

## 9—11—82

''தமிழ்மொழியில் அர்ச்சனை வேண்டும் என்று கேட்பது தமிழ் மொழியின் பாதுகாப்புக்காக மாத்திரம் அல்ல. இந்த நாட்டில் சமயம்-ஆன்மீகம் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான்'' என்று மாண்புமிகு செய்தி-மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் திரு இராம வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

கடந்த 15 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் தமிழ்நாட்டிற்கான மத்திய அரசு முதலீடு எட்டு சதவிகிதத்தில் இருந்து 4 சதவிகிதமாகக் குறைந்துள்ளது என்று மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

நடைபாதைத் தொழிலாளர்களுக்குத் தொழில் செய்ய ரூபாய் 7 ஆயிரம்வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது என்று கதர் வாரியத் துணைத் தலைவர் பட்டுக்கோட்டை திரு பாப்பையன் அவர்கள் அறிவித்தார்.

## 10—11—82

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிதாக (...) 1,65,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசனவசதி செய்யப்படும் என்று மாண்புமிகு நீர்ப்பசனத் துறை அமைச்சர் திரு கே. இராஜாமுகமது அவர்கள் அறிவித்தார்.

தீபாவளி விற்பனையாக இதுவரை ரூ. 25 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை ஆகியுள்ளன என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார்.

ஆதிதிராவிடர்களுக்கு வீடுகட்ட தமிழக அரசு ரூ. 5 கோடியே 70 இலட்சம்

ஒதுக்கியுள்ளது. மேலும் வீடுகட்ட ஆளுக்கு ரூ. 3250 உதவித் தொகையை யும் அரசு வழங்குகிறது என்று மாண்பு மிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு எம். விஜயசாரதி அவர்கள் அறிவித்தார்.

## 11—11—82

1985-ஆம் ஆண்டுக்குள் தமிழக அரசு ஜப்பானுடன் தொழில் நுட்ப ஒப்பந்தம் மூலம் அமைத்துள்ள எலக்ட்ரானிக் கார்ப்பரேஷன் தயாரிக்கும் டிஜிட்டல் 2 இலட்சம் கைக்கடிகாரங்கள் விற் பனைக்குக் கிடைக்கும் என்று அதன் தலைவர் திரு சி. இராமச்சந்திரன் இ. ஆ. ப. அவர்கள் அறிவித்தார்.

தமிழகத்திற்குத் தேவையான மின்சா ரத்தை அண்டை மாநிலம் வழங்கும்படி கேட்டிருக்கிறோம் என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச் சந்திரன் அவர்கள் அறிவித்தார்.

## 12—11—82

வடார்க்காடு மாவட்டம் வேலூர் அருகே ரூ. 20 கோடிச் செலவில் வெடி மருந்துத் தொழிற்சாலையும், அரக்கோ ணத்தில் ரூ. 10 கோடிச் செலவில் உருக்கு உருட்டாலையும், திருப்பத்தூர் அருகில் ரூ. 50 இலட்சம் செலவில் சந்தன எண்ணெய் ஆலையும், ராணிப் பேட்டையில் உள்ள சிப்காட் தொழிற் பேட்டையில் 40 பிரிவுகள் துவக்கவும், அடுத்த 5 ஆண்டுகளில் தஞ்சையிலும் புதுக்கோட்டையிலும், தூத்துக்குடி யிலும் மூன்று கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் துவக்கவும் அரசு முடிவு செய்துள்ளதாக மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

தமிழகத்தில் உணவு நிலைமை திருப்தி கரமாக உள்ளது. இதுவரை 1.5 இலட் சம் டன் நெல்-அரிசி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மத்திய அரசு தமிழகத்திற்கு அரிசி ஒதுக்கீடு செய்யும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்தார்.

தமிழ்நாட்டிலிருந்து வெளியிடங்களுக்கு மரம் ஏற்றுமதி செய்ய தடை விதிக்கப் பட்டுள்ளது. இந்தத்தடை அத்தியா வசியப் பொருள் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ளது என்று அரசுஆணை பிறப்பித்துள்ளது.

## 14—11—82

தமிழ்நாட்டில் 62 இலட்சம் குழந்தை கள் பலன் பெறும் 'இலவசப் பல் பொடி வழங்கும் விழா' சென்னை அருகி லுள்ள செங்கல்பட்டு மாவட்டம் பொன் னேரி வேம்பாக்கத்தில் மாண்புமிகுஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.



## கண் கொடுக்கும் கண்ணான அரசு!

மக்களுக்குப் பார்வை இழப்பு ஏற்படு வதற்கான காரணங்கள் :

நோய்.

சத்துள்ள உணவைச் சாப்பிடாதது.

சாளேச்வரம். இது முதுமை காரண மாக வருவது.

இந்திய மக்களில் 1.4 சதவிகிதம் பேர் பார்வை இழந்தவர்களாக இருக்கிறார்கள். இதனை 6-ஆவது திட்ட இறுதியில் (1984—85) ஒரு சதவிகிதமாகக் குறைக்க மத்திய, மாநில அரசுகள் முனைந்து செயல் பட்டு வருகின்றன.

ஏற்கனவே விழிப்படல நோய் (காட் ராக்ட்) உள்ளவர்கள் 60 இலட்சம் பேர் நாட்டில் இருக்கிறார்கள். இத்துடன் ஆண்டுக் குப் பத்து இலட்சம் நோயாளிகள் அதிகரித்து வருகின்றனர். அதனால் காட்ராக்ட்நோயைக் குணப்படுத்தும் வைத்திய வசதிகளை அரசு பெருக்கி வருகிறது.

தடுத்து நிறுத்தக்கூடிய பார்வை இழப் பைத் தடுத்து நிறுத்தும் திட்டத்தின் கீழ், மத்திய அரசின் உதவியைப் பெற்று மாநில அரசு மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவ மனையில் நடமாடும் கண் வைத்தியப் பிரிவு ஒன்றை நிறுவியுள்ளது. இது 1981 ஏப்ரல் மாதத்திலிருந்து செயல்பட்டு வருகிறது. மதுரை மருத்துவக் கல்லூரியில் உள்ள கண் சிகிச்சைத் துறை 75 படுக்கைகள் உள்ளதாக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பார்வை இழப்பை அடி யோடு போக்க, தமிழ்நாடு அரசு மிகப் பெரிய அளவில் தடுப்பு நடவடிக்கையைத் தொடங்கி யுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் ஐந்து நடமாடும் கண் சிகிச்சை ஊர்திகள்-சென்னை யில் இரண்டும், மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்று மாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கண் சிகிச்சைக்கும் தமிழக அரசு 94 ரூபாய் செலவு செய்கிறது. அத் துடன், புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ் இந்தப் பணிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துள்ளது.

தமிழ்நாட்டில் 1981-ஆம் ஆண்டில் 21,471 காட்ராக்ட் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. 1982 ஏப்ரல் முதல் ஜூலை 15 வரை 2,964 அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளன. 1982-83 நிதியாண்டில் மொத்தம் 40,000 பேருக்கு இலவசக் காட ராக்ட் அறுவைச் சிகிச்சை செய்யத் தமிழக அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. 1980-81, 1981-82 ஆகிய நிதியாண்டுகளில் மொத்தம் 40,158 காட்ராக்ட் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன.

— மூ.மு.கா



# மழலையர் நல்வாழ்வுக்கு மகத்தான திட்டம்!

—அ. மருது.

தமிழகத்தில், கிராம-நகரக் குழந்தைகளுக்கு இலவசச் சத்துணவு கொடுக்கப்பட்டு வருவதை நாமறிவோம். சத்துணவு மட்டும் குழந்தைகள் வளர்ச்சிக்கு வழிகோல முடியாது என்பதால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், குழந்தைகளுக்கு மருத்துவ வசதிகளையும் செய்து கொடுக்க விரும்பினார். அதுதான் முத்துறை மூலம் செயல்படும் 'தீவிர நோய்த் தடுப்பு மருத்துவப் பணித் திட்டம்.'

தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் செயல்படும் இடங்களில், ''தீவிர நோய்த் தடுப்பு மருத்துவப் பணி திட்டத் துவக்கவிழா 21.11.82 அன்று சென்னை, நுங்கம்பாக்கம் மாநகராட்சிப் பெண்கள் மேல்நிலைப்பள்ளித் திடலில் நடைபெற்றது.

சென்னை மாநகராட்சி சிறப்பு அலுவலர் திரு தி.து. சுந்தர்ராஜ் இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். குழந்தைநல மருத்துவமனை இயக்குநர் டாக்டர் சி.திருஞானசம்பந்தம் அவர்கள் திட்ட அறிக்கையை வாசித்தார். பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு இயக்குநர் டாக்டர் வி.கபாலி அவர்கள் இத்திட்டத்தினைப் பற்றி விளக்கிக் கூறினார்.

விழாவிற்குத் தலைமை வகித்து மாண்புமிகு சமூக்நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் உரையாற்றுகையில் ''தடுப்பு மருந்து கொடுப்பதாலும் சத்துணவு கொடுப்பதாலும் நல்ல முறையில் குழந்தைகள் வளரும் வாய்ப்பு உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட 32 இடங்களில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணித் திட்டங்கள் சமூகநலத்துறையால் நடத்தப்படுகின்றன. இவ்விடங்களில் எல்லாம் குழந்தைகள் நோய்த்தடுப்பு மருத்துவப் பணித் திட்டம் செயல்படுத்தப்படும்.

''பத்து சத்துணவுத் திட்டக் கூடத்திற்கு ஒரு நோய்த்தடுப்பு மருந்து வழங்கும் மையம் வீதம் ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் 10 நோய்த் தடுப்பு மருத்துவப் பணிநிலையங்கள் செயல்படும்'' என்றார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் துவக்க உரையாற்றுகையில், ''சென்னை மாநகராட்சியில் உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் தடுப்பு மருந்து போடப்படும். சமூக நலத்துறையால் நடத்தப்படும் இத்திட்டம் மக்கள் நல்வாழ்வுத்துறை, ஊரக வளர்ச்சித் துறை ஆகியோரின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படுகின்றது'' என்றார்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் சிறப்புரையாற்றுகையில், ''எதிர்காலத்தில் குழந்தைகள் நலம், சமூகப் பாதுகாப்பு அடிப்படைத் திட்டமாகச் செயல்படுத்தப்படும். அரசாங்கம் எவ்வளவு திட்டம் தீட்டினாலும், இதனைப் பயன்படுத்துபவர்கள் ஒத்துழைப்புக் கொடுத்தால்தான் வெற்றிகரமாகச்



செயல்படும்'' என்று தெரிவித்தார்.

விழாவில், மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள், மூன்று குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போட்டார். மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் இரண்டு குழந்தைகளுக்குப் போலியோ சொட்டு மருந்து கொடுத்தார். சமூகநலத் துறை இயக்குநர் திருமதி யாஸ்மின் அகமது இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார்.

குழந்தைகளுக்கு உண்டாகும் நோய்களை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்திட குழந்தைகளின் பெற்றோர்கள் இத்திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள இந்த விழா வழிகோலியது என்றால், அது மிகையல்ல!

## தீவிர நோய்த் தடுப்பு மருத்துவப் பணித் திட்டம்

இளம்பிள்ளைவாதம், தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், வில்வாத ஜன்னி, ஆகிய நோய்களிலிருந்து இளம் குழந்தைகளைக் காத்தல்.

**பணி நாட்கள்:**

இத்திட்டம் மூன்று கட்டமாகச் செயல்படும். (1) 21.11.82 முதல் 24.11.82 வரை (2) 21.12.82 முதல் 24.12.82 வரை. (3) 21.1.83 முதல் 24.1.83 வரை. செயல்படும் நேரம் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை.

**செயல்படுத்தும் இடங்கள்:**

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், மாநகராட்சிகள். வேலூர், ஈரோடு, திருப்பூர், திருச்சி. திண்டுக்கல், திருவொற்றியூர், ஆலந்தூர், காஞ்சிபுரம் ஆகிய நகராட்சிகள். நிலக்கோட்டை, தளி ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள்.

**பணி இடங்கள்:**

அருகில் உள்ள நோய்த்தடுப்பு மருத்துவப் பணி நிலையங்கள்.

21.11.82ல் துவக்கப்பட்ட விழாவில் மட்டும் அலுவலர் திருமதி அனுஷயா மற்றும் 14 பாலசேவிகாக்கள், 3 டாக்டர்கள், 3 செவிலியர்கள், லயோலா கல்லூரியைச் சேர்ந்த என்.எஸ்.எஸ். தொண்டர்கள் 7பேர் மற்றும் சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த அலுவலர்களும் சேர்ந்து ஏறத்தாழ 400 குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து போட்டனர்.



**பயன் பெறுவோர்:**

மூன்று மாதத்திலிருந்து 6 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகள். இத்திட்டத்தின் மூலம் 3 இலட்சம் குழந்தைகள் நலம் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மற்றும் மூன்று வயதிலிருந்து ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் எடையைக் குறிக்கவும், வளர்ச்சி பற்றி அறியவும், ''குழந்தைநலக் குறிப்பேடு'' அட்டை ஒன்றும் ஒவ்வொரு மையத்துக்கும் வழங்கப் பெறுகிறது.

**பெற்றோருக்கு வேண்டுகோள்:**

அருகில் உள்ள தடுப்பு மருந்து வழங்கும் மையங்களுக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்ல வேண்டும். சிறப்பு வசதியைப் பெறலாம். நோயிலிருந்து குழந்தைகளை ஆரம்பத்திலேயே காப்பாற்றலாம்.

**பணியை நடத்துபவர்கள்**

சமூகநலம், மக்கள் நல்வாழ்வு, உள்ளாட்சித் துறைகள்.

பாலசேவிகா. என்.எஸ்.எஸ். தொண்டர்கள், விளம்பரப் போஸ்டர்கள், சினிமா சிலைடுகள் மூலம் பிரச்சாரம் செய்யப்படும்.

இன்றைய குழந்தைகள் வளமுடன் இருந்தால் தான், நாளைய தலைமுறையினர் நல்ல முறையில் உருவாக முடியும். இத்திட்டம் சீரும் சிறப்புடனும் செயல்பட பொதுமக்கள் முழு ஒத்துழைப்புத் தருவார்கள் என்பதில் ஐயமில்லை.

# கைவினைப் பொருட்கள் வாங்கச் சிறந்த இடம்—
# பூம்புகார்

ஏன்?

- சரியான விலை: பூம்புகார் ஓர் அரசு நிறுவனம். எனவே நிர்ணயிக்கப்பட்ட சரியான விலையில் மட்டுமே கைவினைப் பொருட்கள் விற்கப் படுகின்றன. அதிக விலை கிடையாது.
- வித விதமான ரகங்கள்: அலங்காரப் பொருட்களும் அன்றாட உபயோகத் திற்கான பொருட்களும் விதவிதமான ரகங்களில் விற்கப்படுகின்றன.
- இந்தியாவிலேயே அதிக விற்பனை நிலையங்கள் கொண்ட நிறுவனம்.

## பூம்புகார்

கைநுட்பக் கலைத்திறன் பொருட்கள் களஞ்சியம்

- 818, அண்ணா சாலை, சென்னை 600 002.
- 104 / 105, பிரிகேட் ரோடு, பெங்களூர் 560 001.
- பம்பாய் • புதுடில்லி • மற்றும் இதர தமிழக நகரங்களில்

தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சி இணையகம் (ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)



DIPR/ 2393 / 82 / 29

ADWAVE/THDC/2210



## தருமபுரி மாவட்டத்தில்

# வேளாண்மை வளர்ச்சிப்பணிகள்

சீதோஷ்ண நிலை, பருவ நிலை, மண் அமைப்பு, மழையளவு மற்றும் விதைப்புக் காலம் ஆகியவற்றிற்கு ஏற்ப தருமபுரி மாவட்டத்தை நான்கு முக்கிய வேளாண் மண்டலங்களாகப் பிரிக்கலாம். அவை வருமாறு.

1. தருமபுரி மண்டலம்—(தருமபுரி, நல்லம்பள்ளி, பாலக்கோடு, பென்னாகரம், வட்டாரங்கள்)

2. கிருஷ்ணகிரி மண்டலம்:—(கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம், வேப்பனபள்ளி, பருகூர் வட்டாரங்கள்)

3. அரூர் மண்டலம்—(அரூர், மொரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி, ஊத்தங்கரை வட்டாரங்கள்).

4. ஓசூர் மண்டலம்;—(ஓசூர், சூளகிரி, தளி, கெலமங்கலம் வட்டாரங்கள்)

இம்மாவட்டத்தில் பலவகைப்பட்ட பருவ காலங்கள் உள்ளன. மிகக் குளிரான ஓசூர்ப் பகுதியும், மிக வறட்சியான தருமபுரியும், பாசனவசதி உள்ள கிருஷ்ணகிரிப் பகுதியும் உள்ளன. இம்மாவட்டத்தின் குறைந்தபட்ச வெப்பநிலை 17.8° செ., அதிகப்பட்ச வெப்பநிலை 33.5° செ. ஆகும். டிசம்பர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை மிகக் குளிராகவும் மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை மிக வெப்பமாகவும் இருக்கும். இம்மாவட்டத்தின் ஆண்டுச் சராசரி மழையளவு 850 மி.மீ. இது நமது மாநிலத்தின் மழையளவில் 10 சதவீதத்திற்கும் குறைவாகும். வருடத்தில் மழை நாட்கள் 23லிருந்து 75 நாட்களாகப் பரவியுள்ளது. சராசரி மழை நாட்கள் 48 நாட்கள்.

இம் மாவட்டத்திற்குத் தென்மேற்குப்பருவக்காற்றால் (ஜூன் முதல் செப்டம்பர்) 121 மி.மீ. முதல் 513 மி. மீ. கன மழையும் வடகிழக்குப்பருவக்காற்றால் 171 மி.மீ. முதல் 499 மி.மீ. மழையும் பெய்கிறது. பருவமழை தவறுவதாலும், மழை அளவு வேறுபடுவதாலும் தருமபுரி மாவட்டம் வறட்சிக்கு இலக்கான பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**மண் அமைப்பு:**

தருமபுரி மாவட்டத்தில் பல்வேறு வகையான மண் அமைப்புகள் உள்ளன.

கரிசல்மண்—தருமபுரிப்பகுதி
செம்மண்பகுதி—கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை
சரளைமண் பகுதி—ஓசூர், தேன்கனிக்கோட்டை

**பாசனம்:**

தருமபுரி மாவட்டத்தின் வழியாக காவேரி, தென்பெண்ணை என்ற இரு ஜீவநதிகள் ஓடுகின்றன. இம்மாவட்டத்தின் வடமேற்கே 67 கி.மீ. நீளம் காவேரி ஆறு பாய்ந்தாலும் நீர்ப்பாசனத்திற்குச் சிறிதளவேனும் பயன்படுவதில்லை. இம்மாவட்டத்தில் சின்னாறு, பாம்பாறு ஆகிய சிற்றாறுகள் பாய்ந்தாலும் மழைக் காலங்களைத் தவிர ஏனைய நாட்களில் தண்ணீர் இன்றி வறட்சியாகக் காணப்படும். தமிழகத்தில் 43.2 சதவிகித நிலங்கள் நீர்ப் பாசன வசதியுடன் உள்ளன. இம் மாவட்டம் வேளாண்மையில் பின் தங்கியிருப்பதற்கு முக்கிய காரணம் போதுமான அளவு நீர்ப்பாசன வசதியில்லாதது ஆகும். வறட்சி மீட்புத் திட்டத்தின் மூலமாகப் பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டாலும் மொத்த பயிரிடப்படும் பரப்பில் 25 சதவிகிதப் பகுதி தான் பாசன வசதி பெறும் நிலையில் உள்ளது.

**நில உபயோகம்:**

இம்மாவட்டத்தின் மொத்தப்

பரப்பு 9629.89 சதுர கிலோ மீட்டர் ஆகும். இதில் 33 சத விகிதம் காடுகள்; சாகுபடியாகும் பரப்பு 52.8 சதம். சாகுபடியா காத தரிசு 8 சதவிகிம், தரிசு நிலங் கள் 3.94 சதவிகிதமாகும். மொத்த சாகுபடியாகும் பரப்பில் 2 எக்டருக்குக் குறைவான நிலம் உடையவர்கள் தொகை 68 சத விகிதம்.

**பயிர்ச்சாகுபடி முறைகள்:**

இம்மாவட்டத்தின் பெரும் பகுதி மானாவாரி நிலங்கள் இங்கு ராகி, சோளம், சாமை, கொள்ளு, எள்ளு, நிலக்கடலை ஆகிய பயிர்கள் மானாவாரியாகச் சாகுபடி செய்யப்படுகின்றன.

இறைவைப் பயிராக நெல், கரும்பு, மரவள்ளி, பருத்தி, ராகி ஆகிய பயிர்கள் நீர்ப் பாசனம் உள்ள இடங்களில் சாகு படி செய்யப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் பயிரிடப் படும் பயிரின் பரப்பினைப் பார்க்கும் பொழுது சராசரியாக ஒரு எக்டருக்கு 25 கிலோ நிலத் திற்கு இடப்படுகிறது. நெல், ராகி, கரும்பு ஆகிய பயிர்கள் இறைவைப்பயிராகப்பயிரிடப்படு வதால் எக்டருக்கு 60 கிலோ உரங்களை விவசாயிகள் இடுகின் றனர்.

**தருமபுரி மாவட்ட பயிர்ச் சாகுபடிப் பரப்பளவு: 1980-81 பசலி-1390**

நெல் 92,045 எக்டர், சோளம் 1,18,372 எக்டர், கம்பு 16,151 எக்டர், மக்காச்சோளம் 526 எக்டர், ராகி 1,42,654 எக்டர், தினை 2,838 எக்டர், வரகு 29449 எக்டர், சாமை 11,430 எக்டர், குதிரை வாலி 84 எக்டர், பனிவரகு 366 எக்டர் மொத்தப் பரப்பு 5,16,872 எக்டர்.

**பயறு வகைகள்**

கொண்டைக் கடலை 341 எக் டர், துவரை 7,987 எக்டர், பச் சைப்பயறு 2,679 எக்டர், உளுந்து 5,157 எக்டர், அவரை 3,950 எக்டர், மற்றப்பயறு வகை கள் 1,882 எக்டர், கொள்ளு 1,61,442 எக்டர், மொச்சை 5,135 எக்டர்- மொத்தப் பயறு வகைகள்: 1,88,579 எக்டர்.

**பயறு வகைகள் மற்றும் தானிய வகைகள். மொத்தப் பரப்பு 7,05,445 எக்டர்.**

பாக்கு 517 எக்டர், மிளகாய் 2,467 எக்டர், வெள்ளைப்பூண்டு 30 எக்டர், இஞ்சி 14 எக்டர் கொத்தமல்லி 2840 எக்டர் வாசனை திரவியப் -பயிர்கள் மொத்தப்பரப்பு: 10,676 எக்டர்

கரும்பு 17,833 எக்டர், கரும்பு (கட்டைக்கால்) 4,519 எக்டர் பன்னை 1,699 எக்டர் மற்ற சர்க் கரைப் பயிர்கள் 4 எக்டர். மொத்த சர்க்கரைப் பயிர்கள் 24,055 எக்டர்.

வாழை 2,673 எக்டர், மா 26877 எக்டர், பலா 169 எக். கொய்யா 143 எக்டர், திராட்சை 556 எக்டர், மொத்தப்பழப்பயிர் கள்: 30,944 எக்டர்.

உருளைக் கிழங்கு 364 எக் டர், மரவள்ளி 9,228 எக்டர். சர்க்கரைவள்ளி 215 எக்டர் காய் கறிகள் 13,778 எக்டர்.

பருத்தி 18,960 எக்டர், நிலக் கடலை (மானாவாரி) 79,733 எக்டர், நிலக்கடலை (இறவை) 9,301 எக்டர், தென்னை 15,277 எக்டர், எள்ளு 10,331 எக்டர், சூரியகாந்தி 513 எக்டர், ஆம ணக்கு 4,853 எக்டர், புகையிலை 165 எக்டர், வெற்றிலை 1,376 எக்டர்.



## புலிக்கரையில் ஓர் அதிசயம்

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த புலிக்கரையில்-முன்பு 12 மூட்டை வேர்க்கடலையைக் கொடுத்து வந்த நிலம் தற்போது 15 மூட்டை கொடுக்கிறது. இது மந்திரத்தினால் ஏற்படவில்லை! மாயத்தினாலும்உருவாகவில்லை. பின் எப்படி ஏற்பட்டது? உரம் போட்டதன் விளைவால் தான் இந்த அதிக உற்பத்தி- அதிசய உற்பத்தி கிடைத்திருக்கிறது.




பொதுவாக மானாவாரிப் பயிர்களுக்கு உரம் இடும் வழக் கம் கிடையாது; தற்போது, வேளாண்மைத் துறையின் பயிற்சி வழித் திட்டத்தின் அறிவுரையின் காரணமாகப்புதிய உத்திகள் அறி முகப்படுத்தப்படுவதன் விளை வாக மானாவாரிப் பயிர்களுக்கும் உரம் இடப்படுகிறது.

வேர்க்கடலை, சாமை, கொள் ஆகிய மானாவாரிப் பயிர்களுக் கும் தக்காளி போன்ற காய்கறிப் பயிர்களுக்கும் உரம் இட்டு அதிக விளைச்சலைக் கண்டிருக்கின்ற னர், புலிக்கரைப் பகுதி விவசாயி கள்.

வேளாண்மைத் துறையின் பயிற்சி வழித் திட்டத்தில் அங் கம் பெற்றுள்ள புலிக்கரை தொடர்பு விவசாயி திரு. கோவிந்தசாமி அவர்களிடம் இது குறித்துக் கேட்டபோது அவர் குறிப்பிட்டார்:

"நான் மொதலிலே சந்தேகப் பட்டேன்: மானாவாரிக்கு உரம் போடுவாங்களானு அதிசயப் பட்டேன்! அதோட அருமையை உற்பத்தியிலே புரிஞ்சுக்கிட்டேன்.

போத்தலஹள்ளியைச் சேர்ந்த திரு ஏ.எஸ்.ராமசாமி என்னும்விவ சாயி சொன்னார்:

"நான் மானாவாரி தக்காளி பயிரிட்டேன். இதுக்கு முந்தி உரம் போட்டது கிடையாது; பயிற்சி வழித் தொடர்புத் திட் டத்தின் யோசனைப்படி உரம் போட்டேன். நல்ல விளைச்சல் கண்டுச்சு. முன்னே 1 ஏக்கருக்கு 70 கூடை தக்காளி கெடைக்கும்; இப்போ 150 கூடை கெடைக்கு துங்க."

# தருமபுரி மாவட்டத்தில் சமுதாயப்பணிகள்

**தோ**ன்மைச் சிறப்பும், வரலாற்றுச் சிறப்பும், ஒருங்கே பெற்ற மாவட்டம் தருமபுரி மாவட்டம் ஆகும். இம்மாவட்டத்தில் சுற்றுலா பயணிகளைக் கவரத்தக்க சுற்றுலா கேந்திரங்களும், பக்தர்களை மனங்குளிரச் செய்யும் பழமைக் கோவில்களும் வரலாற்றை உலகம் உணரச் செய்யும் கோட்டைகளும், வரலாற்றின் ஆய்விற்குப் பயன்படும் கல்வெட்டுகளும், வண்ணப்படங்களும், நற்றமிழ் மணக்கும் பழம்பதிகளும், நிரம்ப உண்டு. தகடூரைத் தலைநகராகக்கொண்டு தமிழ்க்குடியின் மூத்த மகன் அதியமான் ஆண்ட பூமி இம் மாவட்டமாகும். புறநானூற்றில் அவ்வையார் யாத்த அதிகப் பாடல்கள் இம்மன்னனின் பெரும் புகழையும் இந்நிலத்தின் பெரும் சிறப்பையும் எடுத்துரைக்கிறது. காரி மன்னன்வாழ்ந்த இடத்திற்குக் காரிமங்கலம் என்றும், பொம்மி மன்னன் ஆண்ட பூமிக்குப் பொம்மிடி என்றும், மன்னர்கள் அமைத்த பாடி வீட்டிற்கு மனியம்பாடி என்றும் தற்போதும் வழங்கப்பட்டு வருகிறது

கிருஷ்ணதேவராயரால் உருவாக்கப்பட்ட கோட்டைகள் ராயக்கோட்டையிலும், கிருஷ்ணகிரியில் உள்ள மலையிலும் இன்றும்அவர் புகழ்பாடி நிற்கின்றன. அதியமான் கோட்டையில் உள்ள வண்ணச்சித்திரங்களும், ஒசூரில் இடிந்து கிடக்கும் கோட்டைச் சுவர்களும், பழஞ்சிறப்பை எடுத்துரைக்கின்றன. திப்புசுல்தான் பிரிட்டிஷ் அரசோடு போரிட அமைத்த மண்கோட்டைகள் பெண்ணாகரம், நல்லம்பள்ளி போன்ற பகுதிகளில் மண்மேடிட்டுள்ள காட்சியாகக் காணலாம்.

**நலிவுற்றோர் மேம்பாடு**

கதர் கிராமக் கைத்தொழில் வாரியம் வாழ்வில் நலிவுற்றோருக்காகப் பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்திக் கொண்டுள்ளது. பனை மரம் ஏறும் தொழிலாளிகளுக்குத் தொழிற் பயிற்சியும், கருவிகளும் மானியமாக வழங்கி வருவதோடு தொழில் தொடங்கக் கடனும், மானியமும் வழங்கி வருகிறது. பனைமரத் தொழிலுக்காக மானியமாக ரூ. 35 இலட்சம் வழங்கியுள்ளது. சிறு கைத்தொழில்களை ரூ. 90 இலட்சம் செலவில் உருவாக்கும் பணி நடைபெற்றுக் கொண்டுள்ளது. ஊத்தங்கரை வட்டத்திலுள்ள மத்தூர் பகுதிகளில் 20இலட்சம் பனைமரங்கள் வளர்க்கும் திட்டமும் ரூ. 25 இலட்சம் செலவில் பனைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிலும் உருவாக்கப்பட்டு வருகின்றன. அஞ்செட்டியில் ஊதுபத்தி குச்சி தயாரிக்கும் தொழில் ரூ. 3.5 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டுள்ளது.

திப்பனூர், களர்பதி, மாதம்பதி, பாரூர், ஈச்சங்காடு, சாமல்பட்டி, கம்பைநல்லூர், அம்மன் கோவில்பதி, ஆனந்தூர் விளங்காமுடி ஆகிய இடங்களில் 22பயிற்சி முகாம்கள் ரூ. 3 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு 350 பேருக்கு நார்ப் பயிற்சி, தும்புப் பயிற்சி, பனைஓலைப் பயிற்சி, நவீன முறையில் வெல்லம் தயாரித்தல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டு, தொழில் தொடங்க கடன் வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

ஒட்டப்பட்டி, நடுப்பட்டி, புளியம்பட்டி, மிட்டஅள்ளி, பன்னந்தூர், எட்டிப்பட்டி, ஈச்சங்காடு, பாரூர், திப்பனூர், மாதம்பதி ஆகிய 10 இடங்களில் தும்புப் பயிற்சி, பனை ஓலைப் பயிற்சி ஆகியவை 250 பெண்களுக்கு ரூ. 1 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டுள்ளது.

**மகளிர் நலம்**

466 மகளிர் மன்றங்கள் இம் மாவட்டத்தில் சிறப்பாக இயங்கி வருகின்றன. இம்மகளிர் மன்றங்களில் மொத்தம் 14,000 பெண்கள் உறுப்பினர்களாக இருந்து வருகின்றார்கள். 25 தையல் ஆசிரியைகள் மகளிர் மன்றத்தைச்சேர்ந்தவர்களுக்குத் தையல் பயிற்சி அளித்து வருகிறார்கள். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டுதோறும் ரூ. 4,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு மகளிர் மன்ற உறுப்பினர்களுக்கு பயிற்சியும், சிறந்த குழந்தைகளுக்குப் பரிசும் அளிக்கப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் 5 சிறந்த மகளிர் மன்றங்கள் தேர்ந்தெடுத்துப் பரிசளிக்கப்படுகிறது. தருமபுரி, காவேரிப்பட்டணம் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் தையல் பயிற்சிப் பள்ளி நடத்தப்பட்டு விதவைப் பெண்களுக்குத் தையல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதுகாறும் 200 தையல் இயந்திரங்கள் இலவசமாக விதவைகளுக்கும்,



மொரப்பூர் சரகம், நாராயண அள்ளியில் பசுந்தாள் உரத்தோட்டத்தில் பயிராக்கப் பட்டு வரும் சோற்றுக்கற்றாழை



தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத் தின்படி காவேரிப்பட்டணம் என்னுக் குட்டையை ஒட்டிய பாதை அகலப்படுத் தப்படுகிறது.

கைவிடப்பட்ட கைம்பெண்களுக்கும், ஆதிதிராவிடப்பெண்களுக்கும் தொழில் நடத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளன.

விதவைகள் மறுமணத் தம்பதியர்களுக்கு உதவித்தொகை ரூ. 5,000 அளிக்கப்பட்டு வருகிறது. இதுகாறும் 25 பேருக்கு இத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் மன்ற உறுப்பினர்ளுக்குக் கறவை மாடுகள் ரூ. 12 இலட்சம் செலவில் வாங்கித்தரப் பட்டுள்ள

**குழந்தைகள் நலக் காப்பகங்கள்**

இம்மாவட்டம் முழுவதும் 206 குழந்தைகள் காப்பகங்கள் செயல்படுகின்றன. இக்குழந்தைகள் காப்பகங்களில் 15,000 குழந்தைகள் சேர்ந்து பயனடைந்து வருகின்றார்கள். இக் குழந்தைகளுக்குச் சத்துணவும், உலக அறிவும் வழங்கப்பட்டு வருகின்றன. மலைவாழுநர் குழந்தைகளுக்காக 12 குழந்தைகள் காப்பகங்களும், அரிசனக் குழந்தைகளுக்காக 25 குழந்தைகள் காப்பகங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழந்தைகள் காப்பகத்திற்கும் ரூபாய் 15,000 செலவில் கட்டிடங்கள் கட்டித் தரப்படுகின்றன.

தனி ஊராட்சி ஒன்றியத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ப்புத் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் 100 குழந்தைகள் காப்பகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 10,000 குழந்தைகள் பயன் அடைகிறார்கள். சத்துணவுத் திட்டத்தின் கீழ் வீடுகள்தோறும் காய்கறித் தோட்டம் உருவாக்கப் பட்டு வருகிறது. குழந்தைகளுக்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும் சத்துணவு அளிக்கப்படுகிறது. இதன் மூலம் 15,000 பேர் பயனடைகிறார்கள். எழுத்தறிவு அற்ற பெண்களுக்கு எழுத்தறிவும், சொழிற்கல்வியும் வழங்கப் படுகின்றன. இதன் மூலம் 5,000 பெண்கள் பலனடைகிறார்கள்.

**உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுப் பணிகள்**

உடல் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகளும் காது கேட்கும் கருவியும், தொழில் தொடங்கக் கடனும் வழங்கப் பட்டு வருகின்றன. ஏறத்தாழ 300 பேருக்குத் தொழில் தொடங்குவதற்காக ரூ. 3 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தருமபுரியில் காதுகேளாதோர் பள்ளி ரூ. 1.5 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. இப் பள்ளியில் 75 காதுகேட்காத, வாய் பேசாத குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்பட்டு இலவசமாக உணவும், இருப்பிடமும் வழங்கப்பட்டு வருகிறது. மூன்று சக்கர வண்டிகள் 350ம், காதுகட்கும் கருவிகள் 2000ம் வழங்கப்பட்டுள்ளன.

**முறை சாராக் கல்வி**

ஊத்தங்கரை, பென்னாகரம், நல்லம்பள்ளி, அரூர், பர்கூர், காவேரிப்பட்டணம், கிருஷ்ண கிரி, பாலக்கோடு ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள கிராமங்களில் இரவு நேரங்களில் படிப்பறிவற்ற முதியோர்கட்கும், இளைஞர்கட்கும எழுத்தறிவும், தொழிற்கல்வியும், சொல்லித்தர 300 முறைசாராக்கல்வி மையங்கள் உருவாக்கப்பட்டு, செயல்படுத் தப்படுன்றன. இதன் மூலம் 10,000 பேர் பயனடைகிறார்கள். இம்மையங்கள் தொடர்ந்து இயங்கி வருகின்றன. மேலும் 100 மையங்கள் உருவாக்கப்பட் டுள்ளது.

**கிராமப்புறங்களில் வீடு:**

கிராமப்புறங்களில் வாழ்வோருக்கு 200 ச. அடியில் ரூ. 3,750 மதிப்பீட்டில் வீடுகட்ட நிதி உதவி வழங்கப்படுகிறது. இதுகாறும் 2,500 வீடுகள் கட்டுவதற்குக் கடனும், மானியமும் அளிக்கப்பட்டுள்ளன. மேலும் 4,000 வீடுகளுக்கு நிதி உதவி அளிக்கப்படும்.

**நிலப்பட்டா, வீட்டுமனைப் பட்டா:**

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலப்பட்டாவும் வீட்டு மனைப் பட்டாவும் வழங்கப் பட்டுவருகின்றன. 12,000பேருக்கு



## பலவகையில் பலன்தரும் சூபாபுல் மரம்

ஆடு, மாடுகளுக்குத் தீவனமாகப் பயன்படும் கூபா புல் மரம் தற்போது சூபாபுல் என்ற பெயரில் வழங்கப்படுகிறது. இது மரம் போல் உயரமாக வளரும் தன்மையுடையது. இதில் புரதச் சத்து அதிகம் இருப்பதால் இதனை உண்ணும் மாடுகள் அதிக அளவில் பால் தருகின்றன. பாலும் கெட்டியாக இருக்கிறது. இம்மரத்தின் விதை சாயம் தயாரிப்பதற்குப்பயன்படுகிறது. இதன் பூவில் தேன் உள்ளது. காய்ந்த மரம் விறகாகப் பயன்படுகிறது. ரேயான் பட்டு தயாரிக்கவும் உதவுகிறது.

குறைந்த அளவு தண்ணீர் கிடைத்தாலே போதும் இது நன்கு வளர்ந்துவிடும். 20 அடி உயரத்துக்குமேல் வளரும் திறன் கொண்டது இது; ஒரு வருடத்திற்குள் 12 அடி முதல் 14 அடிகள் வரை வளரக் கூடியது. இதனைப் பயிரிட்டால் 25 சதவிகிதம் இலாபம் கிடைக்கும்.

தருமபுரிமாவட்டத்தில் பல்வேறு ஊராட்சி ஒன்றியத்தினர்களும், வனத்துறையினரும் இந்த மரத்தை அதிக அளவில் வளர்த்து வருகின்றனர்.

---

நிலப்பட்டாவும், 8,000 பேருக்கு வீட்டு மனைப்பட்டாவும் வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஆறு திங்களில் 16,000 நிலப்பட்டா வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன.

**கண்ணொளி:**

கண்பார்வை இழந்த 10,000 பேருக்கு கண் அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டு கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. கண்ணில் புரையோடியவர்களுக்குக் கண் பரிசோதனை செய்து கண் அறுவைச் சிகிச்சை செய்ய சிறந்த கண் மருத்துவர்களைக்கொண்டு ஆண்டிற்கு 4 முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**முதியோர் உதவித்தொகை:**

ஆதரவற்ற அனாதைகள் 7,500 பேருக்கு முதியோர் உதவித்தொகை மாதந்தோறும் வழங்கப்படுவதோடு, சுதந்திரம் பெற்ற ஆகஸ்ட் 15ம் நாளும் பொங்கல் திருநாள் அன்றும், ஆண்களுக்கு வேட்டியும், பெண்களுக்குச் சேலையும் வழங்கப்படுகின்றன. இவர்களுக்கு வாரந்தோறும் 1 கிலோ அரிசியும் இலவசமாகத் தற்போது வழங்கப்படுகிறது.

**கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன்:**

தருமபுரியில் மத்திய கூட்டுறவு வங்கியும், 250 கூட்டுறவு நாணயச் சங்கங்களும் இயங்கி விவசாயிகளுக்குக் குறுகியகாலக் கடனும், மத்திய காலக்கடனும் நீண்டகாலக் கடனும், வழங்கப்பட்டு வருகின்றன. மத்திய கூட்டுறவு வங்கி மூலம் ரூ. 15 கோடி விவசாயிகளுக்குக் கடன் அளிக்கப்பட்டுள்ளது. கிணறுகள் தோண்டவும் பம்புசெட்டுகள் வைக்கவும், ரூ. 350 இலட்சம் நீண்டக்காலக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**மருத்துவப் பணி**

16 ஊராட்சி ஒன்றியங்களிலும் 16 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. இதில் 6 வட்டாரங்களில் நடமாடும் மருத்துவமனை இயங்கி வருகிறது. இதன் மூலம் 5 இலட்சம் பேர் பயனடைகிறார்கள். தருமபுரி, காவேரிப்பட்டணம், ஓசூர், கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் அரசு மருத்துவ மனைகள் இயங்கி வருகின்றன. தருமபுரி தலைமை மருத்துவ மனையில் ரூ. 5 இலட்சம் செலவில் காசநோய்ப் பிரிவு உருவாக்கப்பட்டு வருகிறது. ரூ. 3.5 இலட்சம் செலவில் சித்த மருத்துவப் பிரிவிற்கு கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. தேன்கனிக்கோட்டை இராயக்கோட்டையில் புதியதாக அரசு மருத்துவமனை கட்டப்பட இருக்கிறது.

**பிற்பட்டோர் நலம்:**

பிற்பட்டோர் நலத்துறையின் சார்பில் சலவைத் தொழிலாளிக்கும், சவரத்தொழிலாளிக்கும் 1,000 கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு 15 விடுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இங்கு தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு ரூ. 15 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**பரிசு பெற்ற ஓசூர்**

1981ஆம் ஆண்டு காந்தியடிகள் பிறந்த நாளை ஒட்டி நடைபெற்ற கதர் விற்பனையில் ஓசூர் கோட்டம் மாவட்டத்திலேயே முதற் பரிசு பெற்றுள்ளது. 2வது பரிசை கிளமங்கலம் கோட்டம் பெற்றுள்ளது.

**வேலைக்கு உணவு அளிக்கும் திட்டம்:**

கிராமப்புறங்களில் சமுதாயச் சொத்துக்களை வளர்க்கவும், கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு நல்கவும், அவர்களது உழைப்பிற்கு ஊதியமாகப் பணம் வழங்குவதற்குப் பதிலாக அரிசி வழங்கித் திட்டங்களை நிறைவேற்ற வேலைக்கு உணவு அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 16 ஊராட்சி ஒன்றியங்களிலும் 3,500 வேலைகள் ரூ. 80 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. இதற்காக 5,500 டன் அரிசி விநியோகிக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ. 20 இலட்சம் மதிப்புள்ள 1,500 வேலைகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. மேலும் இப்பணிகளில் ஏறத்தாழ 5 இலட்சம் பேர் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். தற்போது இத்திட்டம் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் என்ற பெயரில் இயங்கி வருகிறது. இதற்காக மேலும் 1,500 டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்:**

18 வயதிற்கு மேற்பட்ட கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பற்ற ஆண், பெண் இரு பாலருக்கும் வேலை வாய்ப்பு அளிக்க இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 16,000 பேருடையபெயர்கள் பதிவு செய்யப்பட்டு 15,000 பேருக்கு வேலைவாய்ப்புத் தரப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

# வளர்ச்சிப் பணிக்கு உதவும் வணிக வரித்துறை

வணிக வரி என்பது பொதுமக்களால் செலுத்தப்படும் வரியாகும். அதை வணிகப் பெருமக்கள் முகவர்களாக அரசின் சார்பாக வசூல் செய்கின்றனர். இம் மாவட்டம், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர், அரூர் என நான்கு வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் ஓசூர் வட்டம் மட்டும் வணிக வரி அலுவலரின் தலைமையிலும் மற்ற வட்டங்கள் துணை வணிக வரி அலுவலரின் தலைமையிலும் செயல்பட்டு வருகின்றன. இம் மாவட்டத்தின் நிருவாகப் பிரிவு, வணிக வரி உதவி ஆணையரின் கட்டுப்பாட்டிற்குள்ளும் செயலாக்கப் பிரிவு வணிக வரி அலுவலரின் கட்டுப்பாட்டிற்குள்ளும் தருமபுரியில் இயங்குகின்றன.

பொதுமக்களால் செலுத்தப்படும் வரிகள் அனைத்தும் வணிகர்களின் வாயிலாக அரசுக்குச் செலுத்தப்படுகிறதா என்பதையும் அரசு அவ்வப்போது வணிக வரிச் சட்டத்தின் கீழ் கொண்டுவரும் விதிகளின்படி வணிகர்கள் செயல்படுகின்றனரா என்பதையும் வரிவிதிப்பு அலுவலர்கள் கண்காணிக்கிறார்கள்.

செயலாக்கப் பிரிவு அலுவலர்கள் தருமபுரி ,கிருஷ்ணகிரி, ஆகிய இடங்களில் செயல்படுகின்றனர். இவர்கள் இம் மாவட்டத்தில் வரி ஏய்ப்புச் செய்யும் வணிகர்களைக் கண்காணித்து, வரி ஏய்ப்பைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். இந்தியப் பிரதமரின் புதிய இருபது அம்சத் திட்டத்தின் பத்தொன்பதாவது அம்சம் வரி ஏய்ப்பைத் தடுத்தல் ஆகும். அந்தப் பணியை நிறைவேற்ற திடீர்த்தணிக்கையிலும் ஈடுபடுகிறார்கள் இப்பிரிவு அலுவலர்கள்.

அண்டை மாநிலங்களான கருநாடகம் மற்றும் ஆந்திரம் ஆகிய மாநிலங்களிலிருந்து வாகனங்களின் மூலம் வரும் வணிகப்பொருட்களை இம் மாவட்டத்திலுள்ள ஓசூர் மற்றும் இராமாபுரம் ஆகிய தணிக்கைச் சாவடிகளும் இம் மாவட்டத்திலிருந்து தமிழ்நாட்டிலுள்ள மற்ற இடங்களுக்குச் செல்லும் வாகனங்களை, தொப்பூர் மற்றும் காளிப்பேட்டைத் தணிக்கைச் சாவடிகளும் வாகனத் தணிக்கை செய்யும் கண்காணிப்புச் சாவடிகளாகச் செயல்படுகின்றன். இதனால் அரசுக்கு வரிஏய்ப்பு ஏற்படாமல் தவிர்க்கப்படுகிறது.

இம் மாவட்டத்தில் வணிக வரித் துறையின் கீழ் பராமரிக்கப்படும் அனைத்துச் சட்டங்களின் 1966-67ஆம் ஆண்டின் மாதாந்திர மொத்த வருவாய் ரூ. 2 இலட்சம் ஆகும். கடந்த பதினைந்து வருடங்களில் தமிழக அரசின் வரிச் சீர்மைப் பாட்டினாலும் புதிய வணிகப் பெருமக்களின் வருகையாலும், அலுவலர்களின் அயராத உழைப்பாலும் 1982-83ஆம் ஆண்டின் சராசரி மாதாந்திர மொத்த வருவாய் ரூ. 30 இலட்சம் ஆக உயர்ந்திருக்கிறது. இம் மாவட்டத்தில் வேறு எந்தத்துறையின்



வாயிலாகவும் அரசுக்கு இவ்வளவு வருவாய் கிட்டுவதில்லை.

இம் மாவட்டம் மத்திய அரசாலும் மாநில அரசாலும் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழக அரசு ''விற்பனை வரிக்கடனை'' வணிகப் பெருமக்களுக்கு வழங்கி வருகிறது. இத் திட்டத்தின் மூலம் தருமபுரி மாவட்டத்தில், குறிப்பாக ஓசூர் சிப்காட் பகுதியில் அநேக புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன; ஏற்படுத்தப்பட்டும் வருகின்றன. இதன் வாயிலாக, பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டியுள்ளது. இத்திட்டம் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடித் திட்டமாகச் செயல்பட்டு வருகிறது.

தருமபுரியில் இருக்கும் வணிகவரி அலுவலகம், அரசுக் கட்டடத்தில் செயல்படுகிறது. ஓசூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் அரசுக் கட்டடங்களில் வணிக வரி அலுவலகத்தை அமைப்பதற்கு வேண்டிய நில ஒப்படை வேலைகள் நடைபெற்று வருகின்றன. பெருகிவரும் வணிகப் பெருமக்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டும் அலுவலர்களின் வேலைப் பளுவை முன்னிட்டும் சில புதிய அலுவலகங்கள் தொடங்குவதற்கு வேண்டிய ஆயத்த வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

வணிக வரியில் வரி ஏய்ப்புச் செய்யும் நபர்களைப் பற்றித் தகவல் ஆதாரத்துடன் அரசுக்குத் தெரிவித்தால் ,தக்க சன்மானமும் வழங்கப்படுகிறது.

வணிக வரி, தமிழ்நாடு அரசின் மொத்த வருவாயில் மூன்றில் இரண்டு பங்கு ஆகும். எனவே அரசு பல்வேறு சமுதாயத் திட்டங்களை உருவாக்கி, அவற்றை நிறைவேற்றுவதற்கு வணிகவரி பேருதவி செய்து வருகிறது.



# வாழ வழிகாட்டும் வங்கி

“படித்த வேலை இல்லாதவர்கள் கூட்டுறவுத் துறை மூலம் சுயவேலை வாய்ப்புப் பெற மத்தியக் கூட்டுறவு வங்கியின் சார்பில், கடன் வசதி செய்து தருவதற்காக சென்னையில் ஒரு சங்கம் அமைத்து 450 பேர்களுக்குக் கடன் வழங்கவிருக்கிறோம். அடுத்து, அனைத்து மாவட்டங்களிலும் இந்த அமைப்புகளின் கிளைகள் ஏற்படுத்த அரசு உத்தேசித்திருக்கிறது''.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் 29-வது கிளையைத் திறந்து வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

சென்னை அயனாவரத்தில், நவம்பர் திங்கள் 8ஆம் நாள், இந்த வங்கியின் கிளைத் திறப்பு விழா, மறை திரு பால் பாஸ்கோ அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடந்தது.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் மேலும் பேசுகையில் தெரிவித்த கருத்துக்களாவன :

''ஏழை மக்களுக்கு, குறிப்பாகக் கிராமப்புற விவசாய மக்களுக்குக் கூட்டுறவு வங்கிகள் மூலம் நகை மீதான கடன்கள் அளிக்க வேண்டியது அவசியம். இத்தகைய கடன்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும்போது அதற்கு உதவியாக ரிசர்வ் வங்கி மூலம் மறுநிதி பெறும் வாய்ப்பைக் கூட்டுறவு வங்கிகளுக்கு மத்திய அரசு செய்து தர வேண்டும். கிராமப்புறங்களில் பொருளாதார வசதி பெருக, இந்த மறுநிதி பெறும் வசதியை மத்திய அரசு பெற்றுத்தர வேண்டும்.

''வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றத்தினால் விவசாயிகள் பாதிக்கப்படும்போது அவர்களுக்குப் பரிகாரம் அளிக்கும் வகையில், சுழல் நிதி ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தி அதன் மூலம் உதவ வேண்டும்.''

விழாவில் நலிந்தோர்க்கான கடனுதவி மற்றும் சுயவேலை வாய்ப்புத் திட்டத்திற்கான கடன்களை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் வழங்கினார்.

வைப்பு நிதி அதிக அளவில் சேர்த்த சேத்துப்பட்டுக் கிளைக்கும், அதிக அளவில் வாடிக்கையாளர்களைச் சேர்த்த அடையாறு கிளைக்கும் சுழற்கேடயங்களையும் அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

நலிந்தோர்க்குக் கடனாக, செருப்புத் தைக்கும் தொழிலாளிக்கும், மாவரைக்கும் இயந்திரத்தை ஒரு பெண்மணிக்கும், சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடிகாரம் மற்றும் தொலைக் காட்சி பழுதுபார்ப்பவர்களுக்கும் அதற்கான சாதனங்களை அமைச்சர் அவர்கள் வழங்கினார். இவையன்றி மிதி வண்டிகள், துளைபோடும் கருவி ஆகியவற்றையும் அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

பாதுகாப்புப் பெட்டக வசதியின் சாவியினை முதல் வாடிக்கையாளருக்கு, சென்னை மாநகராட்சியின் தனி அலுவலர் திரு. டி. டி. சுந்தரராஜ், இ. ஆ. ப. அவர்கள் வழங்கினார்.

விழா துவக்கத்தில், வங்கியின் தனி அலுவலர் திரு இரெ. ஆறுமுகம் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், ''கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு வழிகோலும் வகையில், ஒவ்வொரு மாதமும் ஒரு கிளையைத் திறக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். அதன்படி சென்னையில் கே. கே. நகர், பெரம்பூர், வில்லிவாக்கம், அண்ணா நகர் மேற்கு ஆகிய பகுதிகளில் இவ்வங்கியின் கிளைகள் விரைவில் திறக்கப்படவிருக்கின்றன'' என்றார்.

கடந்த 77 ஆண்டுகளாக ஏழை எளியவர்களுக்கு - பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு— சுயவேலைவாய்ப்பில் ஈடுபடும் இளைஞர்களுக்குக் கடன்கள் கொடுத்து உதவி, அவர்கள் வாழ வழிகாட்டி வருகின்றது இந்த வங்கி என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட வேண்டும்.

**— பி.வி.ஜி**



# தருமபுரி மாவட்டத்தில் தோட்டக் கலை-மலைப்பயிர்கள் வள...

உணவு உற்பத்தியில் தமிழகம் அடைந்த முன்னேற்றத்தை, காய்கறி மற்றும் பழங்கள் உற்பத்தியிலும் கண்டிட-ஊட்டச்சத்துக்கள் நிறைந்த பழங்கள் மற்றும் காய்கறி உற்பத்திக்கும் மக்கள் சமச்சீர் உணவுத் தேவைக்கும் உள்ள நீண்ட இடைவெளியைப் போக்கிட இப்பயிர்களின் தீவிர முன்னேற்றத்திற்கென 1979-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முதல் தோட்டக்கலை வளங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட தருமபுரியைத் தலைமையகமாகக் கொண்டு தனித்துறை இயங்கி வருகிறது.

ஏறத்தாழ 296 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடனும் 41 திட்டங்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட இத்துறை, நிதி ஒதுக்கீட்டை 533.81 இலட்சம் ரூபாய்களாகவும் திட்டங்களின் எண்ணிக்கையினை 81 ஆகவும் உயர்த்திச் சிறப்பானதொரு வளர்ச்சியினை மிகக் குறுகிய காலகட்டத்தினுள் கண்டுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

தருமபுரி மாவட்டம், வறட்சிக்கு இலக்காகும் பின்தங்கிய பகுதியாக இருந்தும், முக்கனியில் முதல் கனியான 'மா'வின் வளர்ச்சிக்குத் தலையாய இருப்பிடமாய்த் திகழ்வதுடன், ஏனைய தோட்டக்கலைப் பயிர்களான திராட்சை, வாழை, எலுமிச்சை, கத்தரி, வெண்டை, தக்காளி, முட்டைக்கோசு, காலிபிளவர், பீன்சு, ரோஜா, சாமந்தி, மல்லிகை, கனகாம்பரம் போன்றவற்றின் வளத்திற்கும், பெருக்கத்திற்கும் ஏதுவாய்த் திகழ்கிறது.

இதுகாறும் சிறப்பான முறையில் பேணப்படாத இவ்வளத்தினை அரியதொரு முறையில் பயன்படுத்திடவும், இதன் பின்தங்கிய நிலையினை, தோட்டக்கலை வளம் பெருக்கி மேம்படுத்திடவும், சீரிய பல வளர்ச்சித் திட்டங்கள் இம்மாவட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையினரால் செயலாக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் சிலவற்றின் சிறப்பியல்புகளே பின்வருவன:—

நம் மாநிலத்தில், அரசுக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள இரு பெரும் தொன்மையான பழப்பண்ணைகளில் ஒன்றான இம்மாவட்டத்தில் உள்ள இம்மாபுரம் பழப்பண்ணை 1952 ஆம் ஆண்டு முதல் சுமார் 24 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கி வருகிறது. ஆண்டுதோறும் சற்றேறக்குறைய 1,50,000 உயர்ரக, தரமான பழம் மற்றும் இதர வகைச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, குறைந்த விலையில் விநியோகிக்கப்படுகின்றன.

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் 1976-77ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. மண்ணின் தன்மை, வளம், தட்பவெப்ப நிலைகள் அனைத்தும் மா, திராட்சை போன்ற பயிர்களைப் பயிர்செய்ய, மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்படுகிறது. ஒரு எக்டேர் 'மா' பயிரிட ரூ. 2500- திராட்சை பயிரிட ரூ. 10000- மானியமாக வழங்கப்படுகிறது. இதுகாறும் இத்திட்டத்தில் 'மா'வில் 5.6 எக்டேருக்கும், திராட்சையில் 4.8 எக்டேருக்கும் மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. தற்போதைய 'மா' பரப்பான 10,700 எக்டேரைக் கணிசமான அளவிற்கு உயர்த்திடவும் உற்பத்தியினைப்பெருக்கிடவும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மா, தத்துப்பூச்சி தண்டு துளைப்பான் ஆகியவற்றைத் தடுப்பதற்காக ஒட்டு மொத்தத் தரைவழிப் பயிர்ப் பாதுகாப்பு இப்பயிரில் தமிழகத்திலேயே முதன் முறையாகத் தருமபுரியில் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு 4950 ஏக்கர் கொண்டுவரப்பட்டது. இவ்வாண்டும் 6,000 எக்டேர் நிலங்கள் இத்திட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படவுள்ளன. பெரும்பாலும், வாணிபரீதி ரகங்களான நீலம், பெங்களூரா, செந்தூரா போன்றவை, உயர் ரகங்களான மல்கோவா, ஜஹாங்கீர், பாதிரி போன்றவைவற்றைக் காட்டிலும் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. இவைதவிர, பல்வேறு உயர்ரக நடவுப்பொருள்களை உற்பத்தி செய்திட ஜீனூர் என்னுமிடத்தில் பெரும்பழப்பண்ணை ஒன்றும் 250 ஏக்கரில் நிறுவப்பட்டுள்ளது. மேலும் பெல்ராம்



பள்ளி என்னுமிடத்தில் சுமார் 16 எக்டேர் பரப்பளவில் புதிதாக ஒரு பண்ணையினை நிறுவிடத் திட்டமிடப்பட்டு நடப்பு ஆண்டு அரசு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இப்பண்ணையானது தற்போது நிலவிவரும் தரமான நடவுச்செடிகளுக்கான பற்றாக் குறையினை நீக்கிட ஏதுவாகும். மேலும் ஒசூரில் ஒரு தோட்டக்கலை விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டு ஒசூர், சூளகிரி, கெலமங்கலம் மற்றும் தளிப் பகுதிகளில் தேவைப்படும் எல்லாத் தோட்டக்கலை நடவுப்பொருள்களும் இந்நிலையத்திலிருந்து விநியோகிக்கப்படும்.

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத்திட்டம் அரூர் வட்டத்திலுள்ள சித்தேரி மலைகளில் அமலாக்கப்படுகிறது. இம்மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை, பொருளாதார மற்றும் பண்பாட்டுரீதிகளில் உயர்த்திட, தோட்டக்கலைப் பயிர்களைப் பயிரிட்டு உற்பத்தித் திறனைப் பெருக்கிட விதைகள், உரங்கள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் போன்ற இடுபொருள்கள் 50 சத மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இதுதவிர, தோட்டக்கலையில் பயிற்சி அளித்திடல், தோட்டக்கலைச் சிறப்பெய்திய இடங்களுக்குச் சுற்றுலா செல்லல் போன்றவை இதன் பிற அம்சங்களாகும். மேலும் சித்தேரியில் மட்டும் 50 ஏக்கர் அளவிற்கு மலைவாழ் மக்களின் நிலத்தில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 500- மானியத்துடன் பண்ணைகள் அமைத்திட அரசு ஆணை பெறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு விநியோகம் செய்யப்பட்ட நிரந்தரப் பழவகைச் செடிகளைப் பாதுகாக்கும் பொருட்டு, பின் நடவடிக்கை எடுக்கப்படும். இந்நிலையில் இறந்துபோன செடிகளுக்கு மாற்றுச்செடிகளும், உரம் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளும் வழங்கப்படும்.

ஒசூர், தேன்கனிக்கோட்டை போன்ற வட்டங்கள் வளமான நிலமும், சிறந்த வடிகால் வசதியும் ஒருங்கே அமையப்பெற்றுள்ளமையால் அதிக அளவில் எல்லா வகைக் காய்கறிகளும் பயிரிடப்படுகின்றன. குறிப்பாக ஏனைய வற்றுடன் உருளைக்கிழங்கு சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. இதன் வளர்ச்சிக்கும், செழிப்பிற்கான நடவடிக்கைகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. பெட்டமுகுலாளம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் காபிச் செடிகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தளி மற்றும் தேன்கனிக் கோட்டை வட்டங்களில் மலைப் பகுதிகளில் தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் இயங்கி வருகின்றது. எல்லா இடுபொருள்களும் 50 சத மானியத்தில், தோட்டக்கலைப் பயிர்களின் செழிப்பின் பொருட்டு வழங்கப்படுகின்றன.

கிருஷ்ணகிரி மற்றும் ஒசூர்ப் பகுதிகளில் காய்கறிகள் பயிரிட ஏற்ற வசதிகள் அனைத்தும் உள்ளமையால், இதன் பரப்பினையும், உற்பத்தித் திறனையும் அதிகரிப்பதற்காக மலை மற்றும் குன்றுப்பகுதிகளில் காய்கறி அபிவிருத்தி செய்தல் எனும்பிறிதொரு திட்டம் இயங்கிவருகிறது. இத்திட்டத்தின் மூலம் 0.40 எக்டேரில் அமைக்கப்பெறும் ஒவ்வொரு செயல்விளக்கத்திற்கும் ரூ. 100- மானியமும், அனுசரணை ஆராய்ச்சிகளுக்கு ரூ. 50 மானியமும் வழங்கப்படுகின்றன.

மலர்களுக்கு மிகச் சிறந்த விற்பனை வசதிகள் நிலவுகின்றமையால், கனகாம்பரம், சாமந்தி, ரோஜா, மல்லிகை போன்றவை சாகுபடியாகும் பரப்பினை அதிகரிக்க மலர்கள் அபிவிருத்தித் திட்டம் செயலாக்கப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ், புதிதாக



மலர்ச் சாகுபடிகளில் கொணரும் பகுதிகளுக்கு இடுபொருள்கள் அனைத்தும் 50 சத மானியத்தில் வழங்கப் பெறுகின்றன. தோட்டக்கலைச் சங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின் செயலாக்கங்களினால் தன்னகத்தே பெற்றுள்ள தோட்டக்கலை வளமும் வாய்ப்பும் நன்முறையில் பயன்படுத்தப்பெற்று, தருமபுரி மாவட்டம் - தன்னிறைவு பெற்றுத் தனித்து விளங்கும் என்பதில் வியப்பேதுமில்லை.

## ஊத்தங்கரையில் கூட்டுறவு நூற்பாலை...

தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் 12 ஆலைகள் உள்ளன. பின் தங்கிய பகுதிகளில் கூட்டுறவு ஆலைகளை உருவாக்கி தொழில் வளத்தைப் பெருக்க வேண்டும் என்று தமிழக அரசு திட்டமிட்டு வருகிறது. அறந்தாங்கி, தேனி, எட்டையபுரம், கமுதி, ஊத்தங்கரை ஆகிய இடங்களில் கூட்டுறவு நூற்பு ஆலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஊத்தங்கரையில் 40 ஏக்கர் நிலப்பரப்பில் அமைய உள்ள ஆலை, 25 ஆயிரம் கதிர்களைக் கொண்டு இயங்கும். ஏறக்குறைய ரூ. 7.6 கோடி மதிப்பீடு கொண்டுள்ள இவ்ஆலை செயல்படத் தொடங்கும்போது ஏறக்குறைய 1000 பேர் வேலை வாய்ப்புப் பெறுவர்.

ஆண்டுக்கு 22.56 இலட்சம் கிலோ எடையுள்ள நூல் உற்பத்தியாகும். இதில் 70 சதவிகிதம் சிட்ட வடிவில் கைத்தறிக்கும், 30 சதவிகிதம் கூம்புருளை வடிவத்தில் இயந்திரத் தறிகளுக்கும் பயன்படுத்தப்பெறும்.

இந்த ஆலையில் அமைக்கப்படும் இயந்திரங்கள் அனைத்தும் கோவையிலே தயாரிக்கப்பட்டவை என்பதும், முழுக்க முழுக்க அவை உள்நாட்டு இயந்திரங்கள் என்பதும் குறிப்பிடத்தக்க செய்திகள். மாவட்ட ஆட்சித் தலைவரை, தலைவராகவும் திரு பி.கே. பெரியசாமி அவர்களை நிருவாக இயக்குநராகவும் கொண்டுள்ள இவ்வாலையில் அரசு நியமிக்கும் பிரதிநிதிகள் இயக்குநர்களாக இருப்பர் எனத் தெரிகிறது.

1983 செப்டம்பர் மாதத்திற்குள் உற்பத்தியைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. 1984 மார்ச்சுக்குள் இந்த நூற்பாலை தனது உச்சகட்ட உற்பத்தியை எய்தும்.

பருத்தியிலிருந்து கொட்டை நீக்கிச் சுத்தம் செய்யும் தொழிற்கூடம் ஒன்றினை, இந்த ஆலையின் அருகில், கூட்டுறவுத்துறையின் மூலமாக நிறுவுவதற்குரிய பணிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.



# தருமபுரி மாவட்டத்தில் பால் வளப் புரட்சி!

வறட்சிப் பகுதிக்கு வளம்தரும் தொழில்களில் முதன்மையானது பால் உற்பத்திப் பணி. பால் உற்பத்தி மூலம் பல்லாயிரக் கணக்கான இம்மாவட்ட மக்களின் வருவாயைப் பெருக்கும் இப்பணி 1974-ஆம் ஆண்டு மத்தூரை மையமாகக் கொண்டு துவக்கப்பட்டது. தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் ஆற்றல் மிக்க இப்பணிக்குப் பேருதவியாக இருந்தவை அரசின் டி. பி. ஏ. பி. மற்றும் ஐ. ஆர். டி. பி. திட்டங்களாகும்.

'தரமான பாலுக்குத் தகுந்த விலை, வளமான கால்நடை வளர்ப்பிற்கோர் புதிய முறை' என்ற அடிப்படையில் புதிய சங்கங்களை கிராமங்கள்தோறும் தொடங்க ஆய்வு செய்யப்பட்டன. இதற்கென அமைக்கப்பட்ட பால்சேகரிப்புக் குழுவினர் ஒவ்வொரு பால் உற்பத்தியாளரையும் அணுகிப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் பயன்களை விளக்கினர். 'கூட்டுறவுத் தத்துவத்தின் வெற்றியே தகுந்த தலைமையைப் பொறுத்தது' - என்பதை அறிந்து சிறந்த தலைவர்களைக் கண்டெடுத்து சங்கங்களை நிர்வகிக்கும் பொறுப்புக்களை ஒப்படைத்தனர். படித்துப் பணியின்றி இருக்கும் உள்ளூர் இளைஞர்களையே சங்கத்தின் செயலர், பரிசோதகர் எனத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி தந்து பணியில் ஈடுபடுத்தினர்.

'பாலின் அளவுக்கேற்ற விலை' என்பதைத் தவிர்த்து 'தரத்திற்கேற்ற விலை' என்று அறிந்து பாலில் உள்ள கொழுப்புச் சத்திற்கேற்றவாறு விலை நிர்ணயிக்கப்பட்டதால், மக்கள் மனங்களெல்லாம் உயர்ந்த விலையைக் கண்டு உவகை அடைந்தன, ஊக்கம் பிறந்தது.

13 கிராமங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை முதன் முதலில் துவக்கிய பணி இன்று 369 சங்கங்களாக விரிவடைந்துள்ளது.

தருமபுரி மற்றும் கிருட்டிணகிரி ஆகிய இரண்டு இடங்களில் உள்ள பால் சேகரிப்புக் குழுக்கள் இச்சங்கங்களைத் துவக்குவதிலும், வளர்ப்பதிலும் கவனம் செலுத்தி வருகின்றன.

கிராமங்களில் சேகரிக்கும் பாலைக் கெடாமல் பக்குவமாகப் பாதுகாக்க வேண்டும். இதற்காக நாளொன்றுக்கு 50,000 லிட்டர் குளிர்விக்கும் திறம்படைத்த பால் குளிரூட்டும் நிலையமொன்று தருமபுரியிலும் 10,000 லிட்டர் குளிர்திறன் படைத்த பால் குளிரூட்டும் நிலையமொன்று கிருட்டிணகிரியிலும் நிறுவப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

1981-ன் பிற்பகுதியிலும் 1982-ம் ஆண்டின் முற்பகுதியிலும் நமது மாவட்டத்தில் ஏற்பட்ட கடுமையான வறட்சியின்போது மக்களின் வருவாய் தரும் தொழிலாக இருந்து அவர்களைக் காத்தது இப் பால் உற்பத்தித் தொழிலாகும்.

மாவட்டம் முழுவதுமுள்ள அனைத்துக் கிராமங்களிலும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களைத் துவக்கி, பால் உற்பத்தியை அதிகப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பால் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருகின்றன.

தரமான பாலுக்குத் தகுந்த விலை நிர்ணயம் செய்ய, நாள்தோறும் இரண்டு முறையும் பாலில் உள்ள கொழுப்புச் சதவீதம் கணக்கிடப்பட்டு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

உறுப்பினர்கள் ஊற்றும் பாலுக்கு வாரம் ஒருமுறை தவறாமல் பால் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது.

இலவச கால்நடை மருத்துவ வசதி வாரம் ஒருமுறை கால்நடைகளுக்கு அளிக்கப்படுகிறது.

இரவு பகல் எந்நேரமும் அவசர கால மருத்துவ உதவி பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்குக் கிடைக்கிறது.

குறைந்த விலையில் தரமான ஆவின் கலப்புத் தீவனம் வழங்கப்படுகிறது.

தீவனப் புல் வளர்க்க மானியமும், இலவச விதைகளும் வழங்கப்படுகின்றன.

சங்கத்திலேயே உறைவிந்து செயற்கை முறைக்கருவூட்டல் செய்யப்படுகிறது.

உள்ளூரில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

சங்கம் பெறும் இலாபம் ஆண்டு முடிவில் போனஸாகப் பிரித்தளிக்கப்படுகிறது.

சங்கத் தலைவர்களும், உற்சாக மிக்க பால் உற்பத்தியாளர்களும் வேறு மாநிலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பால் பண்ணை முறைகளைப் பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

சங்கங்களுக்கு துவக்கத்தில் தேவையான அனைத்துப் பொருட்களும் இலவசமாகவே டி. பி. ஏ. பி. ஐ. ஆர். டி. பி. திட்டங்களின் மூலம் வழங்கப்படுகின்றன.

இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 1986-க்குள் சுமார் 83,000 விவசாயிகள் பயனடையும் வகையில் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களை 500 ஆக உயர்த்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் பால் உற்பத்தியை மிகக் குறுகிய காலத்தில் அதிக அளவு பெருக்கி மக்களின் பொருளாதார வாழ்க்கையை வளப்படுத்த மேற்குறிப்பிட்ட திட்டங்கள் பெருமளவு உதவியுள்ளன.

இத்துடன் பவுடர் தொழிற்சாலைக்கு 175 இலட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுள்ளன. இத்தொழிற்சாலை 1983-ம் ஆண்டு முதல் பகுதியில் செயல்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வளர்ந்து வளம் பெற்றுள்ள இச்சங்கங்கள் மேலும் சிறப்பாக வளரத் தமக்குள் இணைந்து மாவட்ட ஒன்றியம் ஒன்றை அமைத்து 1— 11— '82 முதல் ஒன்றியத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயலாற்றிவருகின்றன

சிறப்பான பராமரிப்பில் அமுதசுரபியென வருவாய்தரும் கறவைகள், வாழ்வை வளமாக்கிக் கொள்ள உழைக்கத் தயங்காத மக்கள்.

மக்களின் முயற்சிகளைச் செயல்முறையாக்கத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யும் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள்.

சங்கங்களின் நலனில் அக்கறைகொண்டு, சிறப்பாக வழிகாட்டிவரும் மாவட்ட ஒன்றியம்.

உற்சாகத்துடன் - ஊக்கத்துடன் - உயர வைக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் கிடைக்கும் வாய்ப்புக்களை அரசின் மூலம் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற துடிப்புடன்-ஆற்றலுடன் செயல்படும் பெருந்தலைவர்!

அனுபவத்தால் - செயல்திறனால் -அடிப்படை வளர்ச்சியை உண்டாக்கும் ஆவலால் பணியாற்றும் நிருவாக இயக்குநர்!

வறண்ட மாவட்டத்தை வற்றாத வளஞ்சுரக்கும் பூமியாக மாற்ற, இணைந்து நின்று ஆக்கப்பணிகளுக்கு ஆலோசனை கூறும் நிர்வாகக் குழு!

'மக்களின் மனநிறைவுகளே நமது பணிகளின் குறிக்கோள்' என்ற உணர்வில் பணியாற்றத் தயங்காத பணியாளர் கூட்டம்..

என்று இவ்வாறு எத்திக்கு நோக்கினும் இம்மாவட்டத்தில் பால் உற்பத்தியை உயர்த்துவதற்காகச் செய்யப்பட்டு வரும் ஏற்பாடுகள்! அமைக்கப்பட்டு வரும் வலுவான அடிப்படைத் திட்டங்கள்! செயல்படுத்தத் தேவையான நிதி உதவிகளைத் தயக்கமின்றி அள்ளித்தரும் அரசின் நிதித் திட்டங்கள்.

'முன்னேற்றத் திட்டமா'? முதலில் நாங்கள் பின்பற்றுவோம்' என்று விரைவோடு கூறிச் செயல்படுத்தும் இம்மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் உண்மைப் புரட்சி இவ்வெண்மைப் புரட்சி, ஆம் வெள்ளைநிறப் பாலின் புரட்சி மக்களின் வாழ்விற்கு வளம் தரும் எதிர்கால வளர்ச்சி!

கிருஷ்ணகிரியில் அமைக்கப்பட்டு வரும் பால் பவுடர் தொழிற்கூடம், பால் குளிரூட்டும் மையம்





# உழவர் பயிற்சி நிலையம்

தமிழ்நாட்டில் 15 உழவர் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் இரண்டு உழவர் பயிற்சி நிலையம் வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடனும், ஒன்று தோட்டக்கலையின் நேரடிப் பார்வையிலும் செயல்பட்டு வருகின்றன. இருப்பினும் இராமநாதபுர மாவட்டத்திலும், தருமபுரி மாவட்டத்திலும் இயங்கி வரும் உழவர் பயிற்சி நிலையங்கள் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் செயல்படுகின்றன. தருமபுரி மாவட்ட உழவர் பயிற்சி நிலையம் 1978ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2ஆம் நாள் முதல், தருமபுரி மாவட்ட அபிவிருத்திக் குழுவினரின் நிருவாக இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆலோசனைகளைப் பெற்று இயங்கி வருகிறது. ஏனைய 10 உழவர் பயிற்சி நிலையங்கள் வேளாண்மை இயக்குநரின் நேரடிப் பார்வையின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

தருமபுரி உழவர் பயிற்சி நிலையத்தில் துணை வேளாண்மை இயக்குநரின் தலைமையின் கீழ் மூன்று உதவி வேளாண்மை இயக்குநர்கள் மற்றும் ஒரு வேளாண்மை அலுவலர் ஆகியோர் பணியாற்றி வருகின்றனர்.

இம் மாவட்ட உழவர் பயிற்சி நிலையத்தோடு இணைந்து 200 ஆண்கள் விவாதக் குழுக்களும் 100 பெண்கள் விவாதக் குழுக்களும் செயல்படுகின்றன. நல்ல முறையில் செயலாற்றி வரும் விவாதக்குழு அமைப்பாளர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டு, அமைப்பாளர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கு நிலையப் பயிற்சியளித்தல், ஊராட்சி ஒன்றியங்களில் அமல் நடத்தும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகளில் ஒன்றான விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தலிலும், மற்றும் பயறு சாகுபடித் திட்டப் பயிற்சி முகாம்களிலும் உழவர் பயிற்சி நிலைய அலுவலர்கள் பங்கேற்று நன்முறையில் வேளர்ண்மைப் பெருமக்களுக்கு நன்மை புரிந்து வருகின்றனர். இதன் பயனாகச் சுமார்ச் 900 வேளாண்மைக் குடிமக்களுக்குச் சிறப்புப் பயிற்சிகளும், நேரிடை நிரூபணங்களும் செய்து காட்டப்பட்டுள்ளன. மேலும் இந்நிலையம் அவ்வப்போது வானொலி மூலம் விவசாயிகளுக்குப் புதிய செய்திகளை ஒலிபரப்ப ஏற்பாடுகள் செய்தல் விவசாயிகளுக்கு உபயோகப்படும் வகையில் கையேடுகள், பிரசுரங்கள், சுவரொட்டிகள் அச்சிட்டு வெளியிடுதல், ஒவ்வொரு மாதமும் 'உழவர் உயர் வேளாண்மை' எனும் மலரை வெளியிடுதல், அமைப்பாளர்களுக்குக் கல்விச் சுற்றுலா ஏற்பாடுகள் செய்தல், மேலும் விவசாய சம்பந்தமாக திரைப் படங்கள், சிலைடுகள் காட்டுதல் ஆகிய பணிகளில் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக பணியாற்றி வருகிறது.

1980-81ம் ஆண்டு ஒதுக்கப்பட்ட 2.11 இலட்சம் ரூபாய் நிதி பயன்படுத்தப்பட்டு அனைத்துத் திட்டங்களும் நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டன. 1981-82ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட 2.50 இலட்சம் ரூபாய் நிதி பயன்படுத்தப்பட்டுப் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தவிரவும் இந்நிலையத்தின் கீழ் இம்மாவட்ட இளைஞர்களுக்கு வேளாண்மைத் தொழில் நுட்பங்களை அறியும் பொருட்டு வேளாண்மைப் பள்ளி ஒன்று, வேளாண்மை அலுவலரை ஆசிரியராகக் கொண்டு, பாப்பாரப்பட்டி அரசு வித்துப் பண்ணையில் செயல்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் 20 இளைஞர்களுக்கு இப்பள்ளியில் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் சுமார் ரூ. 56,000 - நிதி ஒதுக்கீட்டுடன் செயல்பட்டு வருகிறது. உதவிப் பொறியாளர் ஒருவரின் துணையுடன் இம்மாவட்ட இளைஞர்களுக்கு, சுயவேலை வாய்ப்புப் பெற வேளாண்மைக் கருவிகள், இயந்திரங்கள் ஆகியவற்றைப் பற்றிப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு 46 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு சுமார் ரூ. 10,500 செலவு செய்யப்பட்டுள்ளது.

## தருமபுரி மாவட்ட வேளாண்மை முன்னேற்றத்தில் மண் ஆய்வுப் பணியின் பங்கு

தருமபுரி மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி, 1972ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் இம்மாவட்டத்தில் மண் பரிசோ

தனை நிலையம் ஒன்று இயங்கி வருகிறது.

இதன் குறிக்கோள்கள் வருமாறு:—

மண்ணிலுள்ள தாவர சத்துக்களின் நிலையறிந்து அதற்கேற்பப் பயிர்களுக்கு உரச் சிபாரிசுகளைப் பரிந்துரை செய்தல்.

மண்ணின் நோய்களான களர், உவர் மற்றும் அமிலத் தன்மைகளைக் கண்டு பிடித்து, அவற்றை நிவர்த்தி செய்யப் பரிந்துரை வழங்கல்.

நீர் மாதிரிகளை ஆய்வு செய்து பாசனத்திற்கு உகந்ததா, இல்லையாவென்பதைத் தேர்ந்து, பரிந்துரை செய்தல்.

இம்மாவட்டத்தில் காணப்படும் மண் வகைகளுக்கு ஏற்ப, உர மதிப்பீட்டு ஆய்வுத்திடல்களை அமைத்து, முக்கியப் பயிர்களுக்கு உரச் சிபாரிசுகளை நிருணயித்தல்.

**நடமாடும் மண் பரிசோதனை நிலையம்**

இம்மாவட்ட விவசாயிகளுக்கு மண் பரிசோதனையில் நேர்முகத் தொடர்பு உண்டாக்கவும், மேலும் மண் பரிசோதனையில் அவர்களை நேரிடையாக ஈடுபடுத்தும் நோக்கத்துடனும், இயங்கும் மண் ஆய்வுக் கூடம் ஒன்று 1976ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இதன் மூலம் ஆண்டுக்கு சுமார் 18,000 விவசாயிகள் மண் ஆய்வு மூலம் பயனடைய வாய்ப்பளிக்கப்பட்டு வருகிறது. மேலும் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் 1980ஆம் ஆண்டு முதல், பழைய இயங்கும் மண் ஆய்வுக் கூடத்திற்குப் பதிலாக ஒரு புதிய ஊர்தியுடன் இயங்கும் மண் ஆய்வுக் கூடம் செயல்பட்டு வருகிறது. மாதம் ஒன்றுக்கு சுமார் 1,500 மண் மாதிரிகளை இந்த இயங்கும் மண் ஆய்வுக் கூடத்தில் ஆய்வு செய்வதற்கு வசதி இருக்கின்றது.

**உரப் பரிசோதனைத் திடல்கள்:**

மண், மற்றும் நீர் மாதிரி ஆய்வுகளைத் தவிர, கீழ்க் கண்ட ஆய்வுத் திடல்களையும், இம்மண் ஆய்வுக்கூடம் அமைத்து வெற்றி கண்டிருக்கிறது.

மண் ஆய்வுப் பரிந்துரையின் உயர்வினை நிரூபிக்க 1973-74ஆம் ஆண்டில் 32 பரிசோதனை வயல்களை அமைத்ததில், 32 ஆய்வுகளிலும் மண் ஆய்வு உரப் பரிந்துரை விவசாயியின் உர மிடும் முறையினை விட அதிக மகசூல் அளித்தது.

மண்ணில் மணிச்சத்தும், சாம்பல் சத்தும் அதிகமாக இருப்பின் அந்நிலத்திற்கு மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து உரங்கள் இட வேண்டுமா என்பதை நிருணயிக்க 1974-75ல் நெல் ஆய்வு வயல்கள் அமைத்து, ஆய்வு செய்யப்பட்டது.

1976 முதல் 1980ஆம் ஆண்டு வரை 14 நுண்ணூட்டச் சத்துப் பரிசோதனைப் பாத்திகளை அமைத்து, நுண்ணூட்டச் சத்துக்களை நிலங்களுக்கு இடுவதன் மூலம், பல்வேறு பயிர்களிலும், அமோக விளைச்சலை அதிகப் படுத்தலாம் என்பது நிரூபணம் செய்யப்பட்டது.

1976-முதல் 1981ஆம் ஆண்டு வரை 52 உர மதிப்பீட்டாய்வுத் திட்டங்களை அமைத்து, நெல், சோளம், சூரியகாந்தி, உருளைக் கிழங்கு, முட்டைக்கோசு, தக்காளி போன்ற முக்கியப் பயிர்களுக்கு, மண் பரிசோதனை முடிவுக்கேற்ப உரச் சிபாரிசுகள் நிருணயிக்கப்பட்டன.

பயறு வகைகளின் அதிக மகசூலுக்கு, நுண்ணுயிர்க் கலவையின் திறனை நிருணயிக்க 1980-81ஆம் ஆண்டில் 10 ஆய்வுத் திடல்கள் அமைக்கப்பட்டன.

1980-81 ஆண்டுகளில் முக்கிய பயிர்களைக் கொண்டு, 'மண் பரிசோதனை பின் தொடர்' ஆய்வு திடல்கள் 12 அமைக்கப்பட்டு, மண் பரிசோதனை செய்து, அதற்கேற்ப உரமிட்டால் சிறந்த மகசூல் அடையலாம் என்பது நிரூபணம் செய்யப்பட்டது.

ஒரு மண்மாதிரியினை ஆய்வு செய்வதற்கு அதிகமான செலவு ஏற்படினும், விவசாயிகளின் நலன் கருதி, ஒரு மண் மாதிரி அல்லது நீர் மாதிரியினை ஆய்வு செய்வதற்கு, ஆய்வுக் கட்டணமாக ரூபாய் 100 மட்டும் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

## புதிய கலப்பை



தருமபுரி மாவட்டத்தில் தீவிர உரமிடும் இயக்கம் நடைமுறையில் உள்ளது. அந்தத் திட்டத்தின் கீழ் விதையும் உரமும் ஒரே சமயத்தில் போடும் வகையில் புதிய ரகக் கலப்பை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. 'ஈநாட்டு விதைக் கலப்பை' என்று இது வழங்கப்படுகிறது. இதன் விலை ரூ. 450-

மானாவாரி விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறையின் மூலம் இலவசமாக 10 கலப்பைகளை 'மெட்ராஸ் பெர்ட்டிலைசர்' என்னும் உரத் தயாரிப்பு நிறுவனம் இம்மாவட்டத்தில் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. 1000பெருவிளக்கப்பண்ணைக்கு ஒரு கலப்பை வீதம் இது வழங்கப்பட்டுள்ளது.

## விளையும் பயிர்



மாணவ மாணவியர் மணியாகத் திகழ்ந்திட, அவர்கள் மனத்திலே நல்ல கருத்துகளைத் தூவவேண்டும். ஒரு மாணவரது திறமைக்கு அவரது பெற்றோர்களும், ஆசிரியர்களுமே முக்கிய காரணமாக விளங்குகிறார்கள்.

இந்த வகையில், சேலம் மாவட்டம், வேலகவுண்டம் பட்டி, அரசு மேல்நிலைப் பள்ளியில் 9ஆம் வகுப்புப் படிக்கும் மாணவி கே. வாசுகி, படிப்போடு பலதுறையிலும் சிறந்து விளங்குகிறார்.

மாணவி வாசுகி திருக்குறளை ஒப்புவிப்பதில் சிறந்து விளங்குகிறார். இவருக்கு 1330 குறள்களும் மனப்பாடம். எந்தக் குறளை எப்படிக் கேட்டாலும், எப்போது கேட்டாலும் இவர் சொல்லத் தயார். அதுமட்டுமன்று, அதிகாரம், குறள் எண் என்ன என்பதையும் இவர் உடனே சொல்கிறார்; பிழையின்றி அழகாக எழுதியும் காட்டுகிறார். இவர் திறமையைப் பாராட்டிப் பல பரிசுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

## மாணவர் பக்கம்

இந்தியாவில் முதன் முதலாக உடற்பயிற்சிக் கல்லூரியை நிறுவியவர் 'ஹாரி க்ரோபக்' என்பவர். அக்கல்லூரி சென்னையிலுள்ள Y.M.C.A. College of Physical Education

விம்பிள்டனில் விளையாடிய முதல் இந்தியர் சர்தார் நிகல் சிங் தான். 1908- ல் விளையாடினார்.

முதன் முதலில் தெலுங்கில் சிறு கதை எழுதியவர் குருஜாடா அப்பாராவ் என்பவரே.

முதன் முதலில் இந்தியாவில் வருமானவரி அமலானது 1886-ல் தான்

முதன் முதலில் தமிழில் சிறுகதை எழுதியவர் வ. வே. சு. அய்யர்

இந்தியாவைப் பற்றிய முதல் தேசப்படம் 1752-ல் டா ஆன்வில் என்னும் பிரெஞ்சுக்காரரால் வெளியிடப்பட்டது.

1904 ஆம் ஆண்டு 'செயிண்ட் லூயிஸ்' லில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் தான் பெண்கள் முதன் முதலில் பங்கேற்றனர்.

முதன் முதலாக தாவர இனத்திலிருந்து உயிர்ப் பிராணியாக மாறிய ஒரே ஜீவராசி கடல் தாமரை.

உலகில் ஐந்தாண்டுத் திட்டத்தை முதன் முதலாக அமுல்படுத்திய நாடு சோவியத் ரஷ்யா. அதற்குக் காரணமாக இருந்தவர் ஸ்டாலின்.

சென்னை நகரின் முதல் பெண் மேயர் திருமதி தாரா செரியன்

இந்தியாவின் முதல் பெண் முதலமைச்சர் திருமதி சுசேதா கிருபாளனி.

இந்தியாவின் முதல் பெண் கவர்னர் திருமதி சரோஜினிநாயுடு.

இரும்பு ஊசிகளை (நூல் ஊசி) முதன் முதலில் உருவாக்கியவர்கள் சீனர்கள் தான். நன்றி: விஞ்ஞானச் சுடர்

# முதன் முதலில்

## பசுமை மனம் வேண்டும்!

அப்பா அம்மா பேச்சை-நாளும்
தப்பாம கேளு
எப்போ தும் நல்ல-பேரு
இருந்திடும் பாரு!

வீட்டு வேலை செய்ய-என்றும்
விசனப் படாதே
நாட்டு வேலை செய்ய-உன்னை
நடத்திச் செல்லுமே!

ஏசு புத்தர் நபிகள்-சொல்லை
எண்ணிப் பார்க்கணும்
மாசு இல்லா உள்ளம்-உன்னை
மனித னாக்குமே!

புத்தம் புதிய மலரைப்-போல
பூத்துச் சிரிக்கணும்
நித்தம் நித்தம் கடவுள்-உந்தன்
நினைப்பில் இருக்கணும்!

உயிர்க ளெல்லாம் ஒன்று-என்ற
உணர்வு வேண்டுமே
பயிர்களைப் போல் பசுமை-மனத்தில்
பரவ வேண்டுமே!

பி. வி. கிரி



சேலத்தில் நடைபெற்ற 'சேலம் அரசுப் பொருட்காட்சி–1982'ல் 'சேலம் நகராட்சி அரங்கில்' பள்ளிகளுக்கு என ஒதுக்கப்பட்ட அறிவியல் பகுதியில் சேலம் சுப்பிரமணிய நகர், ஸ்ரீராமகிருஷ்ணா சாரதா மேனிலைப் பள்ளியும் கலந்து கொண்டது. மாணவ மணிகளின் அறிவியல் படைப்புகள் யாவும் இங்கு வைக்கப்பட்டிருந்தன. இந்தப் படைப்புகளைப் பார்த்துப் பலரும் பாராட்டினார்கள். அறிவியல் படைப்பில் பங்கு கொண்ட மாணவர்கள் 1. பாலகிருஷ்ணன், 2. இராஜேஸ்வரன், 3. ஞானசேகர் 4. செந்தில்.

### நோபல் சமாதானப் பரிசு

ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த ஆல்வா மிர்தால், மெக்ஸிகோ நாட்டைச் சேர்ந்த அல்பான்ஸோ கார்ஸியா ரோபிள்ஸ் ஆகிய இருவரும் 1982-ஆம் ஆண்டு நோபல் சமாதானப் பரிசைக் கூட்டாகப் பெறுகிறார்கள்.

ஐ. நா. ஆயுதக் குறைப்புப் பேச்சு வார்த்தைகளில் அவர்கள் இருவரும் பல ஆண்டுகளாக முக்கிய பங்கினை வகித்து வந்துள்ளார்கள் என்று இந்தப் பரிசை அறிவித்த நார்வே நாட்டு நோபல் பரிசுக் குழுவின் தலைவர் கூறியுள்ளார்.

## கேள்வியும் பதிலும்

**நீர் மூழ்கிக் கப்பல் எந்தத் தத்துவத்தைக் கொண்டு இயங்குகிறது ?**

நீர் மூழ்கிக்கப்பலில் உள்ள அறையில் நீரை நிரப்பினால் அது கீழே செல்லும். அந்த நீரை வெளியே தள்ளி விட்டால் மேலே மிதக்கும். முன் பின் இயக்கம் கப்பலைப் போன்றது.

**சாதாரணமாக ஒரு மின் விசிறி சுழலும் போது அது காற்றை எவ்வாறு பிரிக்கிறது ?**

காற்று மூலக் கூறுகள் மின் விசிறியின் கைகளால் உந்தித் தள்ளப்படுவதால் காற்று வீசுகிறது. காற்றில் மூலக் கூறுகளுக்கு இடையே உள்ள தூரம் விசிறியின் கையின் கனத்தை விட அதிகம். ஆகையால் இது வெட்டிப் பிரிப்பது போல அல்ல.

நன்றி: கலைக்கதிர்




### திறமைக்கு வயதில்லை !

மூர்த்தி சிறியதானாலும், கீர்த்தி பெரியது என்பார்கள். புதுடில்லியில் நடைபெற்ற 9வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 33 நாடுகளைச் சார்ந்த வீரர்கள் வீராங்கனைகள் கலந்து கொண்டார்கள், அவர்களில் வயதில் மிகவும் குறைந்த சிறுமி ஒருத்தியும் கலந்து கொண்டார். அவர் பெயர் அல் ஷராபி.

ஏமன் நாட்டைச் சேர்ந்த இந்தச் சிறுமிக்கு வயது எட்டே எட்டு தான்! இவர் டேபிள் டென்னிஸ் போட்டியில், ஒரு பந்தை ஓங்கி அடிப்பதைப் படத்தில் காணலாம்.



# மகாகவி பாரதியார்

சமுதாயத்தில் மலிந்து கிடந்த மூடநம்பிக்கை, சாதி வெறி, அடிமைப்படுத்தும் அநாகரிகமான வாழ்க்கைமுறை, கோழைத்தன்மை, பெண்ணடிமை போன்ற கொடுஞ்செயல்களைக் கண்டு தனது மதியறிவால் - பேனா முனையை அம்பு முனையாக்கி எய்தினார், எழுதினார் அமர மகாகவி பாரதி.

முதலில் பாரதி கூறுவது ஒற்றுமை. நாம் எந்தக்குலம்,எந்தச் சாதி, எம்மதம், எந்நிறமாயினும் நம் அனைவரின் உடலிலும் ஓடுவது ஒரே நிற இரத்தம். நாம் அனைவரும் நினைக்கும் நினைவுகள் யாவும் ஒன்றே.

''நாலு வகுப்பும் இங் கொன்றே- இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்
வேலைதவறிச் சிதைந்தே-செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி''

அடுத்து, நம் பாரதத்தை ஒரே குடும்பமாக்கிப் பார்க்கிறார். அவ்வாறு நாம் இருப்பதைப் பகைவன் கண்டுபொறாமை கொளல் வேண்டுமென்கிறார்.

''முப்பதுகோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொதுவுடைமை;
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை''

நம் நாட்டில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளில் முதன்மையானது வரதட்சணை. இவற்றையெல்லாம் முறியடிக்கும் வகையில் பெண்ணுக்கே தங்களது உரிமை வாழ்க்கைப் பாதையை அமைத்துப் புதிய மாற்றத்தை அமைத்துத் தருகிறார்.

''காதலொருவனைக் கைப்பிடித்தே-அவன்
காரியம் யாவினும் கை கொடுத்து''-

இவ்வாறு உரிமையைப் பெற வேண்டுமெனில் நற்கல்வியைப் பயின்று அதன் மூலம் கிடைக்கும் வருவாயை இருவரும் சம்பாதித்து வாழ்க்கைச் சுமையை பகிர்ந்து கொண்டு, பிறர்க்கு அடிமையாக வாழ ஒண்ணாமல் வாழலாமென்கிறார்.

''பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி!''

அடுத்து, நாட்டைப் பற்றிக் கூறும்போது பழமையுடைய நாடு; பரந்த நாடு, பல செல்வங்களெங்கணும் நிறைந்த நாடு, வளங்கொழிக்க வைக்கும் பல ஆறுகளையுடைய நாடு, பலமொழி இனத்தவர்களும் வாழும் பாரத பூமி எம்நாடு; படை பலத்திலும் வீரத்திலும் சிறந்த நாடு என்று ஆனந்தக் களிபாடுகின்றார்.

''பாருக்குள்ளே நல்லநாடு-எங்கள் பாரத நாடு;
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே!''

முக்கடலும் ஒன்று சேர்கின்ற எல்லையை முடிவாகவும், உலகிலேயே மிகப் பெரிய அளவில் வானளாவி நிற்கின்ற இமயத்தை ஆரம்பமாகவும் கொண்டது எம் நாடு என்கிறார்.

''நீலத்திரைக் கடலோரத்திலே- நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை,
விண்ணையிடிக்கும் தலைஇமயம்'

மேலும் பாரத நாட்டை, பார் மிசையிலே உயர்ந்த நாடு, ஒழுக்கம் உள்ள நாடு என்று பெருமிதம் கொள்கிறார் பாரதி.

''பாரத நாடு பார்க்கெலாம் திலகம்
நீரதன் புதல்வர்''

அடுத்து, சமுதாயத்தை நோக்கும்போது, இச்சமுதாயம் பல்வேறு இனம், மொழி, மதம் போன்றவைகளைக் கொண்டதாக இருப்பினும், நாம் அனைவரும் ஒன்றேகுலம் என்ற உணர்வில் வாழவேண்டுமென்று கூறுகிறார். மனித சமுதாயத்தில் எவருக்காகவது உணவில்லை எனில் பகிர்ந்து ஈனும் பழக்கம் நம்மிடத்திலிருக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் இச்சமுதாயத்தை அழித்து விடுவோம் என்று கூறுகிறார்.

''தனியொருவனுக்குண வில்லையெனில்
சகத்தினை அழித்திடுவோம்''

மொழியைப் பற்றிக் கூறுகையில், தமிழ்மொழி மற்றமொழிகளைவிட பழமை வாய்ந்தது என்றும், இதற்கு இணையானது வேறுமொழி எதுவும் கிடையாதென்றும் கூறுகிறார்.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவது எங்கும்காணோம்''

[மகாகவி பாரதியார் விழா வினையொட்டி, பிரான்சு நாட்டின் தலைநகரான பாரிசில் 6.6.1982 அன்று நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் பாராட்டுப் பரிசைப் பெற்றகட்டுரையின் சுருக்கமே இது.]

**துரை. தணிகாசலம்**
**மூன்றாமாண்டு இளம் வேதியியல், டாக்டர் அம்பேத்கார் அரசு கலைக்கல்லூரி, வியாசர்பாடி, சென்னை-39.**

## ஃபிஜி தீவினிலே...

ஃபிஜி என்பது தெற்கு பசிபிக்கில் உள்ள 'பல தீவுகளின்' தொடர். இது இந்தியாவிலிருந்து சுமார் 7,000 மைலில் இந்தோனேஷியாவுக்கும் அப்பால் உள்ளது.

மக்கள் தொகை 1979-ல் சுமார் 6,20,000 இரண்டுபெரிய தீவுகளும் பல சிறிய திட்டுகளும் உள்ள இந்த ஃபிஜியின் நிலப் பரப்பு 7,600 சதுர மைல். (தமிழ்நாட்டின் நிலப்பரப்பு : 51,000 சதுர மைல்) , மக்கள் தொகை குறைவாக இருப்பதால் ''நபர் வாரி'' தேசிய வருமானம் ஆண்டுக்குச் சுமார் 1200 டாலர். முக்கியமான விளைபொருட்கள் சர்க்கரை (கரும்பு), தேங்காய், இஞ்சி.



# அமராவதி முதலைப் பண்ணை!

பி.வி. கிரி

பாவம்! அந்த முதலைக் குட்டி இறந்து விட்டது...அதைப் பார்த்ததும் எங்கள் கண்களில் நீர் மல்கியது, (முதலைக் கண்ணீர் அல்ல!)

ஆம். கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள, அமராவதி முதலைப் பண்ணையைச் செய்தியாளர்கள் பார்வையிடும்போதுதான் இந்த நிகழ்ச்சி நடந்தது.

நாங்கள் பண்ணையைப் பார்க்கச் சென்றபோது, முதலைகள் ஆடாமல் அசையாமல், அப்படியே கிடந்தன. உடனே ஒருவர் ''முதலைகளுக்கு இப்போது 'ரெஸ்ட்' என்று சொன்னார் சிரித்துக்கொண்டே.

**முதலை மலை!**

சதுர வடிவ சிறிய குளத்தில், சிறியதும் பெரியதுமாக முதலைகள் நீருக்குள்ளேயே அமிழ்ந்து கிடந்தன. சில நீரை விட்டுத் தரைக்கு வந்து காற்று வாங்கின! இவ்வளவு பேர் வந்திருக்கிறார்களே என்று ஒன்றுகூட எங்களை 'ஜாடை'யாகக் கூடப் பார்க்கவில்லை!

பண்ணை ஊழியர் ஒருவர், பக்கெட்டில் கொண்டு வந்திருந்த பெரிய பெரிய மீனை எடுத்து குளத்தில் வீசினார். ஊஹூம். அதற்கும் அவை அசையவில்லை. அதோ! ஒன்று துள்ளி தலையை மட்டும் மேலே தூக்குகிறதே...!

அப்பாடா! எங்களுடன் வந்த புகைப்படக்காரர் அதை ஒரு 'கிளிக்' செய்தார்.

ஒரு குளத்தில் முதலைகளே இல்லை. எங்கே என்று பார்த்தால், ஒன்றின்மேல் ஒன்றாக ஒரே இடத்தில் அவையெல்லாம் குவிந்து கிடந்தன!

**டிக்....டிக....டிக்**

அழகிய அமராவதி அணைக்கு அருகில் உள்ள இந்த முதலைப் பண்ணை 1975ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. 2 ஏக்கர் பரப்பளவில் உள்ள இந்த முதலைப் பண்ணையில் அப்போது ஒரே ஒரு முதலை மட்டும்தான் இருந்தது. பிறகு படிப்படியாக 1978ல் 121 ஆக அதிகரித்து, 1982ல் மேலும் 110 ஆகச் சேர்ந்து, தற்போது 763 முதலைகள் இங்கு இருக்கின்றன. இந்தப் பண்ணையை நான்கு காவலர்கள் இரவும் பகலும் பாதுகாத்து வருகிறார்கள்.

பண்ணைக்கு மிக அருகே உள்ள அமராவதி அணையிலும் சுமார் 200 முதலைகள் இருக்கின்றன. அவை கரைக்கு வந்து முட்டைகளைப் புதைத்துவிட்டுச் சென்று விடுமாம். அந்த முட்டைகளைத் தேடிக் கண்டுபிடித்து, அவற்றைப் பண்ணையாட்கள் சேகரித்துக் கொண்டு வருவார்கள்.

அதாவது, அணையின் கரையில் ஒரு அடி ஆழத்தில் முதலைகள் முட்டை இடுமாம். அப்போது அந்த முட்டையின் பாதுகாப்புக்குத் தேவையான ஒரு வகை இரசாயனமும் இயற்கையாகவே வெளிப்படுமாம்! பண்ணை ஊழியர்கள் அந்த முட்டைகளை ஒவ்வொன்றாகத் தோண்டி எடுக்கும்போது, இரசாயனம் கலந்த மண்ணோடும் அதைக் கொண்டு வருதல் வேண்டும். அப்போது, முட்டை எந்த நிலையில் இருந்ததோ, அதே நிலையில்தான் அதை எடுத்து வர வேண்டும். அதற்காக அந்த முட்டைக்கு ஓர் அடையாளமும் இடப்படும். பண்ணையில் அதை அப்படியே மண்ணில் புதைத்து விடுவார்கள்-மண் நிரப்பிய மரப் பெட்டியிலும் புதைத்து வைப்பார்கள். கொஞ்சம் அசைந்தால் கூட கரு கலைந்து விடுமாம். 70 அல்லது 90 நாட்கள் முட்டை பொரிக்கும் பருவமாகும். அப்போது லேசாக 'டிக் டிக்' கென்ற சத்தம் வருமாம். 16.2.82ல் இப்பண்ணையில் உள்ள முதலைகள் 25 முட்டைகள் இட்டன. இவ்வாண்டு இறுதிக்குள் 100 முட்டைகளையாவது எதிர்பார்க்கி

றோம் என்று சொன்னார் ஒரு வன அலுவலர்.

**எப்போது வாயை மூடும்?**

ஒரு முதலைக் குஞ்சானது, மூன்றாண்டுக் காலத்தில் நல்ல முதிர்ச்சியைப் பெற்று 3 மீட்டர் நீளம் வளர்கிறது. முதலை குளிர் ரத்தப் பிராணி. அடிக்கடி வெயிலில் காய நிலத்துக்கு வந்துவிடும் இதை ஆங்கிலத்தில் (Basking) என்கிறார்கள். சிலர் (Sun Bath) எடுக்கிறது என்றும் நகைச் சுவையாகக் குறிப்பிடுவார்கள்.

நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தபோது, ஒரு பெரிய முதலை தண்ணீர்த் தொட்டியிலிருந்து மணற் பரப்புக்கு வந்து, வாயைப் பிளந்து கொண்டிருந்தது. நெடு நேரம் அது அப்படியே இருந்தது. பிறகு, அங்கிருந்த ஒருவர் சொன்னார்: 'முதலை வாயைத் திறந்தால் எப்போது மூடும் என்று யாருக்கும் தெரியாது!'

முதலைகளுக்கு முக்கிய உணவு மீன். பண்ணைக்கு அருகில் உள்ள மீன் வளத்துறை மூலம் நாள் ஒன்றுக்கு 35 கிலோ மீன் வாங்கப் படுகிறது. நாளொன்றுக்கு 15 கிலோ மாட்டிறைச்சியும் முதலைகளுக்கு வழங்கப்படுகிறது.

**ஊனமுற்ற முதலைகள்!**

மனிதர்களில் ஊனம் இருப்பது போல, ஊனமுள்ள முதலைகளும் உள்ளன. ஆம். இப்பண்ணையில் கூன் முதலைகள் இரண்டு மற்றும் வாலில்லாத முதலைக் குஞ்சுகளும் இருக்கின்றன.

உலகத்தில் 21 வகையான முதலைகள் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். அதில் இந்தியாவில் மூன்று வகை முதலைகள் உள்ளன. ஒவ்வொரு வகை முதலையும் தோற்றத்தில், நீளத்தில், பருமனில் வித்தியாசப்படும்; சில பார்க்கப் பயங்கரமாகவும் தோற்றமளிக்கும்.



## முதலையின் கதை

* முதலைக்குக் கண்ணுக்கு மேல் இமை, கீழ் இமை, உள் இமைப் படலம் என மூன்று இமைகள் உண்டு.
* முதலையின் இரப்பை பெரிதாக இருக்கும். அதில் சில கற்கள் உண்டு. இவை முதலை வேண்டுமென்றே விழுங்கியவை. இக் கற்கள் இரையை அரைப்பதற்கு உதவும்
* எல்லா முதலைகளிலும் இரண்டு இணை மணப் பொருள் சுரப்பிகள் உண்டு. இந்தச் சுரப்பிகள் முதலைகள் இனப்பெருக்கம்-பருவத்தில் அதிகமாகச் சுரக்கும்.
* முதலைகளின் செவிப்புலன் மிகக் கூரியது; அவ்வாறே பார்வையும் மிகக் கூர்மையானது.
* நன்றாக முதிர்ச்சியுற்ற முதலைகளே மனிதனையும் பெரிய விலங்குகளையும் கவ்விப் பிடிக்கும்.

—ஆதாரம்

'' தமிழ்க் கலைக் களஞ்சியம் ''



இந்தப் பண்ணையில், நன்கு வளர்க்கப்பட்ட முதலைகளைப் பிறகு என்ன செய்கிறார்கள்?

அவற்றைப் பெரிய நீர்நிலைகளில் கொண்டு போய் விட்டு விடுகிறார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கூட, முதிர்ச்சி அடைந்த 32 முதலைகளை லாரிகளில் கொண்டு போய், மணிமுத்தாறு, பாபநாசம் அணைகளில் விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். இவ்வாறு விடுவதன் நோக்கம், முதலை இனம் அழியாமல், குறைந்துவிடாமல் பாதுகாக்கவே என்றார் ஒரு வனப் பாதுகாப்பு அலுவலர். அதுமட்டுமல்ல, முட்டை அளவில் அழிந்து கொண்டிருந்ததைத் தடுத்து நிறுத்தி, முதலை இனப் பெருக்கத்தை அதிகரிக்கவும் இத் திட்டம் என்றும் அவர் கூறினார்.

**ஏற்றுமதி செய்திட....**

''விலை மதிப்புள்ள முதலைத் தோல், இறைச்சி ஆகியவற்றை ஏற்றுமதி செய்யும் திட்டம் ஏதேனும் உள்ளதா?'' என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, வனப் பாதுகாவலர் ஒருவர் பதில் கூறினார்:

''சாத்தனூர், அமராவதி ஆகிய இடங்களில் தமிழக வனத்துறை நடத்திவரும் முதலைப் பண்ணைகளில் வளரும் முதலைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது பதப்படுத்தப்பட்ட முதலைத் தோலையும், டப்பாக்களில் அடைக்கப்பட்ட முதலை இறைச்சியையும் மேலைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது பற்றிய வழிமுறைகளை அறியும் முயற்சியில் வனத்துறை ஈடுபட்டுள்ளது.''





தமிழக அரசின் வக்ஃபு நிறுவனங்களின் வருமானத்தைப் பெருக்குவதற்காகவும், சொத்துக்களில்ஏற்படும் ஆக்கிரமிப்புகளைத் தடுப்பதற்காகவும், நகர்ப்புறங்களில் சொத்துக்களைப் பெற்றுள்ள வக்ஃபு நிறுவனங்களுக்கு அந்தச் சொத்துக்களை விரிவுபடுத்த, உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், திருமண மண்டபங்கள் முதலியவற்றை நிர்மாணிக்கவம் மத்திய அரசும், தமிழ்நாடு அரசும் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் மூலம், நீண்டகாலத் தவணை முறையில் கடனுதவி வழங்கி வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு, மற்றும் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ள கடன் வாயிலாக தமிழ்நாடு வக்ஃபு வாரியம் மாநிலத்திலுள்ள நகர்ப்புற வக்ஃபு நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவி வருகின்றது.

இவ்வாறு, வக்ஃபு வாரியம் ஆற்றிவரும் அரிய பணிகளையெல்லாம் விளக்கிக் கூறுகிறார் இவ்வாரியத்தின் தலைவர் திரு ஜனாப் எஸ். எச். சையதயூசுப் அவர்கள்.

தமிழ்நாடு வக்ஃபு வாரியத தலைவர்,

**ஜனாப் எஸ். எச். சையத் யூசுப்,**

**அவர்கள் பேட்டி:**

# வளர்ச்சிப் பணியாற்றும் வக்ஃபு வாரியம்



வினா:

தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டிருக்கும் வக்ஃபு வாரியத்தின் நோக்கமென்ன?

விடை

இந்து அற நிலையத் துறையைப் போன்று, வக்ஃபு வாரியம் இஸ்லாமிய அற நிலையத் துறையாகும். கோயில் சொத்துக்களை இந்து அற நிலையத்துறை கண்காணித்துப் பேணி வருவது போன்று, வக்ஃபு வாரியமும் இஸ்லாமிய அறநிலைய சொத்துக்களைக் கண்காணித்துப் பேணி வருகிறது.

வக்ஃபு சட்டம் 1954ல் அமலுக்குவந்த பின்பு 1958ஆம் ஆண்டுமுதல் வக்ஃபு வாரியம் செயல்படத் தொடங்கி ஏறத்தாழ 24 ஆண்டுகளாகின்றன.

வக்ஃபு சட்டம் 1954ல் பிரிவு 7ன்படி, மாநில அரசால் வக்ஃபு வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி சட்டத்தின் பிரிவு 15ன்படி, மாநிலத்திலுள்ள அனைத்து வக்ஃபுகளும் வாரியத்தின் கண்காணிப்பின் கீழ் இயங்க வேண்டும். வக்ஃபுச் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, வக்ஃபுகள் சரிவர நிர்வகிக்கப்படவும், வக்ஃபு சொத்துக்கள் பராதீனம் செய்யப்படாமல் பாதுகாக்கவும், வக்ஃபுகளின் வருமானங்கள் வக்ஃபு ஏற்படுத்தப்பட்ட நோக்கத்திற்காகச் சரிவர செலவழிக்கப்படுகிறதா என்று கண்காணிக்க

**பேட்டி : ஜி. ஆனந்தன்**



**வக்ஃபு வாரியத்திலிருந்து ஏழை-எளிய மக்களுக்கு வாரியத் தலைவர் நிதி வழங்குகிறார்**

வும், வக்ஃபுகள் சரிவர நடைபெற அவற்றுக்கு வழிமுறையிடவும் ( Direction ) அவைகளின் நிர்வாகத்திற்காக விதிமுறைகளை ஏற்படுத்தவும், வக்ஃபில் அவற்றின் செலவுகள் போக அதிகப்படியாக உள்ள (Surplus) பணத்தை வக்ஃபு ஏற்படுத்தப்பட்ட நோக்கத்திற்கு உட்பட்டு செலவிட உத்தரவு இடவும், வக்ஃபுகளின் உத்தேச வரவு செலவினங்களுக்கு ஒப்புதல் அளிக்கவும், வக்ஃபு கணக்குகளைத் தணிக்கை செய்யவும், முத்தவல்லிகளையும் குழுக்களையும் நியமிக்கவும் நீக்கவும், இன்னும் அநேக அதிகாரங்கள் வக்ஃபுச் சட்டத்தில் வாரியத்திற்காக வழங்கப்பட்டுள்ளன.

வினா :

**இதுவரை வாரியம் தீட்டியுள்ள திட்டங்கள் எனனென்ன?**

விடை :

தற்போதைய வக்ஃபு வாரியம் பல சமுதாய நலப் பணிகளை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. அதாவது:

**ஏழைச் சிறார்களுக்கு இலவச சுன்னத்:**

இஸ்லாத்தின் முதல்படியான சுன்னத்தை (விருத்த சேதனம்) தம் சிறுவர்களுக்குச் செய்யக்கூடிய வசதியற்ற ஏழைப் பெற்றோர்களின் நிலையை உணர்ந்து வாரியம் 'இலவச சுன்னத் முகாம்' அமைத்து மருந்துடன் ஒரு வார காலத்திற்கு ஊட்ட உணவுக்கும் வழியமைத்துத் தந்து வருகிறது.

**விதவைகள் வாழ்வில் விளக்கொளி:**

இந்தத் திட்டத்தின் கீழ் ஏழை விதவைகளுக்கு வாழ்வில் விளக்கொளி ஏற்றி வைக்க இதுவரை 90 தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்பட்டு அவர்கள் சுய சார்புடனும், தன்னிறைவுடனும் வாழ வகை செய்யப்பட்டுள்ளது.

**ஏழைகள் வாழ்வில் ஏற்றம்:**

ஏழைகள், அனாதைகள், முதியோர்கள், ஆதரவற்றவிதவைகள் ஆகியோர் சுய தொழில் செய்து வாழ்வு நடத்திட, ஆளுக்குத் தலா ரூ. 500 வீதம் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. ஏழைப் பெண்கள் திருமணங்கள் நடைபெறவும் நிதியுதவி செய்யப்பட்டு வருகிறது. இதுவரை 168 பேர்களுக்கு மொத்தம் ரூ. 84,000 நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

**வக்ஃபு சொத்துக்களை அபிவிருத்தி செய்ய உதவி:**

தமிழகத்திலுள்ள வக்ஃபு நிறுவனங்களின் வருமானத்தைப் பெருக்குவதற்காகவும், சொத்துக்களில் ஏற்படும் ஆக்கிரமிப்புகளைத் தடுப்பதற்காகவும், நகர்ப் புறங்களில் சொத்துக்களைப் பெற்றுள்ள வக்ஃபு நிறுவனங்களுக்கு அந்தச் சொத்துக்களை விரிவுபடுத்த உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், திருமண மண்டபங்கள் முதலியவற்றை நிர்மாணிக்க மத்திய அரசும், தமிழ்நாடு அரசும் தமிழ்நாடு வக்ஃபுவாரியத்தின் மூலம் நீண்டகாலத் தவணை முறையில் கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை மத்திய வக்ஃபு கவுன்சில் மூலமாக ரூ. 29 இலட்சமும், தமிழ்நாடு அரசு மூலமாக ரூ. 21 இலட்சமும் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**பள்ளிவாசல்கள் புதுப்பிக்கவும், மராமத்து செய்யவும் நிதி உதவி:**

ஏழ்மை நிலையில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் தர்க்காக்களை மராமத்து செய்ய ஒவ்வொரு வக்ஃபுக்கும் ரூ. 5000 வீதம் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை

705 வக்ஃபுகளுக்கு ரூ. 35 இலட்சங்கள் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு முந்தைய அரசு 3 இலட்சம் நிதியுதவி அளித்தது. தற்போதைய அரசு இத்திட்டத்திற்கு ரூ. 5 இலட்சம் நிதி உதவியளித்து வருகிறது. வரும் ஆண்டிலிருந்து இத்திட்டத்திற்கு 7 இலட்ச ரூபாய் வழங்க முடிவு செய்துள்ளது.

**சிறு மருத்துவ மனைகள்:**

அவசர அவசியத்திற்கு மருத்துவ உதவி கிடைக்கச் செய்யும் சமுதாய மேம்பாட்டு நோக்கில் வஃக்பு வாரியம் திட்டமிட்டு தன் வசதிக்கும், சக்திக்கும், ஒத்துழைப்புக்கும் ஏற்ப தொடங்கப்பட்டவைதான் சிறு சுகாதார மருத்துவ நிலையங்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் திட்டுவிளை, இராமநாதபுர மாவட்டத்தில் மாயாக்குளம், கோவை மாவட்டத்தில் சோழமாதேவி, மதுரை மாவட்டத்தில் மாத்தூர் ஆகிய இடங்கள்ல் சிறு மருத்துவ மனைகள் ஆரம்பிக்கப்பட்டன.

**மதரஸாக்களுக்கு குர்ஆன் அன்பளிப்பு:**

மிகவும் பின்தங்கிய நிலையிலும், வசதி வாய்ப்புகள் குறைந்தும் உள்ள மதரஸாக்களுக்கு குர்ஆன் ஷரீப், ரேகால், பலகைகள், தமிழ்த் தொழுகைப் புத்தகங்கள், பள்ள மாணவ மாணவியருக்கு இலவசப் புத்தகங்கள், நோட்டுகள், சிலேட்டுகள் முதலியவை அன்பளிப்பாக வழங்கப்பட்டு வருகின்றன.

**வாரியத்திற்கென மாத இதழ்:**

வக்ஃபு வாரியத்தின் சேவைகளை மக்கள் அறிந்து கொள்ளவும், அச்சேவைகளை ஏழை எளிய மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற சமுதாயத்தின் ஒட்டு மொத்த நல்லெண்ணத்தின் பிரதிபலிப்பை நன்குணர்ந்து ''இஸ்மி'' என்னும் தமிழ் மாத இதழை வாரியம் 1979ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது.

**சமுதாயப் பெருந்தொண்டு:**

சென்னை மத்திய சிறைச்சாலையில் பெருநாள் தொழுகைகளை நிறைவேற்ற, மௌலவி ஒருவரை வாரியம் நியமித்து தொழுகைகள் நடத்தி வருகின்றன.

வடஆர்க்காடு மாவட்டம் பேரணாம்பட்டு தீ விபத்தில் வீடிழந்தவர்களுக்கு, வீடு கட்ட ரூபாய் 10,000 நிதி வழங்கப்பட்டது.

ஏழை முஸ்லீம் மாணவர்களுக்கு உபகார நிதி வழங்கப்பட்டது.

கால் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கரச் சைக்கிள் வண்டி வழங்கப்பட்டது.

பரனூர் மற்றும் புதுக்கோட்டையில் உள்ள அரசினர் மறுவாழ்வு இல்லத்தில் உள்ள தொழு நோயாளிகளுக்கு ரமலான் மாதத்தில் இலவச ஆடைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**மழைத் தொழுகை:**

நாட்டின் வறட்சியில் நமது கவனத்தையும் பதிப்பது கடமை என்ற அடிப்படையில், தமிழ்நாடு வக்ஃபு வாரியம் மிகவும் அக்கறை எடுத்துக் கொண்டு மழை வேண்டி பிரார்த்தனை புரிகின்ற மகத்தான ஏற்பாட்டை 10.10.1982 அன்று சென்னை மெரினாவில் சிறப்புடன் நடத்தியது. எந்தவித ஆடம்பர விளம்பரமும் இல்லாமல் முஸ்லீம்கள் ஏறத்தாழ 50,000க்கும் மேல் திரண்டு வந்து மழைத் தொழுகையில் கலந்து கொண்டனர். ஒரு நல்ல ஏற்பாட்டை முஸ்லீம்களைப் பெருங்கூட்டமாகத் திரட்டிக் காட்டியது வக்ஃபு வாரிய வரலாற்றிலே இதுவே முதன்முறையாகும்.

**வினா:**

**வக்ஃபு வாரியச் சொத்தின் மதிப்பென்ன ? அதன் பராமரிப்பு என்னென்ன?**

வக்ஃபு வாரியத்திற்கென்று தனியாகச் சொத்து ஏதுமில்லை. வக்ஃபு சொத்துக்களை (அறக்கட்டளைச் சொத்துக்கள்) அனைத்தும் வக்ஃபு வாரியத்தின் சொத்துக்களல்ல, அவை அந்தந்த வக்ஃபுகளின் சொத்துக்களே. வக்ஃபு வாரியத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள

**விடை:**

தமிழ்நாட்டில் மொத்தம் 5769 வக்ஃபுகள் உள்ளன. பள்ளிவாசல்கள், தர்காக்கள், மக்பிராக்கள் தைக்காக்கள், வராதீப்கானா, ஆஷுர்கானா, மதரஸா கப்ரஸ்தான் (மையவாடி) போன்றவைகள் வக்ஃபுகளில் அடங்கும்.

தமிழ்நாட்டில் வக்ஃபுகளுக்குப் பாத்தியப்பட்ட ஏறத்தாழ 45 கோடி ரூபாய் மதிப்புள்ள வக்ஃபு சொத்துக்கள் இருக்கின்றன.

**சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற காயிதே மில்லத் அவர்களின் 87-வது பிறந்த நாள் விழாவில் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு கே. இராசாமுகமது அவர்கள் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.**



ரூ. 25 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் புதிதாகச் சென்னையில் கண்டுபிடிக்கப்பட்டன.

பராதீனம் செய்யப்பட்டுள்ள வக்ஃபு சொத்துக்களை மீட்டு வக்ஃபுகளுக்குக் கொடுத்தும், வக்ஃபுகளில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து நிர்வாகச் சிர்கேடுகளைப் போக்கியும் ஆவன செய்கிறது, வக்ஃபு நிலங்களில் சட்ட விரோதமான ஆக்கிரமிப்பு ஏற்படும்போது சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களை அணுகி தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது, இன்னும் வக்ஃபுகளைக் காப்பதற்கு எவ்வளவோ பணிகளையும், சமுதாய நலன்களையும் வாரியம் செய்து வருகின்றது. ஆதலால் வக்ஃபு வாரியம், வக்ஃபுகளின் நலனுக்காகவே அமைக்கப்பட்டுள்ளது. வாரிய நிர்வாகச் செலவினங்களுக்கென வக்ஃபுகளிலிருந்து வசூலிக்கப்படும் 6 சதவீத சகாயத் தொகையையே சார்ந்துள்ளது. மற்றபடி வாரியத்திற்கென வருமானம் வரக்கூடிய சொத்துக்களோ மற்றெந்த ஆதாரமோ இல்லை.

**வினா:**

**வக்ஃபு வாரியத் தலைவர் அவர்களின் கீழ் இருக்கும் வக்ஃபு வாரிய உறுப்பினர்களின் பதவிக்காலம் எத்தனை ஆண்டுகள்?**

விடை:

வக்ஃபு வாரிய உறுப்பினர்கள் மாநில அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும். நிர்வாக காரணங்களுக்காக ஒரு வாரியத்தைக் கலைக்கவோ அல்லது மாற்றியமைக்கவோ - மாநில அரசுக்கு முழு அதிகாரம் உண்டு. தற்போதைய வக்ஃபு வாரியம் தமிழ்நாடு அரசினால் 18-10-81 அன்று நியமிக்கப்பட்டது. தற்போதைய தமிழ்நாடு வக்ஃபு வாரிய உறுப்பினர்கள் தலைவராக இருந்து வருகிறேன்.

இதன் உறுப்பினர்கள்—ஜனாப் எம்.எஸ். அப்துல்காதர், ஜனாப் ஹாஜி முகம்மது சலீம், ஜனாப் அஸ்கர் அலி தாலா, ஜனாப் கே.எம். அப்துல் ரசாக் எம்.எல்.ஏ., ஜனாப் சுல்தான் பாவா, ஜனாப் எஸ். எஸ். ஜெயினுலாபிதீன், ஜனாப் அன்வர்தீனி, ஜனாப் ஐ, மஹ்பூப் ஷெரீப் எம்.ஏ.பி.எல். ஜனாப் கே. லியாகத் அலிகான் பி.ஏ.பி.ஜி.எல்.

**வினா:**

**வக்ஃபு வாரியத்தின் வருமானத்தைப் பெருக்க புதிய திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா?**

விடை:

தமிழ்நாடு வக்ஃபு வளர்ச்சிக் கழகம் (Wakf Development Corporation) என்ற நிறுவனத்தைத் தொடங்குவதற்குத் தமிழக அரசு ஒரு கோடி ரூபாய்க்கு உத்தரவாதம் தர உள்ளது, இக்கழகத்தின் மூலமாக வக்ஃபு இடங்களில் கட்டடங்கள், திருமண மண்டபங்கள் கட்டி, அதன் மூலம் வக்ஃபின் வருமானங்களைப் பெருக்க திட்டமுள்ளது. இவை சமுதாய மேம்பாட்டிற்கு உதவிகரமாக அமையும் என்பது திண்ணம்.

வக்ஃபு வாரியத்திற்கென சொந்தக் கட்டடம் இல்லாதது பெருங்குறையாக இருந்து



**சென்னை அருகிலுள்ள பல்லாவரம் பகுதியிலுள்ள வக்ஃபு வாரியத்திற்குச் சொந்தமான (பள்ளிவாசல்) மசூதி.**

வருகிறது. மேலும் வெளியூர்களிலிருந்து வருகின்ற முத்தவல்லிகளுக்குப் போக்குவரத்து

அசௌகரியம் இல்லாமல் இருக்க வேண்டுமென்ற கருத்தையும் சிந்தனையிலிருத்தி தக்க இடமாக ஆராயப்பட்டு, சென்னை ஜார்ஜ் டவுன் பகுதியில் வாரியத்திற்கென சுமார் மூன்றரை லட்ச ரூபாய்க்குத் தற்போது இடம் வாங்கப்பட்டுள்ளது. விரைவில் அரசு உதவியுடன் கட்டடமாக உருவாக்கும் முயற்சியில் தற்போதைய வாரியம் இறங்கியுள்ளது.

கிராமப் புறங்களிலுள்ள இஸ்லாமிய விதவைகள், அனாதைகள் ஆகியோரின் நலனுக்காகத் தையல் மற்றும் தட்டெழுத்துப் பயிற்சி நிலையங்கள் திறந்திடுவது சம்பந்தமான திட்டமும், ஏழை மற்றும் மிகவும் நலிந்த நிலையிலுள்ள முஸ்லீம்களுக்கு வக்ஃபு நிலங்களில் வீடுகள் கட்டித்தருவது சம்பந்தமான திட்டமும் பரிசிலனையில் உள்ளன.

**வினா:**

**வக்ஃபு வாரியத்தின் சட்ட திட்டங்கள் என்னென்ன? எப்படிச் செயல்படுத்தப்படுகிறது?**

**விடை:**

வக்ஃபுச் சட்டம் 1954ல் அமலுக்கு வந்துள்ளது. அந்தச் சட்டப் பிரிவு 9ன்படி மாநில அரசால் வக்ஃபு வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு முத்தவல்லியாலும் (தர்மகர்த்தர்கள்) வக்ஃபு வாரியத்திற்கு அனுப்பப்படு



**சென்னை மெரினாக் கடற்கரையில் மழைக்காக இஸ்லாமிய மக்கள் பல்லாயிரக் கணக்கில் தொழுகை நடத்தினர்.**

கின்ற வரவு செலவுகளுக்கான :கணக்குகள் வாரியத்தால் நியமிக்கப்பட்டுள்ள தணிக்கையாளரால் வருடா வருடமோ அதற்கு இடையிலோ பரிசீலிக்கப்படும். அதில் முறையற்றதும் அவசியமற்றதுமான காரியங்களுக்குச் செலவு செய்திருந்தாலும், வக்ஃபுக்கு வர வேண்டிய சொத்துக்கள் அல்லது தொகைகளை வசூலிக்கத் தவறியிருந்தாலும் கணக்கைப்பரிசீலிக்கின்ற தணிக்கையாளர்வஃக்புக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு யார் பொறுப்பாளர் என்பதனையும் தீர்மானித்து தம்முடைய அறிக்கையில் குறிப்பிட வேண்டும். இந்த அறிக்கையை வாரியத்தினரும் பரிசீலித்து அவசியமென்று கருதினால் சம்பந்தப்பட்டவர்களையும் விசாரித்து, தகுந்த காரணமிருந்தால் தணிக்கையாளரின் அறிக்கையில் தகுந்த மாறுதலைச் செய்து கையாளலாம்.

இதன்படி முத்தவல்லியோ மற்ற எந்த நபரோ கொடுக்க வேண்டும் என்று முடிவாகின்ற தொகையை நிலவரி வசூலிப்பதைப் போல அந்த நபரினுடைய சொந்த சொத்துக்களிலிருந்து வசூலிக்கும் பாத்தியம் வக்ஃபு வாரியத்திற்கு உண்டு.

வக்ஃபின் நிர்வாகம் சம்பந்தமாக அவ்வப்பொழுது தங்களுக்கு உசிதமெனத் தோன்றுகின்ற கட்டளைகளை முத்தவல்லிக்குப் பிறப்பிக்க வாரியத்தினருக்கு அதிகாரம் உண்டு.

வக்ஃப்பைச் சரிவர நிர்வகித்து வருவதற்காகவும் வக்ஃப்பின் சொத்துக்களையும் அதிகாரங்களையும் துர்விநியோகம் செய்யாமல் கண்காணித்து வருவதற்காகவும் இந்த விரிவான அதிகாரம் வக்ஃபு வாரியத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. வக்ஃபு வாரியத்தின் மூலம் பிறப்பிக்கப்படும் அத்தகைய கட்டளைகளை முத்தவல்லிகள் நிறைவேற்ற வேண்டும்.

வக்ஃபு சொத்துக்களையும், வக்ஃபு கணக்குகளையும் அவை சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகள், ரிக்கார்டுகள் ஆகியவற்றையும் வக்ஃபு வாரியம் நேரடியாகவோ அல்லது வாரியத்தால் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மூலமாகவோ சோதனை செய்வதற்கு வக்ஃபு வாரியத்திற்கு அதிகாரம் இருக்கிறது.

வக்ஃபுகளின் சரியான கட்டுப்பாடு, பரிபாலனம், நிர்வாகம் இவைகளுக்காக அவசியப்படுகிற எல்லாச் செயல்களையும் பொதுவாக செய்வதும் வக்ஃபு வாரியத்தின் அலுவலாகும்.

மேலும் பிறர் அனுபவத்தில் இருக்கும் வக்ஃபு சொத்துக்களை வசப்படுத்த நடவடிக்கை எடுக்கவோ, வக்ஃபு சொத்துக்கள் சம்பந்தமாக விவகாரம் நடத்தவோ, விவகாரம் வந்தால் அதில் வழக்காடவோ வக்ஃபு வாரியத்திற்கு அதிகாரம் இருக்கிறது.

வக்ஃபின் நிர்வாகத்தில் எத்தகைய ஊழல் இருப்பதாக வாரியத்திற்குத் தெரிய வந்தாலும் அது சம்பந்தமாக விசாரணை செய்யவும், நிர்வாகம் சரியில்லை என்று வாரியம் அபிப்பிராயப்பட்டால், விசாரணை செய்து வக்ஃபுகளின் நிர்வாகிகளை மாற்றவும் வக்ஃபு வாரியத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, வாரியம் வளமான பல பணிகளை ஆற்றி வருகின்றது என்று வாரியத் தலைவர் ஜனாப் எஸ். எச். சையத் யூசுப் அவர்கள் மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

# தமிழகம் ஒரு கலைப்பெட்டகம்



வானுயர்ந்த கோபுரங்களும்,
இதயங்கவரும் சிற்பங்களும்
கொண்ட கோயில்கள் மட்டு
மில்லை தமிழகத்தில்.

காணற்கரிய பல்வேறு
கவினுறு காட்சிகளும் இங்கு
ஏராளமாக உண்டு.

நீண்டு பரந்து கிடக்கும்
பொன்மணற் கடற்கரை,
மூன்று கடல்கள் முத்தமிடும்
குமரிமுனை, தாவிஓடும்
அருவிகள், துள்ளிவிழும்
நீர்வீழ்ச்சிகள், இதமளிக்கும்
குறிஞ்சிநகர்கள், ஓய்விடங்கள்
— உல்லாச இடங்கள்

கண்ணைக்கவரும்
கைவினைப்பொருள்கள்,
கைத்தறி ஆடைகள், பட்டு
சேலைகள்.

பரவசமூட்டும் பரதநாட்டியம்
— இதமளிக்கும் கர்நாடக
இன்னிசை

செல்விருந்தோம்பி
வருவிருந்து நோக்கும் அன்பு
மிக்க தமிழ் உள்ளங்கள்.

வசதிக்கேற்ற வகை
வகையான ஓட்டல்கள்.
யாவற்றையும்

எளிதில் கண்டுகளிக்க
போக்குவரத்து வசதிகள்
எங்கும் உண்டு தமிழகத்தில்.
தமிழகம் வருக

*அது நீங்கள்*
*காணவேண்டிய மாநிலம்*

TRADITION AND TRANQUILLITY
TAMIL NADU TOURISM

**சுற்றுலாத்துறை**
**தமிழ்நாடு அரசு**
**சென்னை-600 009.**

## அட்டை சொல்லும் செய்தி

# அரசுத் தேயிலைத் தோட்டங்கள் ரப்பர் தோட்டங்கள்

தமிழ்நாட்டின் மேற்கு எல்லையாகத் திகழ்வன மேற்குத் தொடர்ச்சி மலைக் காடுகள்; தென் கோடியில் அமைந்துள்ளவை, கன்னியாகுமரி மாவட்ட மலைப் பகுதிகள்.

மேற்குப் பகுதியில் அமைந்த நீலகிரி மலைக் காடுகளுக்கும் தென்பகுதியிலுள்ள கன்னியாகுமரி மாவட்டத்தின் காடுகளுக்கும் அமைப்பிலும் அடர்த்தித் தன்மையிலும் மிக்க வேறுபாடுகள் உள்ளன.

நீலகிரி மாவட்டத்திலும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் தமிழ்நாடு காட்டுவளத்துறை, தேயிலை, ரப்பர்த் தோட்டங்களை வளர்க்கும் சீரிய பொறுப்பினை மேற்கொண்டுள்ளது.

தேயிலை, ரப்பர்த் தோட்டங்களை வளர்ப்பதற்கு இப்பகுதிகளில் அமைந்துள்ள தட்ப, வெப்பநிலையும், மழை பெய்யும் அளவும் மிகப் பொருத்தமாக உள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1960-ஆம் ஆண்டில் ரப்பர்த் தோட்டங்கள் வளர்க்கும் பணி தொடங்கியது. நீலகிரி மாவட்டத்தில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு அளிக்கும்நோக்கத்தில் 1969-ஆம் ஆண்டில் தேயிலை வளர்ப்புப் பணி தொடங்கியது.

இயற்கைக் காடுகளின் எழில் மண்டும் வளமிக்க பகுதி, கன்னியாகுமரி மாவட்டம், இரண்டு பருவங்களிலும் இங்கு மழை வளம் சிறக்கிறது. ஆண்டு முழுவதும் மழை பரவலாகப் பெய்கிறது.

இங்கு நிலவும் மண்வளப் பாதுகாப்பு நிலைமைகளையும் மழை பெய்யும் தன்மைகளையும் கருத்தில் கொண்டு, 1960-ல் ரப்பர் பயிரிடும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் சிறப்பாக அமைந்து செயல்பட்டமையால், மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டத்தின் கீழும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தின் கீழும் மேலும் ரப்பர்த் தோட்டங்கள் பயிரிடப்பட்டன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 4,800 ஹெக்டேர் நிலப்பரப்பில் தமிழ்நாடு காட்டுவளத் துறை ரப்பர் பயிரிட்டுள்ளது. 1981-82-ஆம் ஆண்டு வரையில் ரப்பர் தயாரிப்புப் பொருள்களை விற்ற வகையில் கிடைத்த வருமானம் ரூ. 11.75கோடி. இதற்குச் செலவிடப்பட்ட தொகை ரூ. 15 கோடி. இந்த இழப்பிற்குக் காரணம், பயிரிடப்பட்டுள்ள ரப்பர் மரங்கள் இன்னும் பலன் அளிக்கும் அளவிற்கு முழுப்பக்குவம் அடையவில்லையென்பதுதான்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தின்கீழ் ரப்பர் பயிரிடும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மத்திய அரசு உதவியளிக்கிறது.

அரசு ரப்பர்த் தோட்டங்களில் 250 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. ரப்பர் பயிரிடுவதற்கு மேற்கொண்டு கிடைக்கும் நிலப்பகுதிகள் தக்கனவாக இல்லாமையாலும் இயற்கைக் காட்டுவளம் அழிக்கப்படக்கூடாதென்பதாலும் 1979-80ஆம் ஆண்டிற்குப் பின்னர் தமிழ்நாடு காட்டுவளத்துறை இத்திட்டத்தை நிறுத்தியுள்ளது.

அரசு ரப்பர்த் தோட்டங்களிலும் அரசு ரப்பர்த்தொழிற்சாலையிலும் சுமார் 4,500 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். வீட்டு வசதி, மின்சார வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, குழந்தைகள் காப்பக வசதி, பள்ளி, மருத்துவ வசதிகள் முதலியன தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

அனைத்திந்திய சராசரி, ஒரு ஹெக்டேருக்கு 770 கிலோ ரப்பர் விளைவாக இருந்தாலும், அரசு ரப்பர் தோட்டத்தில் ஒரு ஹெக்டேருக்கு 1,000 கிலோ விளைவு கிடைக்கிறது. அரசுத் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் ரப்பர்ப் பொருள்களுக்கு நல்ல விற்பனை வாய்ப்புகள் உள்ளன.

அரசு ரப்பர் தோட்டத்தில் தயாரிக்கப்படும் ரப்பர் மரப்பால் அக்மார்க் சான்றளிக்கப்பட்ட பொருளாகும். 1960-ல் முன்னோடி முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட இத்திட்டம், மிகுந்த பலனையும் எதிர்காலத்தில் சிறந்து விளங்கும் நம்பிக்கை ஒளியையும் தரத்தக்கதாகத் திகழ்கிறது.

1968-ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு அளிக்கும் அடிப்படையில் தேயிலை பயிரிடும் திட்டத்தை தமிழ்நாடு அரசு மேற்கொண்டது. 7 ஆண்டுகளில் 1,500 ஹெக்டேர் நிலப்பரப்பில் தேயிலை பயிரிடுவதற்கான திட்டத்திற்கு 1969-ல் திட்ட வரைவு தயாரிக்கப்பட்டது. அதற்கேற்ப 1969-ல் முறையாகப் பயிரிடும் பணி தொடங்கப்பட்டது. 1976-ல் திட்டத்தின் முதற் கட்டப் பணி முடிக்கப்பட்டது.

சேரங்கோடு, குன்னூர் ஆகிய இடங்களில் தேயிலை தயாரிப்புத் தொழிற்சாலைகள் உள்ளன. இந்த இரண்டு தொழிற்சாலைகள் தவிர மேலும் ஒரு தொழிற்சாலை நிறுவும் அவசியம் உணரப்பட்டு, ரூ. 140 லட்சம் செலவில் சேரம்பாடியில் மற்றொரு தொழிற்சாலை கட்டப்பட்டுவருகிறது. 1983-ல் இத்தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கும்.

ரூ. 3 கோடி மதிப்புள்ள 2,000 டன் தேயிலை ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படுகிறது. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 2,500 தொழிலாளர்கள் இங்கே குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

முதல் பக்க அட்டையில்
**தேயிலை எடுக்கும் காட்சி**
வண்ணப்படம் உதவி:
வனத்துறை

கடைசி அட்டையில்
**ரப்பர் பால் சேகரிக்கும் காட்சி**
வண்ணப்படம் உதவி:
சுற்றுலாத்துறை

# ✱ ஜீவா போக்குவரத்துக் கழகத் துவக்கவிழா
# ✱ அரசு ஊழியர் குடியிருப்பு ✱ நகராட்சி நாளங்காடி
# ✱ பள்ளிக் கட்டடத் திறப்புவிழா ✱ பல்நோக்கு விளையாட்டரங்கம்
# ✱ திருவள்ளுவர் பேருந்து நிலையம் கால்கோள் விழா

## இவற்றுடன்

# ✱ நிறைவுற்ற 1000 அரசுப்பணிகளை மக்கட்கு அர்ப்பணித்த விழா.



**ந**வம்பர் 28-ஆம் நாள்.

விழாக்கோலம் பூண்டிருந்தது பெரியார் மாவட்டத்தின் தலை நகரான ஈரோடு. அங்கே மாண்பு மிகு முதல்வரும் அமைச்சர் பெருமக்களும் பங்கேற்ற அரசு விழா, இதுவரை ஈரோடு நகரம் கண்டிராத வகையில் ஈடில்லாத் திருவிழாவாக நடைபெற்றது.

இவ்விழாவைக் கண்ணுற்ற ஒவ்வொருவரும் இதுபோன்ற விழாக்கள் எல்லா மாவட்டத் தலை நகரங்களிலும் நடைபெறவேண்டும் என்றே ஆசைப்படுவார்கள். ஏனெனில் ஒரு மாவட்டம் எந்தெந்த வகையில் வளர்ச்சி அடைந்திருக்கிறது, எந்தெந்தப் பணிகளைச் செய்திருக்கிறது, எந்தெந்த நன்மைகளை அடைந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டியது. வளர்ச்சிப் பணிகளால் மக்கள் பெற்றுள்ள நன்மைகளை அனைவரும் உணரத்தக்க வகையில் இவ்விழா நடைபெற்றது.

### கால்கோள் நாட்டிய பணிகள்

மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் இவ்விழாவில் கால்கோள் நாட்டிய பணிகள் விவரம் வருமாறு:-

1. ரூ.89 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் பல்நோக்கு விளையாட்டு அரங்கம்.

2. ரூ.25 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் திருவள்ளுவர் பேருந்து நிலையக் கட்டிடம்.

3. ரூ.23 இலட்சம் செலவில் அமையவிருக்கும் பவானி கூடுதுறை சுற்றுலா மையம்.

4. ரூ.14.32 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் மாவட்டக் கருவூலம்.

5. ரூ.22 இலட்சம் செலவில் அமையவிருக்கும் ஈரோடு நகராட்சி வெள்ளநீர் வடிகால் திட்டம்.

6. ரூ.10இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் மாவட்ட மைய நூலகக் கட்டடம்.

இந்த ஆறு பணிகளுக்கு மட்டும் மொத்தம் ரூ.183.32 இலட்சம் செலவிடப்படும்.

### மக்களுக்கு அர்ப்பணித்த பணிகள்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மக்களுக்கு 1017 பணிகளை அர்ப்பணித்தார்கள். விவரம் வருமாறு:-

ஜீவா போக்குவரத்துக்கழகம். இதன் முதலீடு ரூ.600 இலட்சம் ஆகும்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் நான்கு பணிகள். 192 வீடுகள் உள்ள அரசு அலுவலர் குடியிருப்பு. மகாகவி பாரதியார் சமூகக்கூடம், ஈ.வி.என் சாலையில் அமைந்துள்ள பெரியார் நகர் அலங்கார நுழைவாயில். காந்திஜி ரோடில் அமைந்துள்ள அலங்கார நுழைவாயில். இந்தப் பணிகளுக்கு மொத்தச் செலவு ரூ. 88.05 இலட்சம்.

ஈரோடு நகராட்சியின் பணிகள் நான்கு ஆகும். ரூ.22.50 இலட்சம் செலவிலான நகராட்சி நாளங்காடி கடைகள். ரூ.44 இலட்சம் செலவிலான நகராட்சி பேருந்து நிலையத்தின் 'ஏ' பிளாக் மாடிக்கட்டடம். ரூ.44 இலட்சம் செலவிலான நகராட்சி பேருந்து நிலையத்தின் 'பி' பிளாக் மாடிக் கட்டடம். ரூ.15 இலட்சம் செலவிலான நகராட்சி ரயில்வே குடியிருப்பு உயர்நிலைப் பள்ளிக்கட்டடம்.

வளர்ச்சித்துறைப் பணிகள் மட்டும் 982 ஆகும். இதன் செலவு ரூ.342.02 இலட்சம் ஆகும். விவரம்:-

| | |
|---|---|
| பள்ளிக்கட்டடங்கள் | 57 |
| தாய்சேய்நலவிடுதிக் கட்டடங்கள் | 8 |
| சிறுபாலங்கள் | 368 |
| ஊரகச் சாலைகள் | 543 |
| குழந்தைகள் காப்பகங்கள் | 6 |

சத்துணவுத் திட்டச் சமுதாயக் கூடங்கள் 10. இவற்றின் செலவு ரூ.370 இலட்சம் ஆகும்.

ஈரோடு அரசு மருத்துவ மனையில் ரூ.2.20 இலட்சம் செலவில் கட்டப்பட்ட 20 படுக்கைகள் கொண்ட வார்டு.

அரசு மருத்துவமனையில் ரூ. 2.50 இலட்சம் செலவில் கட்டப்பட்ட சித்த மருத்துவப் புற நோயாளிகள் பிரிவு.

# ஈரோடு அரசுவிழா வழிகாட்டும் பெருவிழா

ரூ.8.25 இலட்சம் செலவில் ஈரோட்டில் கட்டப்பட்டுள்ள உடல்நல அலுவலர் அலுவலகம்.

இப்படி நீண்டு கொண்டே செல்கிறது மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பணிகள் பட்டியல் இந்த விழாவோடு மக்களுக்கு நேரடியாகப் பயன்கிட்டும் வகையில் அரசு வழங்கிடும் உதவிகள் அனைத்தும் வழங்கப்பட்டன.

புதியதாகத் தோன்றிய பெரியார் மாவட்டம் பெருஞ்சாதனைகளைச் செய்து வருவதாகவே இந்த விழாகாட்டிற்று. எடுத்துக்காட்டாக அரசு மக்களுக்கு அளித்துவரும் உதவிகள் பற்றிச் சில விவரங்கள்:

**வீட்டுமனைப் பட்டா**

பெரியார் மாவட்டம் துவக்கப்பட்ட நாள் (17.9.79) முதல் இதுவரை 8,749 நபர்களுக்கு 196.17 ஏக்கர் பரப்பு வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சியில் 1,222 நபர்களுக்கு 29.14 ஏக்கர் பரப்பு வீட்டு மனைகள் வழங்கப்பட்டன.

**முதியோர் உதவித் தொகை**

பெரியார் மாவட்டம் துவக்கப்பட்ட நாள் முதல் இதுநாள் வரை 5,440 முதியோருக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**சலவைப் பெட்டிகள் வழங்குதல்**

பெரியார் மாவட்டம் துவக்கப்பட்ட நாள் முதல் இதுவரை பிற்பட்டோர் நலத்துறை மூலம் 468 நபர்களுக்குச் சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

**சிகை அலங்காரப் பெட்டிகள்**

பெரியார் மாவட்டம் துவக்கப்பட்ட நாள் முதல் இதுவரை பிற்பட்டோர் நலத்துறை மூலம் 350 தொழிலாளிகளுக்கு ரூ.33 ஆயிரம் மதிப்பில் சிகை அலங்காரக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சியில் 60 சிகை அலங்காரப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

**தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் காலணித் தொழிலாளர் பணிக் கூடம்**

காலணித் தொழில் செய்யும் 10 நபர்களுக்கு ரூ.70,000 மதிப்பில் பணிக்கூடம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியின் போது காலணி தொழில் செய்யும் 5 நபர்களுக்கு ரூ.50,000 மதிப்பில் பணிக்கூடம் வழங்கப்பட்டது.

**மண்பாண்டத் தொழில் உதவித் தொகை**

1982-83 ஆம் ஆண்டில் மண்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் 25 பேருக்கு மண்பாண்டச் சக்கரம் வழங்கப்படவுள்ளதில் இந்நிகழ்ச்சியில், 15 நபர்களுக்கு ரூ.57,000 மதிப்பில் மண்பாண்டச் சக்கரம் மற்றும் உதவித் தொகை வழங்கப்பட்டன.

**மாமூலன்**

**மின்விசை செக்கு**

மின்விசை செக்கு அமைக்க முதலீட்டுக் கடன் ரூ. 8700, தொழிற்கூடக் கடன் ரூ.2000, மூலதனக் கடன் ரூ.5,000 ஆக மொத்தம் ரூ.15,700 வீதம் வழங்கப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் 6 நபர்களுக்கு மூலதனக் கடனாக ரூ.5000 வீதம் காசோலை வழங்கப்பட்டது.









குறைந்த செலவில் ஆனால் நிறைந்த வசதிகளுடன் தங்கும் விடுதிகள்!

## சிக்கனச் சுற்றுலாப் பயணிகளுக்காகவே தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அமைத்துள்ள

# இளைஞர் விடுதிகள்

தூய்மையானவை. வசதிகள் நிறைந்தவை. நேர்த்தியானவை. மிகக் குறைவான கட்டணம்.

நடுத்தர மற்றும் குறைந்த வருவாய் உள்ள சுற்றுலாப் பயணிகளுக்காகவே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழகத்தில் ஒரு சங்கிலித் தொடர் போன்று இளைஞர் விடுதிகளை அமைத்துள்ளது.

இத்தகைய இளைஞர் விடுதிகள் அமைந்துள்ள சுற்றுலா மையங்கள்— ● மாமல்லபுரம் ● ஏற்காடு ● உதகமண்டலம் ● மண்டபம் ● இராமேஸ்வரம்.

* கொடைக்கானல் * ஒகேனக்கல் * பிச்சாவரம் ஆகிய இடங்களிலும் இளைஞர் விடுதிகள் விரைவில் திறக்கப்பட உள்ளன.

முழு விவரங்களுக்கு :

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்**

சிவாலயா பில்டிங்ஸ்,
16, கமாண்டர்-இன்-சீப் சாலை,
சென்னை 600 105.
தொலைபேசி: 8958 1/2/3
தந்தி: TAMILTOUR
டெலக்ஸ்: MS 7575



ADWAVE/TTDC/2214/TAM. DIPR/4545/82





**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயனடைந்தோர் தென்னங்கன்றுகள் விநியோகம்**

1982-83ஆம் ஆண்டில் 4,200 நபர்களுக்குத் தலா 100 தென்னங்கன்றுகள் வீதம் மொத்தம் 4,20,000 தென்னங்கன்றுகள் ரூ.16.80 இலட்சம் மதிப்பில் வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்ச்சியில் 100 நபர்களுக்குத் தலா 100 வீதம் 10,000 தென்னங்கன்றுகள் ரூ.40,000 மதிப்பிற்கு வழங்கப்பட்டன.

**மாவரைக்கும் இயந்திரம் வழங்குதல்**

மாவரைக்கும் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 1982-83ம் ஆண்டில் 82 நபர்களுக்கு ரூ.2.06 இலட்சம் மதிப்பில் வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்ச்சியில் 31 மாவரைக்கும் இயந்திரங்கள் ரூ.93,000 மதிப்பில் வழங்கப்பட்டன.

**மிதிவண்டி வழங்குதல்**

மிதிவண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 1982-83ம் ஆண்டில் 108 நபர்களுக்கு 1,080 மிதிவண்டிகள் ரூ.4.28 இலட்சம் மதிப்பில் வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்ச்சியில் 1,000 மிதி வண்டிகள் ரூ.4.80 இலட்சம் மதிப்பில் 100 நபர்களுக்கு வழங்கப்பட்டன.

**தையல் இயந்திரம் வழங்குதல்**

தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 1982-83ம் ஆண்டில் 606 நபர்களுக்கு ரூ.6.32 இலட்சம் மதிப்பில் வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்ச்சியில் 1,040 தையல் இயந்திரங்கள் ரூ.10.40 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டன.

**நைலான் மீன்வலை வழங்குதல்**

நைலான் மீன்வலை வழங்கும் திட்டத்தின் கீழ் 1982-83ம் ஆண்டில் 36 நபர்களுக்கு ரூ.18 ஆயிரம் மதிப்பில் அவை வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்ச்சியில் 50 நைலான் வலைகள் ரூ.20,000 மதிப்பில் வழங்கப்பட்டன.

**டயர் வண்டி வழங்குதல்**

டயர் வண்டி வழங்கும் திட்டத்தின்கீழ் 1982-83 ஆம் ஆண்டில் 192 டயர் வண்டிகள் ரூ. 11.52 இலட்சம் மதிப்பில் வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்ச்சியில் 112 டயர் வண்டிகள் ரூ.6.72 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டன.

—இப்படி மக்களுக்குச் செய்யப்படும் நன்மைகளை விளக்கும் விழாவாக ஈரோடு அரசு விழா அமைந்திருந்தது.

**விழா நிகழ்ச்சி**

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஏ.என். தியானேசுவரன் இ.ஆ.ப வரவேற்றார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள் விழாவுக்குத் தலைமை ஏற்றார். பெருந்துறை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் திரு.டி.கே.நல்லப்பன், திருச்செங்கோடு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எம். கந்தசாமி, கோபிசெட்டிப்பாளையம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.செ.சின்னசாமி, வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு.வேலூர் டி. நாராயணன், குடிசைமாற்று வாரியத் தலைவர் திருமதி சுலோசனா சம்பத், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி.ஹண்டே, மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.செ.அரங்கநாயகம், மாண்புமிகுமின்துறைஅமைச்சர் திரு.எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்திய பின்னர், விழாக்களை நடத்திவைத்து மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி.ஆர் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். விழாமுடிவில் ஜீவா போக்குவரத்துக்கழகத் தனி அலுவலர் திரு.என்.இராமகிருஷ்ணன் நன்றி நவின்றார்.

பெரியார் மாவட்டத்தின் பெரும்பணிகளை விளக்கிடும் இவ்விழா தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு ஒரு வரலாற்றுச் சான்றாகத் திகழ்ந்தது.

## வெலிங்டன் இராணுவ மாணவர் விடுதி கட்ட தமிழக முதல்வர் ரூபாய் இரண்டு இலட்சம் நன்கொடை

போரில் இறந்த படை வீரர்களின் புதல்வர்கள் தங்கிப் படிப்பதற்காக நீலகிரி மாவட்டத்திலுள்ள வெலிங்டனில் கட்டப்படவிருக்கும் மெட்ராஸ் ரெஜிமென்ட் சென்டர் மாணவர் விடுதிக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) நன்கொடையாக வழங்கப்பட்டது.




# அகிலம் போற்றிடும் ஆசிய விளையாட்டுப் போட்டிகள்

முப்பத்தொரு ஆண்டுகளுக்கு முன், ஆசியாவுக்கு எனத் தனி ஒலிம்பிக் போட்டிகள் என்ற கருத்து முதன் முதலாக வெளிவந்தது. இந்தக் கருத்தினை வெளியிட்டவர் பேராசிரியர் ஜி. டி. சோந்தி என்ற இந்தியர் ஆவார்.

இந்தியர் ஒருவர் எடுத்துக் கொண்ட முயற்சியின் அடிப்படையில் உருவெடுத்த விளையாட்டுப் போட்டிகள் என்ற காரணத்தால், முதல் ஆசிய விளையாட்டுப் பந்தயங்கள் 1951ஆம் ஆண்டு டில்லியிலேயே துவங்கின.

இந்தியாவின் முதல் தலைமை அமைச்சர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தான், முதல் ஆசிய போட்டிகளைத்தொடங்கி வைத்தார்.

முப்பத்தொருஆண்டுகளுக்குப் பின்னர், 1982, நவம்பர் 19ஆம் நாளன்று 9வது ஆசிய விளையாட்டுப் போட்டி புதுடில்லியில் தொடங்கியது.

முப்பத்தோர் ஆண்டுகள், எட்டு ஆசிய விளையாட்டுப் பந்தயங்கள் உருண்டோடி விட்டன. மீண்டும் இந்த ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நம்மிடம் ஒப்படைக்கப் பட்டன. முதல் ஆசிய விளையாட்டுப் பந்தயம் டில்லியில் 1950ஆம் ஆண்டில் தொடங்குவதாகத்தான் (இலண்டன் மாநகரத்தில் 1948ஆம் ஆண்டில் நடந்த உலக ஒலிம்பிக் பந்தயத்திற்கு வந்திருந்த ஆசிய நாடுகளின் பிரதிநிதிகளை அழைத்து பேராசிரியர் டாக்டர் சோந்தி நடத்திய மாநாட்டில்) முடிவு செய்யப்பட்டது.

ஆனால், ஒரு கண்டம் தழுவிய விளையாட்டுப் போட்டிக்கான ஏற்பாடுகள் செய்வதற்குக் காலம் போதாத ஒரே காரணத்தால் முதல் ஆசியவிளையாட்டுப்போட்டிகளை டில்லியில் 1951ஆம் ஆண் சற்றுத் தள்ளி நடத்த அனுமதி வழங்கப்பட்டது. முதல் போட்டியைச் சற்றே தள்ளி வைக்க அவகாசம் தரப்பட்டதே தவிர தொடர்ந்துவரும் போட்டிகள் 1954, 1958, 1962 என்ற அடிப்படையில் நடத்தப்படும் என்றே முடிவு செய்யப்பட்டது.

அந்த அடிப்படையில் தான் 1954 முதல் 1982 வரை ஆசிய ஒலிம்பிக் போட்டிகள் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற்றன.

1954 மணிலா (பிலிப்பைன்ஸ்)
1958 டோக்கியோ (ஜப்பான்)
1962 ஜகார்த்தா (இந்தோனேசியா)
1966 பாங்காக் (தாய்லாந்து)
1970 பாங்காக் (தாய்லாந்து) இரண்டாவது தடவை
1974 பாங்காக் (தாய்லாந்து) மூன்றாவது தடவை
1978 டெக்ரான் (ஈரான்)
1982 புதுடில்லி (இந்தியா)

1951ஆம் ஆண்டில் நடத்திய முதல் ஆசிய விளையாட்டுப் பந்தயம், கீழ்க்கண்ட ஐந்தே ஆட்டங்களில்தான் போட்டிகள் நடத்தியது.

கூடைப்பந்து, சைக்கிள் பந்தயங்கள், கால்பந்து, நீச்சல் போட்டிகள், தடகளப் போட்டிகள் அவையாகும்.

புதுடில்லியில் நவம்பர் 19ஆம் நாள் தொடங்கி டிசம்பர் 4ஆம் நாள் முடிய நடைபெற்ற ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டியில், 33 நாடுகளைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் அதிக



ளயாட்டு வீரர்களும்
ர்களும் பங்கேற்றனர்.
ல் ஆசிய விளை
பாட்டிக்காக 17 விளை
ரங்குகள் அமைக்கப்

, தூரம் தாண்டுதல்,
ாவுதல் போன்ற அத லெட்டிக் போட்டிகள் தவிர 21 விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இவற்றில் குதிரைகள் மீது சவாரி செய்தபடி சாகசங்கள் செய்யும் போட்டி, கைப்பந்து, படகுப் போட்டி ஆகியவை ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட போட்டிகளாகும்.

விளையாட்டு விழா தொடக்க நாள் நிகழ்ச்சியில் 33 நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் அணி வகுத்

## இந்தியா பெற்ற பதக்கங்கள்

ல்லியில் நடந்த 9-வது ளையாட்டுப் போட்டி ந்தியா மொத்தம் 57 ளைப் பெற்றது. இவற் ம்பாலான பதக்கங்கள் அதலடிக் நிகழ்ச்சிகள் மூலமே கிடைத்தன.

இந்தியாபெற்ற 13 தங்கப்பதக்கங்களில் 9பதக்கங்கள்அதலெடிக் கோல்ப், குதிரையேற்றம் ஆகியவற்றின் மூலம் கிடைத்தன.

இந்தியா எந்தந்த விளையாட்டுகளில் பதக்கங்களைப் பெற்றன என்ற விவரம் வருமாறு:-

அதலடிக்ஸ் :- தங்கம்-4, வெள்ளி 9, வெண்கலம்-8 மொத்தம் 21.

குத்துச்சண்டை:- தங்கம் 1 வெள்ளி-2, வெண்கலம்-3 மொத்தம்-6.

குதிரையேற்றம்:- தங்கம்-3, வெள்ளி-1, வெண்கலம்-1 மொத்தம்-5.

பூப்பந்து :- வெண்கலம்-5.

மல்யுத்தம் :- தங்கம் - 1, வெள்ளி - 1, வெண்கலம் - 2 மொத்தம் 4.

பாய்மரப் படகுப் போட்டி :- தங்கம்-1, வெள்ளி-1, வெண்கலம்-1 மொத்தம் 3.

கோல்ப்:- தங்கம்-2, வெள்ளி-1 மொத்தம் 3.

துப்பாக்கி சுடுதல்:- வெள்ளி-2 வெண்கலம்-1 மொத்தம் 3.

பளு தூக்குதல்:- வெண்கலம்-2 மொத்தம் 2.

ஹாக்கி:- (மகளிர்) தங்கம்-1.

ஹாக்கி:-(ஆண்கள்)வெள்ளி-1

நீர்ப்போலோ:- வெண்கலம்-1

டென்னீஸ்:- வெள்ளி-1.

துடுப்புப் படகுப் போட்டி:- வெண்கலம்-1.

## ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற தமிழ் வீரருக்கு ரூ. 50 ஆயிரம் பரிசு

**பு**து டில்லியில் நடைபெற்ற 9வது ஆசிய விளையாட்டுப் போட்டியில், 800 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில், தமிழ் நாட்டைச் சேர்ந்த வீரர் சார்லஸ் புரோமியோ (வயது 25) முதலாவதாக வந்து, தங்கப் பதக்கம் பெற்றார்.

இவர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இப்போது அவர் கல்கத்தாவில் உள்ள டாடா இரும்புத் தொழிற்சாலையில், விளையாட்டுத்துறை உதவி அதிகாரியாக வேலை பார்த்து வருகிறார்.

இவருக்கு ரூ. 50 ஆயிரம் ரொக்கப் பரிசு வழங்க, தமிழக அரசு முடிவு செய்துள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம் ஜி. ஆர் அவர்கள் ஆசிய விளையாட்டுப் போட்டியைப்பற்றிக் கூறுகையில், "ஆசிய விளையாட்டுப் போட்டியைக் காண டெல்லி சென்றிருந்தேன், தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் நிறைய வெற்றி பெறவில்லை. ஏன் பரிசு பெறவில்லை என்றால், அந்த அளவுக்குத் தங்களைத் தயார் செய்யவில்லை. இது குறித்து வேதனைப்படுகிறேன். சீனாவில் இருந்து வந்த 13-வயது குழந்தை முதல் பரிசு பெற்று அனைவரின் பாராட்டுதலைப் பெற்றது.

அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும், ஓரளவு வசதிகளை நாம் நம் நாட்டுக் குழந்தைகளுக்குச் செய்து தரவேண்டும் என்று தெரிவித்தார்.

குதிரையேற்ற வீரர்போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற இந்திய வீரர் டபேதார் ரகுபீர்சிங்



மாநிலங்களின் கலை-பண்பாட்டு நிகழ்ச்சிகள் காண்போரைக் கவர்ந்தன.

தொடக்கநாள் கலை நிகழ்ச்சியில் தமிழ்நாட்டுக் கலைக்குழுவினர் முதலிடம் பெற்றனர். கரக ஆட்டம், காவடி கலை நிகழ்ச்சிகள் அனைவரையும் கவர்ந்தன. இக் கலைக்குழுவில் 250 கலைஞர்கள் பங்கேற்றனர். இக் கலைக் குழுவினர் ஆசிய விளையாட்டுப் போட்டி நிறைவு நாளான டிசம்பர் 4ஆம் நாள் நடைபெற்ற கலைநிகழ்ச்சியிலும் பங்கேற்றனர்.

ஆசிய விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆர்வத்துடன் பார்த்தார்கள். வாலிபால் போட்டி நடந்த இந்திரபிரஸ்தம் அரங்குக்கு முதல்வர் சென்ற பொழுது இந்திய கைப்பந்துக் கழகத் தலைவர் திரு சிவந்தி ஆதித்தன், பூச்செண்டு கொடுத்து வரவேற்றார். புது டில்லியில் நடைபெற்ற ஆசியவிளையாட்டுப் போட்டியின் பல்வேறு நிகழ்ச்சிகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் ஆர்வத்துடன் பார்த்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறை மிகுந்த ஆர்வத்துடன் ஊக்குவித்து வரப்படுகிறது.

ஆசிய விளையாட்டுப் போட்டியின் விளைவாக இந்தியாவில் மேலும் விளையாட்டுகள் ஊக்குவிக்கப்படும் என்ற நம்பிக்கையும் இளைஞர்களிடையே ... வத்தையும் 9-வது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நம் ... உணர்த்தியுள்ளன.

அந்த நம்பிக்கை மேலும் வளர நமது மாநிலஅரசு உறுதுணையாக உள்ளது. தமிழ்நாட்டில் எதிர்காலத்தில் விளையாட்டுத்துறை சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை!.

தொகுப்பு: மாமூலன்
பி. வி. ஜி.





உடலை வளைத்துச் செய்து காட்டும் ஜிம்னாஸ்டிக்கில் தங்கப் பதக்கம் பெற்ற செள் யாங் யான்,

## அடுத்த போட்டி எங்கு நடக்கும்?

அடுத்த ஆசிய விளையாட்டு விழா தென்கொரியாவின் தலைநகரான சியோலில் 1986-ஆம் ஆண்டில் நடைபெறும்.

ஆசிய விளையாட்டுப் போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடப்பதாகும்.

சியோல் போட்டிக்கெனத் தென்கொரியா இப்பொழுதிருந்தே ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

சியோலில் தென் கொரியா 1986-ல் ஆசியப் போட்டியை நடத்தி முடித்து விட்டு 1988-ல் ஒலிம்பிக் விளையாட்டு விழாவையும் நடத்த இருக்கிறது.

1984-ஆம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டு விழா அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடக்க இருக்கிறது. இதனை அடுத்து 1988-ல் ஒலிம்பிக் விளையாட்டு விழா நடக்கும்.

இப்போது ஆசிய விளையாட்டு விழாவை நடத்தி முடித்துள்ள இந்தியா 1992-ல் நடத்த வேண்டிய ஒலிம்பிக் விளையாட்டு விழாவை நடத்த விரும்புகிறது.

சியோலில் 1986-ல் நடக்க இருக்கும் ஆசியப்போட்டி 10-வது ஆசிய விளையாட்டு விழாவாக இருக்கும்.

ஆசிய விளையாட்டு விழா இந்தியாவில் இருமுறை (1951-ஆம் ஆண்டு 1982-ஆம் ஆண்டு) நடந்துள்ளது.

தாய்லாந்தின் தலைநகரான பேங்காக்கில் மூன்று முறை நடந்துள்ளது.

பிலிப்பைன்ஸ், ஜப்பான், இந்தோனேஷியா ஈரான் ஆகிய நாடுகளில் ஒருமுறை நடந்துள்ளது.

தென்கொரியாவில் ஆசியப் போட்டி நடப்பது இதுவே முதல் தடவையாக இருக்கும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்…அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி


/MS(C)/PF-25